[குகாலயப் பிரசுரம் 11.

# தாஸனது ஆத்மாநுபவம்.

## 2-வது பாகம்

# அத்யாத்ம தர்மம்.

ஸ்ரீ குஹதாஸ் இயற்றியது.

AUTHOR OF

(1) அத்யாத்ம யோகம், (2) ஆத்மாநுஸந்தான க்ரமம், (3) ஸகுணத்யான க்ரமம், (4) ஸ்வர்ணகாந்தி, (5) Ragas of Tanjore, etc,

ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதியினது ஸ்ரீ முகம்,—ஸ்ரீ ரமண மஹரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ உபதேசங்கள்—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி முகவுரை—முதலியன அடங்கியது,


பிரசுரகர்த்தர்:— காரியதரிசி
"குஹாலயம்" சேங்காலிபுரம் P, O,
(தஞ்சாவூர் ஜில்லா)

விலை ரூ. 2—8] 1948 [தபால் சார்ஜ் தனி.



குஹதாஸ் (At 55)

**Born 10—5—1891,**

# அர்ப்பணம்.

ஸத்யம் ஞாநம் அநந்தம் பிரும்ம— ஆனந்த ரூபம் அம்ருதம் யத் விபாதி—சாந்தம் சிவம் அத்வைதம்—என உபநிஷத்துகளில் வர்ணிக்கப்பட்டுள்ள ஓங்காரப்பொருளை—கர்மா பக்தி ஞாந யோக வாயிலாகப் பெற்றுள்ள—ஸமஸ்த ஜீவன்களும் இக்கூடுள்ள போதே அப்பிரணவப் பொருளை அடைந்து ரமித்து லயித்து கலந்து மகிழ—உள்ளிலும் வெளியிலும் பிரார்த்திக்கின்ற—சாந்தமுடன் தீரமுடன் உபதேசிக்கின்ற—ஹிமாலயத்தின் கண்ணுள்ள ஹ்ருஷீகேசம் ஆனந்த குடீரத்தில் ஸதானந்த பரிதராக ஜீவன் முக்ததசையுடன் வஸிக்கின்ற—மஹா கர்த்தா மஹா போக்தா மஹா த்யாகி மஹா யோகி ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதீ பாதகமலத்தில்—அம்மஹானது 25—வது ஆண்டு ஸந்யாஸ வெள்ளித் திருவிழா (Sanyas Silver Jubilee on 8th September '48) ஞாபகார்த்தம்—இச்சிறிய நூலை ஹ்ருதய பூர்வகமான நமஸ்காரங்களுடன் தாஸன் ஸமர்ப்பிக்கின்றனன்.

குஹதாஸ்.

ஸ்ரீ:

||ஸ்ரீ சந்த்ர மௌளீச்வர.||

ஸ்வஸ்தி ஸ்ரீமத்.......ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதை:...நாராயண ஸ்ம்ருதி:||

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்துக்கு அத்யந்தப்பிரிய சிஷ்யராயும், தஞ்சை ஜில்லா சேங்காலிபுறம் கிராமவாஸியுமான குகதாஸ் நடராஜ சர்மாவுக்கு ஸர்வ அபீஷ்டங்களும் ஸித்திக்கும் பொருட்டு நாராயண ஸ்மரணம் செய்யப் படுகின்றது.

தங்களால் எழுதப்பட்டிருக்கிற "தாஸனது ஆத்மாநுபவம், பஜனை மார்க்கம், நாரத பக்தி ஸூத்ர மொழி பெயர்ப்பு" இந்த மூன்று கிரந்தங்களும் ஸரளமான பதவாக்கியங்கள் உள்ளதாகவும், அநாயாஸமாக ஞானத்தைப் போதிப்பதாகவும், முறையே பிரபஞ்ச அஸாரத்தன்மையையும், ஆத்ம தத்வத்தையும் தெரிவிப்பதாகவும், ஸந்தர்ப்பங்களுக்கு அநுகுணமான பாக்களுடன் கூடிய பஜனை மார்க்கத்தை அறிவிப்பதாகவும், ஸர்வேச்வரனது அநுக்கிரஹத்தை அடையும் பொருட்டு ஸுலப சாதனமான அங்கங்களுடன் கூடிய பக்தி ஸ்வரூபம் முதலியவைகளை ஸ்வாநுபவ பர்யந்தம் பிரகாசப்படுத்துகிற

தாகவும் இருப்பதைப் பார்க்கவும், தங்கள் லோகோபகாரமுயற்சியை ஆலோசிக்கவும் நிரம்பவும் நாம் சந்தோஷிக்கிறோம்.

இந்தப் பிரகாரம் உத்ஸாகத்துடன் லோகோபகாரமாகப் பிரவர்த்திக்கும் தங்களுக்கு ஸர்வேச்வரனான ஸ்ரீ சந்திரமௌளீச்வரன் சிரேயஸ் ஸந்ததிகளேயும், ஸர்வ ஜனோபகாரமான தங்கள் கிரந்தங்கள் நிர்களமான பிரசாரத்தை அடையும்படியும் அநுக்கிரகிக்கட்டும் என ஆசீர்வதிக்கிறேன்.

முகாம்: ஸ்ரீ காசி
பாவ-ஹூ மார்கழி-மீ
சுத்த பௌர்ணமீ
20—12—1934.

நாராயண ஸ்மிருதி:

# ஸ்ரீ ரமண உபதேசபஞ்ச ரத்நம்

1. இந்த நான் எங்கு உதிக்கிறதெனத் தேடு
கிறவனுக்கு அகந்தை அழிவுறும். (இஃதே)
ஆத்ம விசாரணை.— உபதேச ஸாரம்.

2. நானென் றெழுமிட மேதென நாடவுண்
ஞான்றலை சாயுமென் றுந்தீபற
ஞானவி சாரமி துந்தீபற.—உபதேச
[வுந்தியார்

3. எழும்பு மகந்தை யெழுமிடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி—
[முழுகுதல் போற்
கூர்ந்தமதி யார்பேச்சு மூச்சடக்கிக்
[கொண்டுள்ளே
யாழ்ந்தறிய வேண்டுமறி.—
[உள்ள துநாற்பது.

4. ஆத்மா போல் பிரகாசிக்கும் அகங்காரம்
எப்பொழுது ஆத்மாவிலடங்குமோ அப்
பொழுது ஸத்யஸ்வரூபமான ஆத்மா ஒன்றே
எங்கும் நிறைந்ததாய் மிகுந்திருக்கும்.—
ரமணகீதை

5. சுபாவமாக ஆத்மாவில் நிலைபெற்றவன் வேறான மார்க்கத்தைத் தேடான். தனக்கு ஆத்மாவில் நிலை உண்டாகிறதே எல்லாச் சக்திகளுடைய கூட்டம். —ரமணகீதை

[குறிப்பு:—சென்ற 1935-ஆம் மார்ச்சு-மீ 18-யில் 'தாஸனது ஆத்மாநுபவம்' கிரந்தம் ஸ்ரீ ரமண மகரிஷியினால், கடாக்ஷிக்கப்பட்டது. மேலும் இக்கிரந்தத்தில் இவ்வுபதேசங்களைச் சேர்க்கும்படி அநுக்கிரகித்தார்.]

# ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதீ அவர்களினது ஆத்ம பஞ்சகம்.

ஆத்மா ஐந்துவிதமென்று சொல்லப்படு கிறது. அதாவது (1) க்ரியாத்மா (2) மான ஸாத்மா (3) ஞானாத்மா (4) மஹாத்மா (5) சாந்தாத்மா என்று. வித்யா குருக்களாகிய ஸ்ரீ ஸ்ரீஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்களையும், ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளவர்களையும் நமஸ்கரித்து இவ்வைந் துவித ஆத்மாக்களின் லக்ஷணங்களை தனித் தனியாக ஸங்கிரஹமாக உரைக்கிறேன்.

1. வாக் முதலிய இந்திரிய ஸமூஹத்தில் "எனது" என்று அபிமானம் வைத்தும், தன்னி டத்தில் வெகு திருடமாக கர்த்திருத்வ புத்தி யை வைத்தும், பலவிதமாயுள்ள வைதிக லௌ கிக கார்யங்களில் யத்தினமுடையவனாகவும், விஷய லோக்கமுள்ளவனாகவும், கர்த்தாவாகவும் எவன் புலப்படுகிறானோ அவனையே "க்ரியாத் மா" என்று அறிக.

2. "மனஸினுள் வாக்கையடக்கு" என்ற வேத வாக்யத்தில் அதிதீவிரமான சிரத்தையிருந்து, விதிப்படி கிரமமாக அந்தக் காணத்தை நன்முக சுத்தி செய்த பிறகு, தம (துமஃ)த் தோடு கூட ஸகல இந்திரியங்களும் சாந்தமாகி, பாஹ்யகரணங்களும் நிக்கிரஹம் செய்யப்பட்டு, தனித்த மனஸில் "போக்தா" வாகத் தோன்று பவனை "மானஸாத்மா" என்று அறிக.

3. பிறகு மானஸாத்மாவிடத்தில் அவித்யையினுலேற்பட்ட "தான்" என்ற அபிமானமும் புத்தி பலத்தினுல் தெளிவானதும் திருடமானதுமான ஞானத்தினுல் படிப்படியாய் நாசத்தையடைந்து, ஞானப்பெருக்கால் மானஸாத்மாவும் விலக்கப்பட்டபோது ஸவிசேஷமாயுள்ள அஹங்காரமாக மாத்திரம் விளங்கும் ஆத்மாவே "ஞானத்மா"வாகும்.

4. ஸவிசேஷத்தன்மையிருப்பதால் ஞானத்மாவிலும் தோஷத்தைக் கண்டு திருசியத்திற்கு அப்பால் நிர்குணமாயும் அதிஸ்திரமாயுமுள்ள தன் ஆத்மாவின் ஸவிசேஷத்தன்மை முதலிய யாவற்றையும் சித்தில் அடக்கி "நான் அகண்டன்" என்ற ஓர் எண்ணம் மாத்திரம் மிஞ்சினதினுல் ஸகுணனுகத் தோன்றுபவனே "மஹாத்மா" ஆவன்.

5. கடைசியில் அந்த ஸமஷ்டி அஹங்காரமும் நீங்க ஸகல பதார்த்தங்களிலும் ஊடுருவிச் சென்றதாய் நித்யமாய் ஆனந்தமாய் சித்தாய் ஸர்வோத்க்ருஷ்டமாய் இரண்டற்றதாய் ஸூக்ஷ்மமாய் அகண்டமாய் எல்லாக் கோசங்களினுடைய சேஷ்டையும் அடங்கிய நிலையில் குணம், நாமம், ரூபம், இவையற்றதாய், ஸர்வ வியாபகமாய், அதிஷ்டானமாய் மாத்திரம் இருக்கும் ஆத்மாவே "சாந்தாத்மா" வாக விளங்கும்.

[குறிப்பு:—சென்ற 1935-ஞு ஜூன் மீ 20உயில் 'தாஸனுது ஆத்மாநுபவம்' கிரந்தம் ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்களால் கடாக்ஷிக்கப்பட்டது. மேலும் இக்கிரந்தத்தில் தன்னுலியற்றப்பட்ட மேற்கண்ட ஆத்ம பஞ்சகத்தைச் சேர்க்கும்படி அநுக்கிரகித்தார். சோதர ஜேயர்களுக்காகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கக் கேட்டுக் கொண்டபடி அம்மகானுலேயே இப்பஞ்சகம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.]

# முகவுரை

## அத்யாத்ம தர்மம்

தெய்வ வொளிதனையே தேடு பிறவெல்லாம்
கைகழுவுங் காலத்திற் காண்.

உலகில் மனிதன் எவ்வளவு செல்வமும் செல்வாக்கும் பெற்றாலும் மனத்தில் அமைதி காண்பதில்லை. மனதையும் உலகையும் கடந்த ஒரு பொருள் உள்ளது. அதை ஞானி நான் என்கிறான். யோகி சுத்தான்மா என்கிறான். பக்தன் கடவுள் என்கிறான். இந்தப் பொருள் உண்மை அறிவு இன்பம் அருள் நிறைந்தது. இந்தப் பொருளை தியான மோன சமாதிகளால் உள்ளே அறிவதே இன்பமாகும். அந்த இன்பமே துன்பத்தை ஒழிக்கும்; அமைதி யளிக்கும். இந்த இன்பத்தைப்பெற கீதை, உபநிஷத்து, யோக சித்தி, பதஞ்சலி யோக சூத்

திரம், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய எத்தனையோ அருள் நூல்கள் உள்ளன.

இச் சிறு நூலில் ஸ்ரீ குஹதாஸர் தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அன்பர்கள் படித்துப் பயன் பெறுக.

நேசம் பதிந்துள்ளே நின்றுருகி நெஞ்சாரப்
பேசினாற் பேசும் பிரான்.

"புதுயுக நிலையம்"
புதுச்சேரி.
11—6—48

சுத்தானந்த பாரதி.

|| ओं श्री गुरवे नमः ||

## தாஸனது முன்னுரை.

ஸோதர ஸோதரிகளே! தாஸனது முன்னுரை சற்று விரிவாக தாஸனது ஆத்மானுபவம் 1—வது பாகம் அத்யாத்ம யாத்திரையில் வந்துள்ளதினால் இங்கு சுருக்கமாக வரைகின்றோம். தாஸனது ஆத்மானுபவம் மூன்று பாகங்களும் சென்ற 1933—வது ஆண்டில் வரையப்பட்டுள்ளன. இம் மூன்று பாகங்களினது கைப்பிரதிகளும் காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமண மஹரிஷி, ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதீ முதலிய மஹான்களினால் ஹ்ருதயமுடன் அனுக்ரஹிக்கப்பட்டுள்ளன. முதல் பாகம் அத்யாத்ம யாத்திரை சென்ற 1939—வது வருஷம் ஜனவரி மாதத்தில் பகவான் கிருபையினாலும் பக்தர்களினது அன்பினாலும் பக்த உலகின் கண் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற இரு பாகங்களையும் (அத்யாத்ம தர்மம், அத்யாத்ம மாலா) அவ்வருஷமே பிரசுரம் செய்ய தாஸனுக்கு ஆவலுண்டு. பல விதத் துவந்துவங்கள் பலவிதமாக மறைத்துள்ளதினால் இதுகாறும் அவைகளை வெளியிட

இயலவில்லை. மேலும் சென்ற வருஷம் அவ்விரு பாகங்களையும் அச்சிடத் தீவிரப் பிரயாசை எடுக்கப்பட்டது. மாக்ஷிமை தங்கிய கவர்மெண்டார் அவ்விரு பாகங்களை அச்சிடவும், தேவையுள்ள கடுதாசுகளை வாங்கிக்கொள்ளவும் உத்திரவு கொடுத்தார்கள். ஆனாலும் 'மறுத்தல்' வியாதியும், 'கறுப்புச் சந்தைப்' பேயும் தேசமெங்கும் சில காலமாகத் தாண்டவமாடுவதினால் சென்ற வருஷம் அச்சிடமுடியவில்லை. 'ச்ரேயாம்ஸி பஹு விக்நாநி" (நற்காரியங்களுக்குப் பலவித இடையூறுகள்) போலும். கூட தாஸன் விரிந்த உலகுக்குப் பூர்ணத் தொண்டு ஆற்றும் காலம் நெருங்கவில்லை போலும்.

பகவான் கிருபையினாலும், பக்தர்களினது அன்பினாலும் 2—வது பாகம் அத்யாத்ம தர்மத்தை இவ்வாண்டில் (1948. ஆகஸ்டு) ஆஸ்தீக உலகின் கண் பிரசுரித்து வெளியிட்டுள்ளோம். 1938—வது ஆண்டில் வரையப்பட்டுள்ள இந்நூலில் சில விஷயங்கள் மாத்திரம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமுகம், ஸ்ரீரமண மஹரிஷி, ஸ்ரீராமாநந்த ஸரஸ்வதீ உபதேச மொழிகள் 1—வது பாகத்தில் தேவநாகர லிபியிலும், தமிழ் மொழி பெயர்ப்புடனும் உள்ளன. இவ்விரண்டாவது

பாகத்தில் மொழி பெயர்ப்பை மாத்திரம் பிர சுரித்துள்ளோம்.

இந்நூலின் கண் பதிந்துள்ள அத்யாத்ம தர்மங்களை ஜீவ யாத்திரீகர்கள் 'அநுபவக்கண் ணாடி' மூலமாக அறிந்து உணர்ந்து ஆனந்தத் தைப் பெற பரம்பொருளைத் தாஸன் ஹ்ருதய முடன் பிரார்த்திக்கின்றனன்.

இச்சிறிய நூலை அநுக்ரஹித்து அநுபவங்கள் நிறைந்த ஸ்ரீமுகம் அருளிய காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ, உபதேசங்கள் அருளிய ஸ்ரீ ரமண மஹரிஷி, ஸ்ரீராமானந்த ஸரஸ்வதீ, முகவுரை அருளியயோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி—இம்ம ஹான்களினது பாததூளிகளில் தாஸன் உடல் பொருள், ஆவிகளை ஹ்ருதய பூர்வகமான நமஸ் காரங்களுடன் பதிப்பிக்கின்றனன். கூட, இந் நூலை அச்சிடவும், தேவையுள்ள கடுதாசுகளை வாங்கவும் அன்புடன் உத்திரவு கொடுத்த மாக்ஷிமை தங்கிய கவர்மெண்டாருக்கும், இந் நூலை திருப்தியுடன் அச்சிட்டுக் கொடுத்த கும்பகோணம் ஸ்ரீ ஜனார்தந பிரஸ் மானேஜர் ஸ்ரீ S. கல்யாண ஸுந்தரமய்யருக்கும் தாஸன் மனப்பூர்வ வந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றனன்.

இக்கிரந்த வாயிலாகக் கிடைக்கும் வருமானத்துகை அத்யாத்ம யோகம், பக்திரஸம் ததும்பிய ஸங்கீதம், பஜனை, குஹாலய ஆச்ரம நிர்மாணம் முதலிய ஸத்விஷயங்களில் பகவதர்ப்பணத்துடன் விநியோகிக்கப்படும். ஸோதர— ஸோதரிகள் யாவரும் தாஸனது பிரார்த்தனையை மனமுடன் ஆதரிக்க வேண்டப்படுகின்றனர்கள்.

தாஸனது ஆத்மானுபவம் 3-வது பாகம் அத்யாத்ம மாலா ஸ்ரீ ரமண மஹரிஷிக்கு அர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரிஷிகேசம் ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி அவர்களினது அனுக்ரஹ முகவுரையுடன் கூடிய ஜல்தியில் பக்த உலகின் கண் வெளிவரும்.

எல்லாம் பகவான் செயல்.

॥ஓம் சாந்தி:। ஓம் சாந்தி:। ஓம் சாந்தி:॥

"குஹாலயம்"
சேங்காலிபுறம் P. O.
(தஞ்சாவூர் ஜில்லா)
5—8—1948. } குஹதாஸ்.

## அநுஸந்தான மொழிகள்.

1. நிர்குண அர்ப்பணம். எல்லாம் 'ஓம்—தத்-ஸத்' என உரைக்கப்படுகின்ற பிரும்மத்துக்கு அர்ப்பணமாகட்டும்! 'ஓம்-தத்-ஸத்' பிரும்மணே நம:। ஓம் ஸ்ரீ குரவே நம:॥

॥ஓம் சாந்தி:। ஓம் சாந்தி:। ஓம் சாந்தி:॥

2. ஸகுண பிரார்த்தனை. பிரணவப் பொருளான கணபதியையும், ஷண்முகனையும், பரமேச்வரனையும், மஹாலக்ஷ்மியையும், ஸரஸ்வதியையும், அவ்விதமே குருவையும், அவ்விதமே வேதங்களையும் ஸமஸ்த ஸித்திகளின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். [குஹதாஸ்]

3. நிர்குண பிரார்த்தனை. சிந்தனைக்கு எட்டாததும், 'இவ்விதம்' என்கிற ரூபமில்லாததும், (ஸத்வம், ரஜஸ், தமஸ் – மூவகையான) குணங்கள் அற்றதும், (ஆனாலும்) ஆத்மாவின்கண் குணமுள்ளதும், எல்லா உலகங்களுக்கும் ஆதார மூர்த்தியாக இருப்பதுமான பிரும்மத்தை நமஸ்கரிக்கின்றேன். [உபநிஷத்]

4. உண்மைக் கோயில். சரீரம் தேவாலயமென உரைக்கப்படுகின்றது. அதன்கண்

அமர்ந்துள்ள ஜீவன் ஸனாதன தேவனாவான். அஞ்ஞான நிர்மால்ய வஸ்துக்களைத் தள்ளு. ஸோஹம் (நான் அவனே—அவன் நானே) பாவத்துடன் (ஆந்தரீக) பூஜை செய்.

[உபநிஷத்]

5. ஆத்ம பூஜை. ஹ்ருதயத்தை நிர்மலமாகச் சுத்திசெய். அழிவற்ற (பிரணவ) பொருளை தியானம் செய். 'எல்லாம் நானே' என (உள்ளில்) உணர். எல்லையற்ற ஆனந்தத்தை அடை. [உபநிஷத்]

6. ஜீவாத்ம ஐக்யம் (ஜனங்கள்) சாஸ்திரங்களைப் பயிலட்டும். தேவர்களைக் குறித்து யாகங்களைச் செய்யட்டும். நற்கர்மாக்களைச் செய்யட்டும். தேவதைகளைப் போற்றட்டும். (இவைகளினால்) நூறு பிரும்மாக்களினது முடிவு காலத்திலும்—ஆத்ம ஐக்ய உணர்வினால் அல்லாது—மோக்ஷம் ஸித்திக்காது.

[ஸ்ரீ சங்கராச்சாரியார்]

7. அத்யாத்ம மார்க்கம். தீரத்தனத்துடன் கூடிய புத்தியினது உதவிகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஒழிவடை. மனதை ஆத்மாவின் கண் நன்கு பதி. கிஞ்சிற்றும் ஒன்றையும் சிந்தியாதே. [பகவத் கீதை]

8. அத்யாவசியங்கள். சிரத்தை, பக்தி, தியானம், யோகம்-இவைகள் மோக்ஷத்தில் இச்சையுள்ளவர்களின் முக்திக்குக் காரணங்களாகச் சுருதிகளில் கானம் செய்யப்படுகின்றன. எவர்கள் இவைகளில் நிலைக்கின்றனர்களோ, அவர்கள் அவித்யையினால் கற்பிக்கப்பட்ட சரீர பந்தங்களினின்று விடுபட்டு இஹத்திலேயே மோக்ஷத்தை அடைகின்றனர்கள்.

[ஸ்ரீ சங்கராச்சாரியார்]

9. குரு பக்தி. தனது ஜாதியினது கர்மாக்களைச் சரிவரச் செய்வதாலும், தபஸ்லினாலும் குருவைச் சந்தோஷிக்கச் செய்வதாலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், வைராக்யம்—இவைகள் (சிஷனது) மனத்தில் உதிக்கின்றன.... ஜீவன், பகவான், குரு-இம்மூவர்களும் பிரும்ம ஸம்பந்தம் பெற்றவர்களென்று உணர்கின்றவன் பந்தங்களுக்கு உட்படான்.

[வராக உபநிஷத்]

10. மாயையைத் தாண்டல். எவன் ஸங்கத்தைத் தியஜிக்கின்றானோ, எவன் மஹான்களை ஸேவிக்கின்றானோ, எவன் அஹங்காரம் இல்லாதவனாக ஆகின்றானோ, எவன் ஏகாந்த இடத்தை

விரும்புகின்றானோ, எவன் உலகப் பற்றை நிர்மூலம் செய்கின்றானோ,...எவன் கர்ம பலத்தைத் தியஜிக்கின்றானோ,...எவன் முக்கியமாக (பரமாத்மாவின் கண்) இடைவிடாதப் பிரேமையை அடைகின்றானோ அவன் (மாயையை) தாண்டுகின்றவன். லோகங்களையும் தாண்டுவிக்கின்றனன். [நாரத பக்தி ஸூத்திரம்.]

ஸமஸ்த உலகங்களும் க்ஷேமங்களை
அடையட்டும்.

## விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | அர்ப்பணம் | ... iii |
| 2. | ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமுகம் | ... iv |
| 3. | ஸ்ரீரமண உபதேச பஞ்ச ரத்னம் | ... vi |
| 4. | ஸ்ரீராமானந்த ஸரஸ்வதீயினது ஆத்ம பஞ்சகம் | ... viii |
| 5. | ஸ்ரீயோகி சுத்தானந்த பாரதி முகவுரை | ... xi |
| 6. | குஹ தாஸனது முன்னுரை | ... xiii |
| 7. | அநுஸந்தான மொழிகள் | ... xvii |
| 8. | பிழைத் திருத்தம் | ... xxiv |
| 1. | அத்யாத்மத் தந்தி | ... 1 |
| 2. | ஓங்காரப் பொருள் | ... 2 |
| 3. | உனது சொந்த இடம் | ... 3 |
| 4. | உனது பிறப்புரிமை | ... 4 |
| 5. | உனது அற்பத்தனம் | ... 5 |
| 6. | ஞாபகம் இருக்க | ... 6 |
| 7. | காலம் போக்குவது | ... 8 |
| 8. | யம நியமங்கள் | ... ,, |
| 9. | சில வரிகள் | ... 10 |
| 10. | ஷை | ... ,, |
| 11. | சரீரம் | ... 11 |
| 12. | சரீரப் பயிற்சி | ... 12 |
| 13. | ஆகாரம் | ... 15 |
| 14. | பிரும்மசரியம் | ... 18 |
| 15. | பிரும்மசரியம் | ... 21 |
| 16. | பாராயணம் | ... 22 |

17. சாஸ்திரப் படிப்பு .... 26
18. புராண அர்த்தம் (வெளியிடுவது) 31
19. தர்மம் .... 32
20. ஷை ... 39
21. ஷை ... ,,
22. ஷை ... 40
23. நற்குணங்கள் ... 41
24. ஸாது ஸங்கம் ... 47
25. கெட்ட ஸங்கம் ... 50
26. ஷை (ஜாக்கிருதை) ... 51
27. ஷை (அதி ஜாக்கிருதை ... 52
28. அஞ்ஞானி கூட்டம் ... ,,
29. ஒற்றுமையின்மை ... 53
30. கலிகால உபதேசம் .... 54
31. திருடன் யார்? ... 55
32. அஞ்ஞானிக்குப் புத்திமதி ... ,,
33. யாத்திரீகன் (ஜாக்கிருதை) ... ,,
34. ஷை (அசமரீயம்) ... 56
35. கெட்ட எண்ணம் .... 57
36. கெட்ட எண்ண ஆவி ... ,,
37. அநுபவிகளைத் தீண்டல் ... 58
38. அநுபவிகளைப் பின்பற்று ... ,,
39. ஆஞ்ஞா சக்ரம் ... 59
40. ஷை ... 60
41. குறிப்பு (விவாஹம் முதலியன) ... 61
42. விவாஹம் ... 64
43. விவாஹ தத்வம் ... 65
44 வம்சோற்பத்தி ... 66
45. தம்பதிகள் ... 67

46. ஷை ... 68
47. ஸம்ஸார ஸாகரம் ... 69
48 ஸம்ஸார இன்பம் ... 70
49. பார்யாள் (வேற்றுமை தம்பதிகள்) ,,
50. புண்யவதி ... ,,
51. உத்தமி ... 71
52. தர்மபத்நீ ... 72
53 பதிவ்ருதையாள் ... 73
54 ஸம்ஸார அரண்யம் ... 75
55 ஷை ... 76
56. ஷை ... 77
57. ஷை ... ,,
58. புருஷன் — மனைவி ... 78
59. சோதரிகளே! .... 79
60. ஸ்திரீகள் கொடியவர்களென ... ,,
61. ஸ்திரீகள் எவ்விதம் காலம் கழிக்க வேண்டும் ... 82
62 பதிவ்ருதை ... 82
63. பதிவ்ருதா தர்மம் ... 83
64. மனைவியைக் கவனி ... 84
65. ஸினிமா பார்ப்பது ... 85
66. ஷை ... 86
67. நல் ஜீவனம் அல்ல ... 87
68. வித்யை பக்தி அவசியம் ... 88
69. தியானமும், ஸ்திரீகளும் ... 91
70. தற்காலம் ... 92
1—வது பிரார்த்தனை (ஸம்ஸார நாடகம்) 94
2—வது பிரார்த்தனை (உலக க்ஷேமம்) 100
3—வது பிரார்த்தனை (முடிவுரை) 134

# பிழைத்திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 9 | அஸுரர்களை | அஸூரர்களை |
| 13 | 17 | ரிதிபதிகள் | நீதிபதிகள் |
| 42 | 16 | மதித் தியானத்தையும் | தியானத்தையும் |
| 43 | 13 | இன்பத்தி லிலையை | இன்பத்தி லில்லை |
| 47 | 6 | பிரயாயாசை | பிரயாசை |
| 62 | 9 | ச்வதேஜம் | ச்வேதஜம் |
| 67 | 23 | லோகப மாதாவான | லோக மாதாவான |
| 69 | 16 | ஸம்ஸார ரைகரம் | ஸம்ஸார ஸாகரம் |
| 79 | 5 | ெறுவீர்கள் | பெறுவீர்கள் |
| 86 | 7 | இருகின்ற தென்பதை | இருக்கிற தென்பதை |
| 87 | 18 | கவளிக்கும் | கவனிக்கும் |
| 90 | 21 | அறுகுணமான | அறுகுணமான |
| 110 | 13 | ஸமஸ்தா | ஸமஸ்தா: |
| 120 | 21 | அதிபட்டி | அதிபட்டினி |
| 129 | 12 | செய்யு | செய்யும் |
| 130 | 7 | ஆவியிதுன | ஆவியினது |

குறிப்பு:— ஆங்காங்கு அச்சிற் பதியாத ஒற்றுக்களைக் கூட்டிப் படிக்கவும். பிழைகளைத் திருத்திக்கொள்ளவும்,

# தாஸனது ஆத்மாநுபவம்.

## 2-வது பாகம்

## அத்யாத்ம தர்மம்.

1. <u>அத்யாத்மத் தந்தி:</u> சோதர-சோதரிகளே! இஃது எழுத்துத் தந்தி அல்ல, மானஸீகத் தந்தியுமல்ல, இவைகளைப் பார்க்கிலும் பற்பல மடங்கு சக்தி வாய்ந்தது—இந்த அத்யாத்மத் தந்தி. வியாபகம் விரிந்தது. முன் தந்திகள் குறிப்பிட்ட இடங்களுக்கு, குறிப்பிட்ட நபர்களுக்குத் தான், அதுவும் தாமதமாக, போய் சேரும். பின் தந்தியோவெனில் ஸகல உலகங்களுக்கும், ஸமஸ்த ஜீவன்களுக்கும் அதி விரைவில் போய் ஹ்ருதய மீது பதியும். இதற்குப் பகல்—இரவு என்பது கிடையாது. எக்காலும் எங்கும் பறக்கும். முன் தந்திகள் இன்ப—துன்பங்களை அறிவிக்கும். பின் தந்தி சாசுவத ஆனந்தத்தைக் குறிப்பிடும். அத்தந்தியினது சுருக்கத்தைத் தாஸன் ஹ்ருதய பூர்வகமாக பகவத் பக்தர்களுக்கு

அறிவிக்கின்றேன். தாஸன் ஓர் மூழியில் ஒடுங்குபவன். தாஸனது உள்ளில் ஒன்று ரஹஸ்யம், அதிரஹஸ்யம், அதிஸூக்ஷ்ம ரஹஸ்யம் (Ever-whispering) பேசுகின்றது.

2. ஓங்காரப் பொருள்: அந்த ஒன்று அது அல்ல, அவன் அல்ல, அவள் அல்ல. இம்மூன்றையும் பெற்றதாகவும், இவைகளுக்கு ஆதாரமாகவும், பெரும்பாலும் இவைகளில் சற்றும் பற்று அற்றதாகவும், இவைகளுக்கு அப்பால் உள்ளதாகவும் இருக்கின்றது. அந்த ஒன்றில் ஸத்யம், ஞாநம், ஆனந்தம், தேஜஸ், சாந்தம், ஸுந்தரம், மங்களம் முதலியன எக்காலும் குடிகொண்டுள்ளன. அந்த ஒன்று உள்—வெளி, கீழ்—மேல், ஸமீபம்—தூரம், எல்லாத் திக்குகள், எங்கும் வியாபித்துள்ளது. அந்த ஒன்று ஸகல ஜீவன்களினது ஹ்ருதய கமலத்தினது மத்தியை வாஸஸ்தானமாக உடையது. அந்த ஒன்று மிதமீறிய அன்புடன் எல்லா ஜீவன்களையும் "ஹே ஜீவா! நான் உன் ஹ்ருதய குகையினது மத்தியில் வஸிக்கின்றேன். உனது ஆத்ம ஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்றேன். உனது மனத்தினது உதவிகொண்டு உனது ஹ்ருதயத்தின்கண் பிரவேசி. அடிக்கடி அத்யாத்ம சிந்தனை

செய். அஃதில் ஆழ்ந்து மூழ்கு. உச்வாஸ—நிச்வாஸங்கள் (மூச்சினது போக்கு-வரவு) அற்று கேவல கும்பக நிலையில் இரு. அத்யாத்ம நிஷ்டையில் ஸதா குறியுள்ளவனாக இரு." என அறை கூவி அழைக்கின்றது. அந்த ஒன்றுக்குப் பல மதத்தினர்கள், பல மஹரிஷிகள், பல யோகிகள், பலபக்தர்கள் பலபெயர்களைத் தங்கள், தங்கள் மனோநிலைக் கொத்தவாறு சூட்டிவிட்டனர்கள். அந்த ஒன்றைப் பற்றித் தாஸன் அதி சுருக்கமாக இவ்விடம் அறிவித்தனன்: அந்த ஒன்று தாஸனைத்தட்டி எழுப்பி கீழ் குறிப்பிட்டுள்ள சிற்சில விஷயங்களையும், அத்யாத்ம தர்மங்களையும் அத்யாத்மத் தந்தி வாயிலாகச் சோதர ஜீவன்களுக்கு அறிவிக்க அடிக்கடித் தூண்டுகின்றது.

3. உனது சொந்த இடம்: ஓங்கார நகரத்தின் கண் உள்ள பிரும்மபுரி உனது சொந்த ஊராகும். தற்காலம் வஸிக்கும் கிராமத்தை அல்லது நகரத்தை உனது சொந்த ஊராகக் கூறாதே. முன் பிறப்புகளில் பல கிராமங்கள், பல நகரங்கள், காடு பல மலைகள் முதலிய பலஇடங்களில் பலபிறவிகளைஎடுத்து மடிந்துள்ளாய். இவைகள் போதுமே. இனி கிஞ்சிற்றும் தாமதமின்றி உனது சாசுவத, சொந்த

ஷரான பிரும்மபுரிக்குப் போகும் அத்யாத்ம வழியைப் பின்பற்று. இனி பலகிராம, பலநகரங்கள்முதலியவற்றில் பலபிறவிகளைஎடுக்கவேண்டுவதில்லை; மடியவேண்டுவதில்லை. பல பிறப்பு—இறப்புகளுக்கு அனுகுணமாகப் பல மாதா—பிதாக்களை நீ நெருங்கவேண்டுவதில்லை.

4. உனது பிறப்புரிமை ஆனந்தமாகும். இந்த சீதம்—உஷ்ணம், சுகம்—துக்கம், லாபம்—நஷ்டம், ஜனனம்—மரணம் முதலான பல விதத் துவந்துவங்களுக்கு அப்பால் உள்ளது. அந்த ஆனந்தம் உனது ஹ்ருதயத்தில் உள்ளது. அந்த ஆனந்தப் பொருளுக்குள் தான் சிவனது கைலாஸமும், விஷ்ணுவினது வைகுண்டமும், பிரும்மாவினது ஸத்யலோகமும், இந்திரனது ஸ்வர்க்கமும் இருக்கின்றன. இவ்வானந்தப் பொருளை சற்று சிந்தனை செய்தால் கூட துவந்துவங்களுக்கு அப்பாலுள்ள மோக்ஷம் இக்கூடுள்ள போதே அழையா விருந்தினமாக உன்னை நெருங்கும். ஸச்சிதானந்த ஸ்வரூபன் தான்—நீ. துவந்துவங்களுக்குச் சாக்ஷி பூதமாக இருப்பவன் — நீதான். ஸநாதனன் — நீயே. சற்றும் சலிப்பு இல்லாதவன்—நீ. ஸமஸ்த உலகங்களிலும், ஜீவன்களிடமும் உள் —

வெளிகளில் எக்காலும் நடைபெறுகின்ற எல்லா விஷயங்களிலும் ஸாக்ஷிஸ்வரூபனுக இருப்பவன்—நீதான். உனது உள்ளிலும் ஜ்யோதிஸ் வெளியிலும் ஜ்யோதிஸ் உள்ளது. உனது ஜ்யோதிஸ்ஸிலிருந்து தான் எல்லாத் தேஜஸ்ஸுகளும் பிரகாசத்தைப் பெற்றன. ஆத்ம தேஜஸ் உள்ளவன்— நீ. பரத்துக்கெல்லாம் பரன்—நீ தான். நீயே ப்ரும்மஸ்வரூபன். தத்—த்வம்—அஸி. ஆகையினுல் சாசுவத ஆநந்தம் உனது கூடப்பிறந்த வஸ்துவாகும்.

5. உனது அற்பத்தனம்: உனது பிறப்புரிமை ஸதா ஆனந்தமாக இருக்கும்போது ஹே ஜீவா! தோன்றிமறையும் (த்ருஷ்டம்) பலவிதச் சிற்றின்பங்கள் மீது பற்று ஏன் வைக்கின்ருய்? வெளி இன்பங்கள் சற்று நேரமாவது உனக்கு ஆனந்தம் கொடுக்கின்றனவா? ஒரு தம்படி மதிப்புள்ள (வெளி) இன்பம் பெற 191-தம்படிகள்கொண்ட துன்பங்களை ஏன் தேடுகின்ருய்? அழகு, கட்டுள்ள சரீர வாயிலாக, அதி துட்டுகள் (ரூபாய், அணு, பைஸா) மூலமாக, அகண்ட பூமி மூலமாக, பல ஆள் கட்டு மூலமாக, நாடா (Ribbon) பட்டம் மூலமாக, உயர்பதவி மூலமாக, மற்றும் பலவித

ஸம்பாத்யம் மூலமாக சாசுவத ஆனந்தம் அடைந்தவன் இப்பூவுலகில் ஒருவன், ஒருவள் உண்டா? சற்றுநேரம் உன் உள்ளில் ஆழ்ந்து, உணர்ந்து பார். இந்த அற்பத்தனமும், அஞ்ஞானமும் உன்னுள் குடிகொண்டது போதும். எழுந்து, விழித்து, உத்கிருஷ்டமானவைகளைப் பெற்று தோன்றி-மறையா ஆனந்தத்தை அடை. இதற்கு அனுகுணமாக ஸத்ஸங்கம், சிரத்தை, விடாமுயற்சி, வைராக்யம் முதலியவைகளைத் திடநம்பிக்கையுடன் நாடு.

6. <u>ஞாபகம் இருக்க</u>: அடியில் வரைகின்றவைகளைச் சார்தமுடன், பிரதி தினமும் அனுஷ்தானம் செய். (1) அதன் (பிரும்மம்) <u>ஆஞ்ஞை</u> இல்லாது ஓர் அணுவும் அசையாது. சென்றது, நடைபெறுவது, நடைபெறப் போவது முதலியன எல்லாம் அதன் உத்திரவே. "நான் புரட்டினேன். நீ நன்கு செய்தாய், அவன் கைக்காரன்...."—இவைகள் எல்லாம் பைத்தியக்காரர்களினது பேச்சாகும். (2) ஸர்வ சக்தி வாய்ந்த, ஸமஸ்த ஐச்வர்யங்கள் குடிகொண்ட, எங்கும் வியாபித்துள்ள <u>பகவானைத்</u> திடமாக நம்பு. த்வந்துவங்களைத் தாண்ட பலத்தை அனுக்ரஹிப்பான், தேவையான ஐச்வர்யங்களைப் பிறர்களை எதிர்பார்க்க

விடாது பொழிவான். தன்னுள் தன் பக்தனை தன்மயமாக ஆக்குவான்.

(3) ஹ்ருதயத்தை நன்கு சுத்தி செய். பகவானது ஸ்வரூபத்தையும், அனந்த கல்யாண குணங்களையும் உன்னுள் உணர்வாய். (4) ஸத்யமே ஸதா ஜயிக்கும். பொய் தோற்றங்கள், பொய் பேச்சுகள், பொய் நடவடிக்கைகள் பொய் மின்னல்கள் முதலியன பூர்ணமாகக் கொண்ட பொய்யர்களினது அழிவு நிச்சயம். தேஜஸ் முன்பு இருள் கூட்டம் ஓர் விநாடியும் நிற்காது. (5) சாந்தம் எந்நிலையிலும் தேவை. பகவான் அதி சாந்த ஸ்வரூபன். பறந்து விழுதல், படபடப்பு, துடிதுடிப்பு, அவஸரம், கோபம், தாபம் முதலிய தீயவைகளை நிர்மூலம் செய். எந்நிலையிலும், எக்காலும் ஏகாக்ர சித்தமுடன், சாந்தமுடன் பகவானை வழிபடு. பிரபஞ்சக் காரியங்களிலும் சாந்தம் அவச்யம். (6) குரு பாதத்தை ஆழ்ந்து பிடி. உனது அஞ்ஞானம் பறக்கும். உனது மும்மலங்கள் அழியும். ஸமஸ்த க்ஷேமங்களையும் அடையலாம்.

[குறிப்பு:— குஹாலய பஞ்சரத்னத்தைத் தழுவிப் பக்தர்களினது அநுஸந்தான நிமித்தம் மேற்கண்டவைகள் சற்று விவரிக்கப்பட்டன.]

7. காலம் போக்குவது: பக்த சிகாமணிகள் காலை, மாலைகளில் ஸமாதி-த்யான-ஜப யோகங்களில் ஒன்றை மனதைப் பின்பற்றி ஏகாக்ர சித்தமுடன், சாந்தமுடன், பகவதர்ப்பண முடன் ஆழ்ந்து அநுஷ்டிக்கட்டும். அக்காலத்தில் ப்ரபஞ்சத்தைச் சிறுகச்சிறுக முற்றிலும் மறந்து, சாஸ்திர-ஸூத்ரங்களைத் துறந்து, வெளியில் இறந்து, உள்ளில் உணர்ந்து, தீரமுடன், நம்பிக்கையுடன் ஜீவயாத்திரை செய்யட்டும். "தாஸோஹம், ஸோஹம், அஹம், ஓ...ம்" பாவனையைச் சிறந்த ஓர் ஆயுதமாகக் கைக்கொள்ளட்டும். நடுப்பகலில் பகவானைப் பூஜித்து, அர்ச்சிக்கட்டும். சாந்த காலத்தில் பகவத் குண, அநுபவ விஷயங்கள் நிறைந்த கிரந்தங்களை மனமுடன் பாராயணம் பண்ணட்டும். அகண்ட நாமத்தை வாய் திறந்து உரைக்கட்டும். இரவில் ஸம்பாஷணை, பஜனை முதலியவைகளை நன்கு கடைப்பிடிக்கட்டும். ஸர்வசக்தி வாய்ந்த பரம்பொருள், பரமாத்மா, பகவான் ஸமஸ்த ஜீவன்களுக்கும் இஹ-பர க்ஷேமங்களை வர்ஷிக்க எந்நிலையிலும், எக்காலும் பிரார்த்திக்கட்டும்.

8. யம, நியமங்கள்: ஐகாக்ரியம், த்யானம், ஸமாதி முதலியன பற்றி நமது

"அத்யாத்ம யோகம் அல்லது ஆத்மப் பயிற்சி", "தாஸனது ஆத்மாநுபவம்"—முதல் பாகம் அத்யாத்ம யாத்திரை—இவ்விரு நூல்களிலும் கூடிய வரையில் விரிவாக, அநுபவ ரீதியாக வரைந்துள்ளோம். 2-வது பாகமான அத்யாத்ம தர்மம், 3-வது பாகமான அத்யாத்ம மாலா—இவ்விரு நூல்களிலும் ஓங்கார நகரை நாடி, அத்வைதப் பொருளின் கண் ஸதா ரமித்து, அநாத்ம அஸுரர்களை அத்யாத்மப் போரில் வேரறுத்து, வென்று, வெற்றிக் கொடி நாட்டி உனது ஸ்வய ராஜ்யத்தை—இன்ப—துன்பங்கள் இல்லாது, ஈட்டி—துப்பாக்கிகளைப் பிடியாது, பீரங்கி வண்டிகளை (Machine Gun Motors) ஓட்டாது, அணுக்குண்டுகளை விசிறாது—பெற்று ஆனந்திக்கத் தேவையுள்ள யம, நியமாதி தர்மங்களை தாஸனது சித்விலாஸத்தில் உதிக்கின்றவாறு அறிவிப்போம். இந்த யம, நியமங்களை அற்ப (Minor things) விஷயங்களாக மதிக்க வேண்டாம். பல திவிலைகள் நிரம்பித் தான் பெரிய ஸமுத்திரம் உண்டானது. மேலும் நமது சரீரத்துக்கு கால், கைகள் முதலிய பல அங்கங்கள் தேவை உண்டு. ரதத்துக்கு அச்சு, சக்ரம் முதலிய பல உறுப்புகள் அவசியம். இவைகளைப் போல் அத்வைதப்

பொருளை இக்கூடுள்ளபோதே அடைந்து, ரமித்து, ஆனந்திக்க யம, நியமங்களான பல வித தர்மங்கள் அத்தியாவசியங்களாகும்.

9. <u>சிலவரிகள்:</u> இவ்விரு நூல்களும் (அத்யாத்மதர்மம்: அத்யாத்மமாலா) பல வித புஷ்பங்கள் நிறைந்த ஓர் புஷ்பச் செண்டு போலும், மாலை போலும் முறையே கூடிய வரையில் நன்கு தொடுக்கப் பட்டுள்ளன. பலவித தர்மங்கள் சுருக்கமாக இந்நூல்களில் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆகையினால் அநுபவங்கள் நிறைந்த கிரந்தங்களை ஏகாக்ர சித்தமுடன், பக்தியுடன் ஊடுருவிக் கவனித்துப் படிப்பது ஜீவயாத்திரையில் நிரம்பவும் உதவிசெய்யும்.

10. ஷி:' ஹேஜீவா! வயிறு வளர்க்கும் வித்யையைக் கற்க இரவு-பகல் நீ உறக்கம் கொள்ளுவதில்லை. நன்கு படிக்கின்றாய். நல்ல மார்க்குகளும் வாங்குகின்றாய். காதல் கதைகளை, கட்டுக்கதைகளை நிரம்பவும் அன்புடனும், இன்பமுடனும் நோக்குகின்றாய். இவ் வித்யையினாலும், இக்கதைகளினாலும் இது காறும் ஒருவனாவது, ஒருவளாவது இஹபர க்ஷேமங்களை அடைந்ததாகத் தெரியவில்லை. மனம் அடக்கும் வித்யையைக் கற்க, ஆத்ம

வித்யையை அப்பியசிக்க ஹே ஜீவா சோம்பல் படுகின்றாய். அநுபவ நூல்களை, உனது க்ஷேமத்தை அறிவிக்கும் நூல்களை மேலெழுந் தவாரியாகப் படிக்கின்றாய். பக்கம் பக்கமாக ஏடுகளைத் தள்ளுகின்றாய். இம்முறைகள் நல்லவைகள் அல்ல என்பதை ஞாபகத்தில்லை. அநுபவ நூல்களை ஆழ்ந்து படி. அவைகளில் பதிந்துள்ள விஷயங்களைச் சிரத்தையுடன், நம்பிக்கையுடன் பயிற்சி செய். இன்றிருந்து—நாளைப்போகும் மேல் உத்யோகஸ்தர்களை அற்ப உத்யோக நிமித்தம் கைகட்டி, ஸ்தோத்திரம் செய்துக் கெஞ்சிக் கொஞ்சிய காலம் போதும். சாசுவதரான உள் பகவானை வழிபடு. பொடி மட்டைக்கு நீ அழுதால் கூட அவன் ராஜ்யத்தைத் தான் அருளுவான். உன்னை ஆனந்தக் கடலில் நீராட்டுவான். தாயாக இருந்து உன்னை வளர்ப்பான். தகப்பனாக உன்னைச் சீர்திருத்துவான். பந்துவாக உன்னைக் கவனிப்பான். நண்பனாக உனக்கு உதவுவான். குருவாக உனக்குக் கற்பிப்பான். குபேரனாக உன் மீது பொழிவான். அதிகம் உரைப்பானேன். உனது எல்லாத் தேவைகளையும் அனுக்ரஹிப்பான்.

11. சரீரம்: இஃது ஆண்டவனது ஆலய

மாகும். இது ஒன்றே அதன் கண் அமர்ந்துள்ள ஜீவனின் சொத்து. மற்ற மண், பொன், பெண் முதலியன எல்லாம் நமக்குச் சாசுவதமல்ல. ஆகையால் ஆண்டவனது கோயிலை நிரம்பவும் ஜாக்கிருதையாகக் கார்க்கவேண்டும். பற்பல ஆகாரங்களையும், கொடிய நினைவுகளையும் அதில் நிறப்பக்கூடாது. இக்கோயிலில் வீற்றியுள்ள தேவனின் உதவியை நமது இக-பர க்ஷேமங்களுக்குப் பக்தி வாயிலாகப் பெறவேண்டும். பிறகே மறு தாயாரின் ஸ்தந்நியபானம் செய்யாத நிலை ஏற்படும்.

12. சரீரப் பயிற்சி: நமது சரீரம் மேற்கூறியுள்ளபடி ஓர் ஆலயமாகவும், அதன் கண் அமர்ந்துள்ள ஜீவன் ஸனாதன தேவனாகவும் அநுபவ நூல்களில் கோஷிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் இச்சரீரத்தில் ஸகல தேவர்களும் வசிப்பதாகவும், எல்லா உலகங்களும் நிலை பெற்றிருப்பதாகவும், சாஸ்திரங்களில் பறைசாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் இச்சரீரம் எல்லாத் தர்மங்களுக்கும் காரணமாக இருக்கிறதென்றும் அநுபவிகளால் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையினால் இச்சரீரமாகிய கோயிலை எல்லா விதங்களிலும் நிரம்பவும் சுத்தமாகக் காப்பாற்றவேண்டுவது யாத்தி

ரீகனது கடமை. பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுவதினால் ஹ்ருதய குகையில் குடி கொண்ட பரமாத்மா தனது அம்சமான ஜீவாத்மாவைத் திருப்தியுடன் பெரும் காந்தம் சிறிய ஊசியை ஸர்வசாதாரணமாக இழுப்பது போல் தன்னுள் அழைத்து, தனது மதிப்பிட வொண்ணாத அதிசயங்களை ஜீவயாத்திரையில் அடிக்கடிக் காண்பித்து, தைரியம் ஊட்டி, ஜீவனது அசுத்தங்களை அறவும் நீக்கி, நாளடை வில் 'நீ வேறெனாது-நான் வேறெனாது' என இரண்டறக் கலக்கச் செய்கிறது. அசுத்தி களுடன் இருப்போமானால் அஃது ஜீவன் விஷயமாக நிரம்பவும் கவலைகொள்ளுகிறது. 'தண்டனைகள் கொடுத்தால் அல்லாது இது (ஜீவன்) ஒழுங்குக்கு வராது' என எண்ணித் திருப்தி யில்லாது தனதம்சங்களான பிற நிதிபதிகள் (யமன், காலன், ம்ருத்யு முதலியவர் கள்,) வாயிலாகத் தண்டத்தைச் செலுத்து கிறது. ஆகையினாலே ஓர் பிடிச் சாம்பலுக்கும் உதவாத இச்சரீரத்தை ஓர் ஓடமாகக் கைக் கொண்டு இனிப் பிறப்பு—இறப்புகள் இல்லாத அக்கரையை ஜீவன் சேரவேண்டியிருக்கிறது. இதற்கு அனுகுணமான வழிகளை யாத்திரீகன் பின் பற்றவேண்டும்.

ஒன்று உரைத்து இவ்விஷயத்தை முடிப் போம். ஜீவயாத்திரையில் அனுதாபமுடன் ஈடுப ட்டிருக்கின்ற தனவான்கள் எக்காலத்திலும் கூடி யவரையில் தங்களது வேலைக்காரர்களினது உத வியையும், ஆழ்ந்த அநுபவிகளான ஆச்சார்யர் கள் தங்களது சிஷ்கர்களின் சுச்ரூஷையையும் எதிர்பாராது தங்கள் கார்யங்களைத் தாங்களே செய்து கொள்ளுவது நலம். யாத்திரீகனது ஆஸனம், வஸ்திரம், முக்கியமாக சரீரம் முதலியன மீது பிறர்களது அங்கம் படாமலி ருப்பது அவசியம். கூட சரீரம் சுத்தமானல் மனமும் சுத்தப்படும். சில வகையில் இவ்வி ரண்டிற்கும் ஒற்றுமை அதிகம். ஜீவயாத்தி ரையில் சரீரம், அதன் அங்கங்கள், மனம் முதலியன பலத்துடன் இருக்க மகரிஷிகளும் பகவானை மனதினல் பிரார்த்தித்து இருக்கி ருர்கள். சரீரத்தினுலும் இதற காலங்களில் பிரார்த்தனை தினம் பிரதி செய்து வருவதும் நலமாகும். அதற்கு அனுகுணமாக அநுபவி களுக்குப் பணிவிடை செய்வது, ஆலயப்பிர தக்ஷிணம், நந்தவனம் சீர்செய்வது முதலிய நற்கார்யங்களை அனுஷ்டிக்கவும்.

[குறிப்பு: 'சரீரப்பயிற்சி' விஷயமாக நமது 'அத்யாத்மயோகம்' 7-வது அத்யாயத்தில்

விரித்து உரைத்திருப்பதினால் இவ்விடம் சுருக்கமாக வரைந்தோம்.]

13. ஆகாரம்:

[குறிப்பு:— தாஸனால் வெளியிடப்பட்டுள்ள 'அத்யாத்மயோகம்' 9-வது அத்யாயம் பார்க்க. அதில் மித ஆகாரம், எந்த ஆகாரம் ஜீவயாத்திரீகனுக்குத் தேவை, எவ்விதம் ஆகாரத்தை உட்கொள்ளல், எப்போது பட்டினி அவசியம், பட்டினிக்கும் உபவாஸத்துக்கும் உள்ள வித்தியாசம் முதலியன பற்றி விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. சுருக்கமாக இவ்விடம் கூறுவதும் பொருந்தும்.]

ஜீவயாத்திரைக்குத் தேவையான உணவை உட்கொள்ளு. புண்ணிய தினங்கள் ஒன்றில் உபவாஸமிரு. அஃது வாரம் ஒருமுறை இருப்பது நலம். பகவத் விஷயமாக காலத்தைக் கழிக்கப் பிரியங் கொண்டு, ஆரம்பித்த தினம் முதற்கொண்டு ஒவ்வொரு வாரத்திலும் ஓர் இரவில் திராவக (கஞ்சி, பாயஸம் முதலியன) ரூபமாக உணவு எடுக்கவும். அன்று தினம் "ஜபம், தியானம், பாராயணம்" வாயிலாகப் பகவானை வழிபடவும். ஒருக்காலத்திலும்

அதிககாரம், புளிப்பு இவைகளைச் சேர்க்கவேண்டாம். எக்காலத்திலும் விசேஷமாக பழம், பால், குளிர்ந்த நீர் உட்கொள்ளுவது நலம். எந்த ஆகாரமும் எளிதில் ஜீர்ணமாகும்படி இருக்கட்டும். நாவின் ருசிக்கு ஒருக்காலும் இடம் கொடுக்காதே. எந்த ஆகாரமும் தொண்டை வரையில், அதாவது நான்கு அங்குலம் தான், ருசியைக் கொடுக்கின்றது. பிறகு அம்ருதமும் மலமாக மாறிவிடுகிறது. மயக்கம் தருகின்ற வஸ்துக்களும், திராவகங்களும் ஜீவயாத்திரீகனை யோகிக்கு விரோதிகள். போகிக்கு இவைகள் நெருங்கிய நண்பர்கள். போகத்தினால் எண்ணிக்கையில் அடங்காப் பிறப்புகள் சம்பவிக்கின்றன. கூட, பற்பல ஜீவன்களைச் சிருஷ்டனை செய்யத் தூண்டுகின்றன. யோகத்தினால் இனிப் பிறப்பு-இறப்பு-இல்லாமை சம்பவிக்கிறது. "தான் அநுபவித்து வரும் இக பரத்துன்பங்கள் போதும்; இனி ஜீவன்களை நாம் உற்பத்தி செய்யவேண்டாம். அவைகளைத் துவந்துவங்களுக்கு ஆளாக்கவேண்டாம்" என வருத்தமுற்றும், சிருஷ்டனையில் நடுக்கம் கொண்டும் ப்ரம்மசரியத்தை அவலம்பிக்கத் தூண்டுகிறது. போகி மூன்று காலமும் ரோகி இரண்டு காலமும், யோகி ஒரு காலமும் ஆகாரம் எடுப்பதைப் புத்திமான்கள்

அறிவார்கள். போஜனகாலத்தில், மௌனத்தை அவலம்பித்து, அகண்ட ப்ரம்மம் ஸூர்ய ரூபமாக ஹ்ருதயத்தில் வீற்றிருப்பதாகவும், அதற்கு ஒவ்வொருபிடியையும் ஹோமம் செய்வதாகவும், திரவப், பதார்த்தத்தை அபிஷேகம் செய்வதாகவும் ஓர்பாவனை இருக்கட்டும். இம்முறை பற்பல மனோ, சரீர வியாதிகளை நிர்மூலம் செய்யும். பகவத் பக்தியை விருத்தி செய்யும். இக்கூடுள்ளபோதே ஜீவன் முக்தனாக விருப்பங் கொண்டால் ருசியைக் கவனியாதும், பசியாகிற வியாதிக்கு ஔஷதமாக எண்ணியும் ஆகாரத்தை உட்கொள்ளு. வீட்டிலும் சரி, வெளி இடங்களிலும் சரி நெருங்கிய பந்து வர்க்கங்கள், நண்பர்கள் கோப தாபமுடன் இடும் அன்னத்தை உட்கொள்ளாதே. சரீர-மனோ வேதனைகள் வாட்டுகிற காலத்தில் விசேஷமாக உபவாஸம் இரு. தனிமையில் பகவானைப் பஜி. மாறினால் பலவித வியாதிகளுக்கு ஆளாக நேரிடும். பகவானை ஆராதிக்கும் நிமித்தம் சரீரத்துக்குப் போஷணை செய். ஜீவிப்பதே மோக்ஷமென எண்ணிச் சரீரத்தைப் பலவித ஆகாரங்களினாலும், பானங்களினாலும் நிரப்பாதே. ஓர்பிடிச் சாம்பலுக்கும் உதவாச் சரீரத்தை ஸாத்வீக முறையில் போஷித்து ஜீவயாத்திரீகன் மோக்ஷமார்க்கத்தை நாடவேண்டும். மோக்ஷ மார்க்கத்துக்கு அநுகுணமான

ஆகாரத்தையும், பானத்தையும் கவனமுடன் எடுப்பது யாத்திரீகனது கடமை.

14. ப்ரம்மசரியம்: [இது பற்றியும் நமது 'அத்யாத்மயோகம்' 8-வது அத்யாயத்தில் சிற்றறிவிற்கு எட்டியவாறு சிறிது கூறியுள்ளோம். இன்னும் கொஞ்சம் இக்கிரந்த வாயிலாக கூறுவோம்.]

சிற்றின்பக் கடலில் மூழ்கிச் சந்தோஷிப்பவர்கள் பேரின்ப சாகரமொன்று உண்டென்பதைக் கினவிலும் ஸ்மரிக்க முடியாது. பேரின்பம் ஒரு வகையாகும். சிற்றின்பம் பலவகையாகும். ஜபத்தியான ஸமாதிகளும், அவைகளுக்கு அனுகுணமான யம, நியமாதிகளும் தவிர்த்து மற்ற எல்லா விஷயங்களும் சற்றும் சந்தேகமின்றி சிற்றின்பங்களைச் சார்ந்தவைகள் தாமென்பதைச் சோதர நேயர்கள் மனதில் செவ்வையாகப் பதிப்பிக்க வேண்டும். அரிதுக் கரிதான மானிடப் பிறவியை ஜந்மாந்திரப் புண்யவசத்தால் எடுத்த எந்த ஜீவனுக்கும் 'தான் செய்வது எது நலம், எது கெடுதல்' என்பது நன்கு தெரியும். ஆனாலும் ஜீவன்கள் பெரும்பாலும் கெடுதல்களை நிவர்த்தித்து நலமானவைகளைக் கைக்கொள்ளச் சற்றும் மனதைச் செலுத்துவதில்லை. காரணம் ஜன்மாந்திரப் பாபக்

குவியல்களும், கொடிய கர்மாக்களும் ஒருபுறம் இருந்தாலும், மற்றொரு புறத்தில் கெட்ட சங்கமும்; பரஸ்பரம் ஸ்திரீ, பொருள், நாஸ்தீகன்-இவர்களினது சரித்திரங்களைப் பிரேமையுடன் சம்பாஷிப்பதும், பகவத் விஷயமான இதிகாச—புராணங்களையும், அனுபவிகள், பக்தர்கள் இவர்களது சரித்திரங்களையும், அநுபவங்களையும் படியாததும், கேட்காததும், எங்கும் நிறைந்த பகவான் பாத கமலத்தில் சித்தத்தை பதிப்பியாததும் தான் காரணங்களென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கெடுதல்களையே அடிக்கடி சிந்தித்து, நொந்து கொள்ளுவதினால் அவைகள் நிவர்த்தியாகாது. நல்லவைகளைப் பின்பற்றி, அறிந்து, நம்பி அநுஷ்டிப்பதே கொடியவைகளை அறுக்க மருந்தாகும். கெடுதல்கள் ஆதவனைக் கண்ட பனிபோல் அகன்று விடும்.

அதி சுகம் என நினைத்துச் சுகிக்கிற சிற்றின்பத்தை ஒருவாறு ஆராய்வோம். இஃது மோகம், காமம் முதலிய பல பெயர்களினால் அழைக்கப் படுகின்றது. இச்சிற்றின்பத்தை விடப் பலவானான உட் பகைவன் வேறொருவனுமில்லை. ஒரு விநாடி நேரத்தில் இன்ப

மளித்துப் பல மணிகள், நாட்கள், மாதங்கள், வருஷங்கள் கூட வெகு தாராளமாகத் துன்ப மளிக்கும் பிரபு காமன் ஆவான். இந்த ஆபா ஸம் பற்றி அதிகம் ஏன் விரிக்கவேண்டும்?

ப்ரம்மசர்யத்தினுல் வீர்யலாபம் ஏற் படுவதாக யோகக் கிரந்தங்களில் கோஷிக்கப் பட்டிருக்கின்றது. சரீரம், மனம், இந்திரியங் கள் முதலியவைகளுக்குப் பலம் உண்டாகவும், இதன் வாயிலாகப் பகவானை வழிபடவும் வீர்ய லாபம் அவசியமென யாத்திரீகர்களான சகல ஸ்திரீ—புருஷர்களும் நன்கு அறிவார்கள். இதை நாளடைவில் நன்கு விருத்தி செய்து கொண்டாலன்றி சதா காலமும் ப்ரம்மத்தின் கண் சித்தத்தைப் பதிப்பிக்க முடியாதென் பதை நேயர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

மித ஆகாரம் எடுப்பதும், காரங்களை விலக்குவதும் ப்ரம்மசர்யத்தை விருத்தி செய் யும். கூட ஆடவர்கள் ஸ்திரீகளின் சங்கத்தை யும், அவ்விதமே ஸ்திரீகள் ஆடவர்களின் சங்கத் தையும் அத்யாத்ம யாத்திரையில் ஓர் ஆழ்ந்த நிலை ஏற்படுகிறவரையில் தூரத்தில் வைக்க வேண்டும். பரஸ்பரம் படங்களை நோக்கு வதும் கெடுதல் தான். அடிக்கடி பரஸ்பர

சம்பாஷணையும் கொடியவை தாம். யாத்திரை யின்கண் ஓர் ஆழ்ந்த நிலையை எட்டிய பிறகு சோதர—சோதரி பாவம் பரஸ்பரம் நாளடை வில் ஏற்பட்டவுடன் உட்பகைவனுன கொடிய காமன் தானுக யாத்திரீகனிடம் லீவு பெற்று கொள்ளுவான். ஆகையால் அதிகம் தெரிவிக் கவேண்டிய தில்லை.

பூர்வ ஜன்மத் தாயார் இப்பிறவில் உனது மனைவியாகவும், இப்பிறவியிலுள்ள மனைவி வரப் போகிற பிறப்பில் உனது தாயாராகவும், இதைப் போலவே புத்திரன் பிதாவாகவும், பிதா புத் திரனுகவும் இருப்பதாக உபநிஷத்துகள் முன் னறிக்கை யிட்டிருப்பதால் எவ்விதம் சிற்றின்ப ஸாகரத்தில், நர ஜன்மங்கள் எடுத்தவர்கள், கைம்மாற்று-இன்பம் போடக் கூடுமென்பதைச், சற்று தனிமையில் யோஜிக்கவும். அக்தோ பரி தாபம்!

15. ஷி-: சிற்றின்பத்தை ஒருவாறு அடக்கிப் பகவானைப் பஜிக்கச் சக்தியில்லாது போனுல் ஒருவனுடன், ஒருவளுடன் முறையே ஸ்திரீ, புருஷன் பரஸ்பரம் தெய்வப் பிரார்த் தனையுடனும், சாஸ்திரத்தை அநுஸரித்தும், சற்றும் ஆடம்பரங்கள் இல்லாதும், விருதாச்

சிலவுகள் செய்யாதும் பாணிக்கிரஹணம் செய்து கொள்ளட்டும். தம்பதிகள் பகவதாராதனை மூலமாக நாளடைவில் இச் சிற்றின்பத்தை வேரறுக்கட்டும். பேரின்பம் பெற முயற்சிக்கட்டும். தம்பதிகளில் ஒருவர் தீவிரமாக ஜீவ யாத்திரையில் ஈடுபடாதிருந்தால், சிற்றின்பத்துக்கு அடிமையாக இருந்தால் அவருக்காக மற்றவர் பகவானைப் பிரார்த்திப்பது நலம். கண்டிப்பதினாலும், தானே நொந்து கொள்வதினாலும் பிரயோஜனம் ஏற்படாது. வெளி மருந்துகளினால் உட்பகைவனான காமனை விரட்ட முடியாது. பிரார்த்தனை யாகிற உள் மருந்தினால் காமன் அழிவான். பேரின்ப ஊற்றை உன் உள்ளில் உணர்வாய்.

16. பாராயணம் பிரதி தினமும் குறைந்தது மூன்று காலங்கள் உபநிஷத்துகள், பகவத் கீதை, யோககிரந்தங்கள், ராமாயணம், பாகவதம், மகா பாரதம் முதலான அநுபவ நூல்களில் சிலவற்றை மனதை ஒருமைப் படுத்திப் பாராயணம் செய்வது அவசியம். இஃது ஜீவ யாத்திரை காலத்தில் பரம் பொருளிடம் மனதைப் பதிப்பிக்கச் செய்கின்றது. யாத்திரை காலம் தவிர்த்து இதர காலங்களில் பாராயணம் செய்வது போதும். ஜாக்கிரிய நிலையில் உள்

ளவர்கள் ராமாயணம், பாகவதம், பாரதம் முத லான இதிகாஸ-புராணங்களையும், மற்றுமுள்ள பகவத் விஷயமான ஸ்தோத்திரங்களையும், ஸஹஸ்ரநாமங்களையும், தியான—ஸமாதி நிலை களில் உள்ளவர்கள் உபநிஷத்துகள், பகவத் கீதை, மற்றுமுள்ள கீதைகள், யோகக் கிரந் தங்கள் முதலான அநுபவ நூல்களையும் தங் களது ஜாக்கிரத, தியான, ஸமாதி காலங் களுக்குப் பிறகு ஊடுருவிப் பார்த்து வருவது நலம். முக்கியமாகத் தியானத்துக்குப் போகு முன்பு சுமார் ஒரு முகூர்த்தம் மேற் கூறப்பட் டுள்ள அநுபவக் கிரந்தங்களில் ஒன்றைத் தொ டர்ந்து ஏகாக்கிர சித்தமுடன் பாராயணம் செய்து வருவது யாத்திரை காலத்தில் யாத்தி ரீகனுக்குத் தைரியம் ஊட்டுவதை அநுபவத் தில் உணரலாம். கூட தியானத்தில் அமர்ந்த வுடனும், முடிந்தவுடனும், சில ஸ்தோத்திரங் களையும், அநுபவ வாக்யங்களையும் சுமார் 15. நிமிஷங்கள் ஓர் உணர்ச்சியுடன் பகவத் சந்நி தானத்தில் உரைப்பது மனதுக்கு நிரம்பவும் சாந்தியைக் கொடுக்கும்.

இவ்வாறே கிருஸ்துவ சகோதரர்கள் தங் களது வேத (Holy Bible) நூலையும், தங்க ளுக்குப் பிரியமுள்ள ஆழ்ந்த அநுபவிகளது

நூல்களையும், அவ்விதமே மகம்மதீய சோதரர்கள் தங்களது வேத (Holy Koran) நூலையும், மற்ற அநுபவ நூல்களையும், பௌத்த, ஜயின, ஸாரதுஷ்ட்ர சோதரர்கள் தங்களது மத நூல்களையும் அநுபவிகளது நூல்களையும் தங்கள், தங்களது யாத்திரை காலத்துக்குப் பிறகுள்ள காலங்களில் ஊடுருவிப் பார்த்து வருவது நலம். எல்லாச் சோதர-சோதரிகளும் இதற மதங்களிலும், கொள்கைகளிலும் வித்தியாசம், ஏற்றத்தாழ்வு முதலியவைகளைக் கணக்கிடத் தங்களது உத்தம புத்தியைப் பிரயோகிக்க வேண்டாம். இதற மதங்களினது, அநுபவிகளினது நூல்களைக் கூடிய வரையில் ஊடுருவிப் பார்த்து வருவது ஸம திருஷ்டியைக் கொடுக்கும். ஜீவ யாத்திரையில் ஸமதிருஷ்டி அவசியமன்றோ? ஓர் உத்தம பதிவ்ருதைக்குத் தனது புருஷனிடம் ஓர்வித பக்தியும், தனது பதியின் நெருங்கிய உறவினர்களிடம் வெறுப்பு சற்றும் இல்லாது வேறு விதப் பிரேமையும் இருப்பது ஸகஜம். அதைப் போல் உண்மையான, திட நம்பிக்கையுள்ள, தீவ்ர யாத்ரீகர்களுக்கு தங்களது மதம், கொள்கை இவைகளில் ஓர் விருப்பும், அவ்விதமே, இதற மதங்களிலும், கொள்கைகளிலும் வெறுப்பு சற்றும் இல்லாது, ஆனல் வேறு விதமான அன்பும் அவசியம். கூட

அநுபவிகளது சரித்திரங்களைப் பார்த்து வருவது யாத்திரையில் இன்பமளிக்கும். ஆழ்ந்த சந்தேகங்களை போக்கும்; தைர்யம் ஊட்டும். மேலும் அவர்களது அதி தீவ்ர பக்தி, இடைவிடாச் சாதனைகள், ஆழ்ந்த அநுபவங்கள், அவர்கள் அடைந்த உத்தம நிலை முதலியன புலப்படும். தானும் அந்த அநுபவ கோஷ்டியில் ஒருவனுகச் சேர அநுதாபம் ஊட்டும்.

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாச, ஸர்வவியாபக, சாசுவத, புராதன, ஆழ்ந்த சாந்த, பிரத்தியக்ஷ, ஸமஸ்த ஜீவர்களின் ஹ்ருதய குகையில் அமர்ந்துள்ள ஞானிகளினது பரம் பொருளை, யோகிகளினது பரமாத்மாவை சித்தர்களினது வெட்ட வெளியை, பக்தர்களது பகவானை, ஆஸ்தீகர்களினது ஸச்சிதாநந்தத்தை, நாஸ்தீகர்களினது சூன்யத்தை, பௌத்தர்களினது நிர்வாணத்தை, கிறிஸ்துவர்களினது கிறிஸ்துவை, மகம்மதீயர்களினது ஹல்லாவை முறையே ஹிந்துக்கள் பௌத்தர்கள், ஜயினர்கள், கிறிஸ்துவர்கள், மகம்மதீயர்கள் முதலான சகோதரர்கள், மேற்கூறியவாறு வேற்றுமை இல்லாது அநுபவ நூல்களைப்பாராயணம் செய்வதுடன் கூடத் தங்களது ஹ்ருதய குகையில் ஏகாக்கிர சித்தமுடன்

ஆராதித்து வந்தால் எல்லா மதங்களைப் பார்க்கிலும் பதின் மடங்கு அதிகமாக ஆத்மாநுபவமே உண்மையான மதம் என்பதை மிக ஜல்தியில் தங்களது யாத்திரையில் உணர்வார்கள் என்பது நிச்சயம். மேலும் ஏகாக்கிர சித்தமுடன் கூடிய பாராயணத்தை ஆத்மப் பொருள் இன்பமுடன் ஒப்புவதை நாளடைவில் அநுபவத்தால் ஜீவயாத்திரீகர்கள் அறியலாம்.

17. சாஸ்திரப் படிப்பு: உபநிஷத்துகளும், அவைகளைத் தொடர்ந்து வந்திருக்கின்ற பற்பல சாஸ்திரங்களும் ஓர் புறத்தில் கூறுவது:— அநுபவக் கிரந்தங்களை பொருள் அறிந்தோ, அறியாமலோ எவ்விதமாகப் பாராயணம் செய்தாலும் அஞ்ஞானம் நிவர்த்தியாகும்; மோக்ஷம் அடையலாம். ச்ரவணம் செய்வதினாலேயே ப்ரம்மமயமாகலாம்; மாயை கனவிலும் நெருங்காது; பகவத் விஷயமான நிச்சய புத்தியை அடைந்தவனும் சாஸ்திரத்தை ரக்ஷிக்க வேண்டும்.

மற்றொரு புறத்தில் பறை சாற்றுவது பின் வருமாறு:— பற்பல சாஸ்திரங்களை அடிக்கடி மெல்லுவதினால் என்ன பிரயோஜனம்? ஆத்மாவை உணர்ந்தவனுக்கு வேதங்களினாலும், பல சாஸ்திரங்களினாலும், நூற்றுக்கணக்

கான ஸூத்திரங்களினுலும் ஒரு பலனும் ஏற்படுவதில்லே. இவைகளே ஆயிரக் கணக்கான வருஷங்கள் படனம் செய்து வந்தாலும் ஞானமும், ஞேயமும் அடைய முடியாது. மேலும் கேள்வியினுலும், புத்தி சாதுர்யத்தினுலும் ஆத்மலக்ஷியத்தை எட்ட முடியாது. அநுபவம் இல்லாத பண்டிதர்கள் குங்குமம் சூடிக் கொண்ட ஒட்டகைகள் போல் உள்ளவர்கள். பிறர்களுக்கு அநுபவவிஷயங்களேப் போதிப்பார்கள். தாங்கள் சும்மாய் உதரபோஷணர்த்தம் எங்கும் திரிவார்கள். இவைகளினுல் பற்பல பிறப்பு — இறப்புகளே எடுப்பார்கள். இவ்வித காரணங்களினுல் வேத, சாஸ்திர, ஸூத்திர வலேகளில் சிக்காது ஹ்ருதய கமலத்தில் உள்ள பரம் பொருளேத் தேடி, நாடி அதனுள் இறண்டறக் கலக்க வேண்டும்.

தவிர்த்து சாஸ்திரங்களில் சில இடங்களில் கர்மாக்கள் முக்கிய மென்றும், வேறு சில இடங்களில் ப்ரம்மத் தியானமே அவசிய மென்றும் உரைக்கப் படுகின்றன. ஊடுருவிக் கவனிக்கின் ஓரே நூல் ஓர் இடத்தில் சில விஷயங்கள் அவசியமென்றும், மற்ளுெரு இடத்தில் அவைகள் அனுவசியமென்றும் வற்புறுத்துவது காணப்படும்.

அநுபவமில்லாத, அதில் ஒரு பிரேமை வைக்காத, அதை அடைய அநுதபியாத பலர் ஓர் புறத்திலுள்ள விஷயங்களைப் பார்த்து விட்டு மற்றோர் புறத்தை நிந்தனை செய்கிறார் கள். ஓரிடத்தில் நடைபெற்றதை இங்கு, உதாகரிப்பது மிகையாகாது. ஓர் ஆற்றங்கரை மீதுள்ள மடத்தில் அதி காலையில் நீராடி, விபூதிப் பட்டைகளைச் செவ்வையாகத் தீட்டி, பஞ்ச கச்சங்கள் நழுவாது, கெட்டியாகக் கட்டிய பட்டாடையுடன், எதிரில் தீர்த்தபாத் திரங்கள் வைத்திருக்க, சுகாஸன மிட்டு மூச்சைப் பிடியாது மூக்கைப் பிடித்துப் பிறகு வஸ்திரத்தினால் இரு கைகளையும் நன்றாக மூடிச் சிலர் பரஸ்பரம் ஓழிவுக்காக வைதீக லௌகீக சம்பாஷணைகளுடன் காயத்ரீ மந்தி ரத்தை ஜபித்து வந்தார்கள். அவர்களில் ஒரு வர் அங்கு நின்று கொண்டிருந்த சிலரைக் கவ னித்துத் தனது காயத்ரீ ஜப மத்தியில் "கலி யின் பிரபாவத்தைப் பாருங்கள். த்விஜனாகப் பிறந்தும் ஸந்தியா வந்தனம் முதலான கர்மாக் களைச் செய்யாது இவர்கள் நம் முன்பு வீண் வம்பு புரிவதைக் கவனியுங்கள்.....கர்மா ஒன்றே மோக்ஷத்தை அளித்து விடாதா?" என்றார். மற்றொரு கோஷ்டியில் கல்வியில் ஆழ்ந்துள்ள ஒருவருக்கு கோபம் வந்து விட்டது. அவர்

பதில் உரைத்தது பின் வருமாறு:— வம்புப் பேச்சுடன் ஸந்தியாவந்தனம், காயத்ரீ முதலிய வைகளைச் செய்யும் கர்மடர்களே! நீங்கள் பற் பல சொல்லம்புகளை எங்கள் மீது பிரயோகித் தது பற்றி சற்றும் வருத்த மில்லை. 'கர்மாக் கள் மோக்ஷமளிக்கும்' என்றீர்கள். சற்று செவி சாயுங்கள். தேவர்கள் ப்ரம்மத்தையே தியானிக் கின்றனர்கள். சாஸ்திரங்களும் அதொன் றையே கோஷிக்கின்றன. ஆகையினால் ஸந்தி யாவந்தனம், சிராத்தம் முதலான கர்மாக்கள் இரண்டல்லாத அத்வைத ப்ரம்மத்தின் கண் லயிக்கத் தேவை இல்லை. மேலும் இவைகள் பந்தங்களாகும். ஒன்று கவனியுங்கள். கர்மாக் கள் நல்லவைகளாக இருந்தால், சாந்த குணத்தை விருத்தி செய்யுமானால் காயத்ரீ ஜபமத்தியில் எங்களைத் தூற்றிச் சாபமிட மனம் வருமோ?......

இன்றைக்கும் பல மடங்களில் இவ்வம்புப் பேச்சுகளைக் கேட்கலாம். அதனால் உத்பவிக் கின்ற சண்டைகளைப் பார்க்கலாம். இக்கதை ஓர்புற மிருக்கட்டும். ஒரே பண்டிதர் ஒரு விடத்தில் கர்மாவின் உத்கிருஷ்டத்தையும், மற் றொரு இடத்தில் அதன் இழிவையும் உபந்நிய சிப்பதைக் கவனிக்கலாம். கூட இரு பண்டி தர்கள் இவ்விரு விஷயங்கள் பற்றி உபநிஷத்து

வாக்கியங்களையும், சாஸ்திர ஆதாரங்களையும் அம்புகளாகக் கொண்டுச் சண்டையிடுவது தற்காலம் உலகில் ஜாஸ்தி. ஏன்? எல்லாவற்றுக்கும் சாஸ்திரங்களும், சூத்திரங்களும் இடம் கொடுக்கின்றன. காரணம் யாது? அநுபவ நூல் ஓர் பெரிய, சுத்த நிலைக் கண்ணாடி போல் உள்ளது. முகத்தில் நல்ல குறிகளைத் தரித்துப் பார்ப்பவர்களுக்கு நல்லதைக் காட்டும். முக முழுவதும் சுறிய புள்ளிகளைப் பொட்டிட்டுப் பார்க்கிறவர்களுக்கு விகாரமாகக் காட்டும். இஃது நிலைக் கண்ணாடியினது குற்றமல்ல. உபயோகத்தைத் தவறுதலாகச் செய்பவர்கள் மீது தான் குற்றமென்பதைப் பாமரனும் அறிவான்.

ஆழ்ந்த அநுபவிகள் இவைகள் பற்றி உரைப்பது:— சாஸ்திரப் படிப்பும், நற் கர்மாக்களும் ஐகாக்கிரியம் ஏற்பட நன்கு உதவுவதினால் அஸ்திவாரங்களாகும். தியான நிலையில் இவைகள் பற்பல சந்தேகங்களை நிவர்த்திக்கும். ஸமாதி நிலையை எட்டும் தருணத்தில் இவைகளை ஜாஸ்தியாகக் கைக்கொண்டால் உபத்திரவமாகும். ஸமாதி நிலையை அடைந்து ஏகாக்ஷர ப்ரம்மத் தியானத்தில் ஸதா ரமிப்பவர்களுக்கு இவைகள் விஷமாகும். இக் காரணங்களினால் யாத்திரீகன் தனது ஐகாக்கிரிய, தியான, ஸமாதி

களான படிகளை அடைய அதிக அநுதாபத் துடன் இருக்க வேண்டும். ஜப, தியான காலங் களுக்குப் பிறகு எக்காலும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் மனதை இதற கெட்ட விஷயங்களில் சிதற விடாதிருக்க நற்கர்மாக்கள் சாஸ்திரப் படிப்பு முதலியவைகளைக் கைக் கொள்ள வேண்டும். அநுபவ மார்க்கத்தில் ஈடுபடும் யாவர்க்கும் சாஸ்திரங்களில் காலம், அதிகாரி பேதம் முதலியன பற்றி சிற்சில இடங் களில் மாருக உரைக்கப் பட்டிருப்பதும், அதன் தத்வமும், பரிகாரமும் மிக எளிதில் புலப்படும். ஆகையினுலே அநுபவ தீபத்தின் உதவியைக் கொண்டு யாத்திரீகன் சாஸ்திரங் களையும், கர்மாக்களையும் பின் பற்றுவது நலம். மாருகப் போவது சற்றும் சந்தேகமின்றி அபா யகரமாகும்.

18. புராண அர்த்தம் (வெளியிடுவது): ராமாயணம், பாகவதம் முதலிய புராணங்களை அநுபவ மார்க்கத்தில் ஈடுபடாத பண்டிதர் ஆத்மபரமாக முற்றிலும் வியாக்கியானம் செய் வது ஆபத்கரமாகும். ஓர் கன்னிகை சிக்க லான பிரஸவ விஷயமாகப் புத்திமதி கூறத் தகுந்தவளல்ல. பிறருக்காகப் படித்தவன் ஆழ்ந்த ஆத்மவித்யையைப் போதிக்கத் தகுந்த

வனல்லன். பரம் பொருள் திருஷ்டமாகவும், அத்ருஷ்டமாகவும் உள்ளது. ஸகுணப் பிரும்ம உபாஸகனும் நிர்குணப் பிரும்மத்தைப் படிப் படியாக எட்டுகிறான். அவ்விதமே தீவ்ர நிர்க்குண உபாஸகனும் ஸகுணப் பிரும்மத்தைத் தியானத்தில் காண்கிறான். இக்காரணங்களினால் மகா அனுபவிகள் இவ்விரண்டையும் ஒன்றாகவே பாவித்துத் தங்கள் யாத்திரையில் பாடியிருக்கின்றனர்கள். ஆகையினால் புராணங்களில் உரைக்கப்படுகிற பகவானை, இரு (ஸகுண, நிர்க்குண) பரமாகவும் பொருள் படுத்துவது பாமரர்களுக்கும், பண்டிதர்களுக்கும், யாத்திரீகர்களுக்கும் க்ஷேமகரமாகும். ஒரு புறமாக நமது அற்ப புத்தியைக் கொண்டு அர்த்தம் செய்வது நலமல்ல; பாதகமுமாகும். நாமும் ஒன்றைக் கவனிப்போம். நம் குழந்தை சௌகரியக்குறைவாக இருந்தால் நாம் சில பதார்த்தங்களைத் தியஜித்து குழந்தையின் சரீர ஸ்திதியைக் கவனிக்கவில்லையா? அது போல என் பரம் பொருள் தனதடியார்களின் க்ஷேமார்த்தம் மூர்த்தியாக அவதரித்துப் பற்பல லீலைகளை நடித்துக் காண்பித்திருக்கக் கூடாது?

19. தர்மம்: இலைதை ஓர் யஞ்ஞமாக பகவத் கீதை முதலிய அநுபவக் கிரந்தங்களில்

கோஷிக்கப் பட்டிருக்கின்றது. எங்கும் நிறைந்த பகவான் நம்மிடம் கொடுத்து வைத்திருக்கும் பொருளை நல் விஷயங்களில் விநியோகிக்க வேண்டும். 'ஜன்மாந்திரத்தில் கொடுத்துவைத் தான்; இஜ்ஜன்மத்தில் அநுபவிக்கின்றனன்' என்பது உலக வசனம். ஆகையால் இப்பிறவி பில் பொருளை துர் விநியோகம் செய்யாதிருக்க வேண்டும். பாருங்கள்! ஜீவன் இவ்வுலகில் பிற வியை எடுத்த போது ஒன்றையும் கொண்டு வரவில்லை. இம் மண்ணுலகை விட்டு மிகுந்த கவலையுடன் பெற்றோர்கள், மனைவி, மக்கள், பந்து வர்க்கங்கள், உயிரான நண்பர்கள் முத லியவர்களிடம் 'போய் வருகின்றேன்' என உரைத்து லீவு வாங்கிக் கொள்ளாது போகும் போதும் ஒரு காதற்ற ஊசியையும் எடுத்துப் போவதில்லை. 'போய் வருகின்றேன்' என ஜீவன்கள் பெரும்பாலும் மேற்கூறியுள்ளபடி ஒருவரிடமும் ஏன் சொல்லிக் கொள்ளுவ தில்லை? போகும் இடமும், வரும் இடமும், தான் அடங்கும் சொந்த இடமும் நற்கர்மாக் களினால் முன்னதாகத் தெரிந்து கொண்டிருந் தாலல்லவோ ஜீவன் நல் சமாசாரங்களைப் பந்து வர்க்கங்களுக்கு உரைத்துப் பிறகு இவ்வுடலை விட்டுக் கிளம்பக் கூடும். இவ்விஷயத்தை நாம் யாவரும் கண் கூடாகப் பார்க்கின்றோம்.

மிக ஜல்தியிலும் மறக்கின்றோம். அவ்விதமான மாயைப் போர்வைகளை மூடிக் கொண்டிருக்கின்றோம். இன்னும் தேடி அணிந்து வருகின்றோம்.

இஃதிருக்கட்டும். புண்யம்—பாபம் இவ்விரண்டினுள் ஒன்றே ஜீவனை உடல் விட்டு நீங்கும் போது தொடர்கின்றது. வேறு ஒருவரும், ஒன்றும் தொடரவில்லை. ஆகையினால் நடுவில் வந்த சொத்துகளை நல் விஷயங்களில் விநியோகிப்பதினால் புண்ணியமும், அவ்விதம் செய்யாது ஜீவ யாத்திரையில் தேவைக்கு மேல் வைத்துக் கொள்ளுவதினாலும், மேன்மேலும் பற்பல விதமாக இதர ஜீவன்களைச் சிரமத்துக்கு உள்ளாக்கி அந்நியாயமாகச் சம்பாதிக்கக் கவலையுடன் முயலுவதினாலும் கொடிய பாபங்களும் ஜீவன்களை அடைகின்றன. இதத்திலும் ஒன்றைக் கவனிப்போம். மிதமிஞ்சிய பொருள் வைத்திருப்போர்களில் சிலரல்ல பலர் தீரா நோயினால் ஓர் பிடி ஆகாரங் கூட உட்கொள்ள உபத்திரவப் படுவதையும், தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள் குவியலில் தான் கொஞ்சமும் தனது இஷ்டப்படி பந்து வர்க்கத்தினது மறைப்பினால் செலவழிக்க முடியாதிருப்பதையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றோம். கூட

தனக்குவியலின் மீது சயனித்து வந்த பல மன்னர்களும், பிரபுக்களும் பிரயாணச் சிலவுக்கு ஓர் தம்படியும் எடுக்க முடியாது தர்மராஜனது உலகுக்குப் போய் விட்டார்கள். இனியும் பலர் இவ்விதம் கஜானு காவற்காரர்களாக பொருள்களைக் காத்து விட்டு, தாங்கள் அநுபவியாது, நற் காரியங்களில் விநியோகியாது போவது நிச்சயம். இக்காரணங்களினுல் மேற்கண்டவைகளைச் சற்று மனதுக்கு வாங்கி தர்மத்தைக் கடைப் பிடித்து எங்கும் நிறைந்த பகவானை வழிபடுவது யாத்திரீகனது கடமையாகும். ஓரிடத்திலும் சற்றும் தரித்திராததும், சகடம் போல் சுற்றிச் சுற்றி வருவதுமான பொருளுக்கு யாத்திரீகன் அடிமைப் படுவது மிகவும் பரிதபிக்கத் தக்கது. பொருளை அடிமையாகக் கொள்ளாது பூஜித்து வருகிறவர்களும் துக்கிக்கத்தக்கவர்கள். பொருளின் அடிமைத் தனத்திலிருந்து சுயேச்சை பெறவும், அப்பொருளை அடிமை கொண்டுத் தன்னிஷ்டப்படி நற் காரியங்களில் உபயோகிக்கவும் உபாயமாகத் தர்மத்தைப் பெரியோர்கள் அநுஷ்டித்து இதர ஜீவன்களின் நிமித்தம் சாஸ்திரங்கள் வாயிலாகப் பல இடங்களில் பறை சாற்றி யிருக்கிருர்கள். குதிரைச் சவாரி செய்பவன் புத்திசாலியாக இருந்தால் துஷ்டக் குதிரையும் நன்ருகப் போகும். புருஷன்

தனக்குரிய தர்மங்களைச் சரிவர அநுஷ்டித்து வந்தால் கொடிய மனைவியும் சீர்திருத்தப் படுவாள். இவைகளைப் போல் நாம் நற்சிந்தனையுடன் பொருளை கெட்ட விஷயங்களில் உபயோகியாது தர்ம விஷயமாக விநியோகித்து வந்தால் அப்பொருளே நமக்கு இக—பரங்களில் உதவிபுரியுமென்பது நிச்சயம்.

ஆரம்பத்தில் பிரதி வருஷத்திலும் பகவானால் அருளப்படுகிற வரும்படியில் ஒரு பாகத்தை உனது குடும்பத்துக்கு உபயோகித்து பாக்கியை சோதர—சோதரிகளான ஜனங்கள், இதற ஜீவன்களான மிருகம், பக்ஷி, மரம், கொடி செடிகள் விஷயமாக விநியோகியுங்கள். கூட உனது குடும்பச் சிலவையும் கூடிய வரையில் குறைத்து வர வேண்டும். ஆடம்பரமாக உணவிலும், ஆடை-உடைகளிலும், குடியிருப்பிலும், விவாகத்திலும் சிலவழிப்பது நலமல்ல; கொஞ்சமும் தர்மமல்ல; சாஸ்திர சம்மதமல்ல; சற்றும் தெய்வ சம்பந்தமல்ல. படிப்படியாகக் குறைத்து வருவது நலம். உதாரணமாக இவ் வருஷம் நான்கு உடைகள் தேவையானால் மறு வருஷத்தில் மூன்று உடைகள் வாங்கு. தவிர்த்து உடைகளின் பொறுமானத்தையும், ஆடம்பரத்தையும் படிப்படியாகக் குறைத்து வர

வேண்டும். யாத்திரையில் களைப்பில்லாது போகவும், ஜீவன் தங்கவும் எளிதில் ஜீரணமாகும் ஆகாரத்தை உட்கொள்ளு. மிதமிஞ்சிய உணவை எடுக்க உத்கிருஷ்டமான ஜீவனை உபயோகிக்கலாகாது. மானத்தைக் காக்கச் சற்றும் ஆடம்பரம் இல்லாத ஆடைகளைத் தரி. சித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஆடம்பரக் கட்டிடங்களில் மோகம் கொள்ளாது சுத்த காற்றுள்ள வீடு போதுமானது. இவ்விதமே விவாகாதி காரியங்களில் பகவானின் திருப்திக்காகவும், தேவதைகளின் ப்ரீதிக்காகவும், ஸத் தான தர்மத்தை அநுசரித்தும், சாஸ்திரங்களை மீறுதும், ஆர்ப்பாட விஷயங்கள் சற்றும் இல்லாதும் அநுஷ்டிப்பது நலம்.

மேற்கண்ட விதமாகத் தர்மத்தை வழக்கத்துக்கு மாருக உடனே அநுஷ்டிக்க மனம் இடங்கொடாவிட்டால் கீழ்கண்டவாறு அநுஷ்டிப்பதினுலும், பகவதாராதனையின் உதவியினுலும் நாளடைவில் மேல் குறிப்பிட்டுள்ளபடி அநுஷ்டிக்கக் கால புருஷனை பகவான் புத்தி புகட்டுவான். ஜாக்ரிய நிலையில் உள்ள ஜீவ யாத்திரீகன் தனது வரும்படியில் ஆறில் ஒரு பாகத்தையும், தியான நிலையில் உள்ளவன் மூன்றில் ஒரு பாகத்தையும் அவசியம் தர்மம் செய்து

வர வேண்டும். ஸமாதி நிஷ்டைப்படியை எட்டி யவன் தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமலும், தனது ஆத்மப் பொருளே என்றும் அழியாப்பொருள் என்று எண்ணியும், தனது சாசுவத மஹா ஸமாதி காலத்தை எதிர் பார்க்கிறவனாகவும், கூட்டிலுள்ள ஜீவனுக்குப் பிராண—அபானங்களினாலும், பந்து வர்க்கங் களினாலும், மற்றும் பலவகைகளினாலும் ஏற்படு கிற உள்—வெளி உபத்திரவாதிகளை மனனம் செய்தும், 'ஆத்மப் பொருளை நாடுவதே சாச் வத ஆநந்தம்; மாறாகக் காலத்தைப் போக்கு வதே கொடிய நரகவேதனை' எனப் பிரதி விராடியையும் பிரதியுகமாக எண்ணி நித்தி தியாசனம் செய்தும் காலத்தைக் கழிக்க வேண்டும்.

மனமிருந்து இவைகளுக்குப் பிறகும் தர்ம விஷயங்களில் சந்தேகம் உதித்தால் ஆச்சார் யனை அல்லது ஆழ்ந்த அநுபவியைக் கேட்டு அநுஷ்டிக்கலாம். சுருக்கமாக உரைக்கின் இன் றிருந்து—நாளை—போவார் ஒருவரிடமும் உதவியை எதிர்பாராது காலத்தைக் கழிக்கும் ஜீவ யாத்திரீகர்களான பாத்திரங்களை அறிந்து செய்யும் தர்மம் தர்மத்திலும் தர்மமாகும். பலனை எதிர்பாராது செய்யும் தர்மம் ஸாத்வீக

தர்மமாகும். பலனை எதிர்பார்த்துச் செய்யும் தர்மம் ராஜஸீக மாகும். மனமில்லாது செய்யும் தர்மம் தாமஸீக மாகும். கூட எக்காலத்திலும் ஆடம்பரமில்லாத தர்மமும், பிறரறியாத் தர்ம மும் சிறந்தன என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். உனது வலதுகை கொடுக்கும் தர்மத்தை இடதுகை அறிய வேண்டாம்.

20. ஷை. ஆழ்ந்த அநுபவிகள் விஷயமாக வும், கூன், குருடு, செவிடுகளுக்கும், அத்யாத் மக் கொள்கைகளைப் பரப்பும் சமயங்களுக்கும், அநுபவ நூல்களை வாசகசாலைகளில் வாங்கி வைப்பதும், ஏழைப் பாத்திரர்களுக்கு அவை களை வாங்கி விநியோகிப்பதும், தர்ம ஆஸ் பத்திரிகளுக்கு மருந்துகள் வாங்கி அனுப்புவ தும் சிறந்த தர்மங்களாகும் என்பதைக் குறிப் பிடுவோம். இந்த யாத்திரையில் நிரம்பவும் உதவுகின்றது என்பதை அறிந்துள்ளோம்.

21. ஷை. செடி கொடிகளுக்கு நீர் இறை ப்பது. பசி உள்ளோர்களுக்கு அன்னம் இடு வது. தரித்திரர்களுக்கு உடை அளித்தல். நோயாளிகளுக்குச் சிகித்ஸை செய்யல். ஏழை களுக்குக் கல்வி புகட்டல். நாஸ்திகர்களுக்கு வைராக்கியத்தைப் போதித்தல். கொடியவர் களுக்குச் சாந்த வாயிலாக நல்லவைகளை அறி

வித்தல். பக்தியில்லாதவர்களுக்கு அறிவு ஊட்டல். சற்பாத்திரர்களுக்குப் போதித்தல், யாத்திரீகர்களுக்கு ஆத்ம வித்யையை உபதேசித்தல். முறையே பெரிய தர்மங்களாகும். தவிர்த்து ஜீவ யாத்திரையில் இவைகள் முக்கியமாகும். சக்தியுள்ளவர்கள் மேற்குறிப்பிட்டுள்ளவைகளைக் கைக்கொள்ளாது செய்யும் ஜபம், தியானம், நிஷ்டை, குளம் வெட்டல், குழாய் வைத்தல், ஆலயம் கட்டல் முதலியன நிஷ்பிரயோஜனமாகும் என்பதைக் குறிப்பிடுவோம்.

22. ஷை தன. மெத்தையில் உறங்குகிறவர்களுக்கு ஷட்ரஸோபேதமான விருந்தளிப்பது, பெரிய உத்யோகஸ்தர்களுக்கு ஸ்வ பிரயோஜனார்த்தம் பலவகைத் தட்டுப் பண்டம், பானம் அடங்கிய பார்ட்டி செய்வது, மிதமீறிய வரதக்ஷிணை கொடுப்பது, சீர்வரிசை சாமான்களை மலையாகக் குவித்து மேள தாளத்துடன் அனுப்புவது, லௌகிகப் பாட்டுக் கூத்துகளுக்கு காண்வீ நோட்டுகளைத் துணிப்பது முதலியவைகளைத் தர்மமெனக் கூறுதே. ஜன்மாந்திரக் கடனைத் திருப்பிச் சேர்க்கின்றார்— அவரெனக் கூறு. இப்பாராவில் கூறியுள்ள விஷயங்களில் விநியோகிக்கப்படும் பொருள்— தர்மம் தாமஸீகத்தினும் தாமஸீகத் தர்மமாகு

மென்பதை யாவரும் அறிந்து நிறுத்தப் பிரார்த்திப்போமாக.

23. நற்குணங்கள்: எக்காலத்திலும் நற்குணங்களையும், நற் செயல்களையும் பின்பற்றுங்கள். நல்லவைகளைப் பின்பற்றுவதினால் தீயவைகள் தானாக விலகிவிடும். நல்லவைகள் சாசுவதமானவைகள். தீயவைகள் அழியக் கூடியவைகள். ஆனாலும் இத்தீயவைகள் தோன்றியும், மறைந்தும் அஜாக்கிருதையுள்ள யாத்திரீகனைப் பற்பலவிதமாக உபத்திரவிக்கும். கூட தூய வெண்மை உடை தரித்தவன்மீது சிறிய ஓர் பொட்டுத் தெறிப்பது போதும். கருப்புடை தரித்தவன் சாக்கடையில் மூழ்கினாலும் பொட்டுகள் புலப்படா. ஆகையினால் ஜீவ யாத்திரீகன் எல்லா விதங்களிலும் அதிஜாக்கிருதையுடன் விழித்து இருக்கவேண்டும். நல்லவைகளைப் பின்பற்றித் தீயவைகளைத் தூர விலக்கவேண்டும். ஞான தீபத்தை எடுத்தாலல்லாது அஞ்ஞான இருள் அகலாது. உதாரணமாக, கொடிய கோபம் குடிகொள்ளும் காலத்தில் சாந்தத்தையும், உட்பகைவனான காமன் அழியும் சிற்றின்பவலைகளை விசிறுங்கால் சாசுவதப் பேரின்ப ஸ்மரணையையும், மூடத்தனமான லோபம் சிரமீது ஏறும்காலையில் தர்ம

சிந்தனையையும், ஞானக்கண்ணை மறைக்கும் துஷ்ட மதப் பிசாசு (நான், என்னுடையது, எதையும் செய்வேன் முதலிய அகம்பாவம்) பிடிக்கும்போது 'மாந்தாதாவைப் போலுள்ள எவ்வளவு மன்னர்கள், பிரபுக்கள் இருந்தஇடம் தெரியாது மண்ணில் மடிந்து விட்டார்கள்' எனும் எண்ணத்தையும், அளவில் அடங்கா ஆசைகள் போர்க்கும் காலத்தில் அவைகளில் பிரியம் வைப்பதினால் ஏற்படப்போகிற பிறப்பு-இறப்புகளையும், த்வந்துவ ஸேனைகள் கொண்ட அனாத்ம அஸுரர்கள் போரிடுங்காலையில் பரமாத்மாவான பகவான் கோஷித்துள்ள தைரிய வாக்கியங்களையும், பிறப்புகளைத் துணையாகக் கொண்ட இறப்பு (யமன்) எதிரிடுங் காலையில் அம்ருதத்தை வர்ஷிக்கும் பரமாத்ம மதித் தியானத்தையும் அநுஸந்தானம் செய்வது பெரிய மருந்தாகும் எழுந்ததிலிருந்து நித்திரையில் ஈடுபடும் வரையில் ஏதாகிலும் நற்காரியங்களை மனதின் போக்கை அநுசரித்துச் செய்துவரப் பழக்கம் கொள்ளுங்கள். 'நலம் எது, கொடியவை எவை' என்பது விசேஷமாக எல்லா ஜீவன்களுக்கும் தெரியும். தெரிந்தும் நலத்தைக் கொள்ளாதும், கொடியதைத் தள்ளாதும் இருப்பது நியாயமல்ல. அறியாத ஜீவனுக்கு ஓர் தண்டனை. அறிந்தும் அநுஷ்டி

யாத ஜீவனுக்குப் பற்பல தண்டனைகள் என்று முன்னோர்கள் உதாரணங்களுடன் முன்னறிக்கை செய்திருக்கிறார்கள்.

விசேஷமாக ஜீவன்கள் தனது சரீரம், மனம் இவ்விரண்டினாலும் கெடுதல்களையே பிரதி தினமும் செய்து வருகின்றன. கூட, கண் காதுகள் முதலிய இந்திரியங்கள் வாயிலாகப் பற்பல கொடிய பாபங்களை மூட்டைகட்டி வருகிறோம். இதனால் அல்லவோ ஜீவன்களுக்கு மேன்மேலும் எண்ணறியா பிறப்பு—இறப்புகள் விருத்தியாகின்றன. எல்லாப் பிறப்பு—இறப்புகளும் துன்பக் கடலை நோக்கியதாகவே இருக்கின்றன. இவைகளில் இன்பத்தியில்லையை ஒருவனும், ஒருவரும் கண்டதாக இதுகாறும் கூறவில்லை. ஆகையினால் ஜீவன்கள் நற்கர்மாக்களைப் பின்பற்ற வேண்டும். "கொடிய பாபக் குவியல்களை எரிக்கப் பரிகாரம் ஒன்றுமில்லையோ? ஆநந்தகரமான புண்ணியத்தை அப்பாப ஸ்தானத்தில் பதிப்பித்துக் கரையேற முடியாதோ?" எனின் கண்களினால் பார்க்கப்பட்ட பாபங்களுக்குப் பகவானது தர்சனமும், காதுகளினால் கேழ்கப்பட்ட பாபங்களுக்கு அவனது பரிசுத்த சரித்திரச் சிரவணமும், வாயினால் சொல்லப்பட்ட பாபங்களுக்கு வாயாற அவனது அநந்த கல்யாண குணங்களைப் புகழ்ந்து

பஜனை செய்வதும், இருகைகளினுல் செய்யப் பட்ட பாபங்களுக்கு அவனைக் கும்பிட்டு, அபி ஷேகித்து, அர்ச்சிப்பதும், சரீரத்தினுல் செய் யப்பட்ட பாபங்களுக்கு "பகவானே! நீயே கதி, க்ஷமிக்கவும்" எனச் சரணுகதி செய்வ தும், கால்களினுல் செய்யப்பட்ட பாபங்களு க்கு அவனது ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய் வதும், இவைகளைத் தவிர்த்து தெரிந்தும், தெரியாதும், மனத்தினுலும், ரகஸ்யமாகவும், முன் பிறவிகளிலும் செய்திருக்கின்ற பாபக் கூட்டங்களைப் பஸ்மீகரமாக்க ஹ்ருதய குகை யின் கண் எக்காலும் அமர்ந்துள்ள பரம் பொருளை ஸதா ஆத்ம வாயிலாகத் தியானிப் பதும் பிராயச்சித்தங்களாகும். சுருக்கமாக உரைக்கின், சரீரத்தினுலும், அதன் அங்கங்களி னுலும் செய்துள்ள பாபக் குவியல்களை நிர் மூலம் செய்ய பகவத் பூஜை, நாம மந்திர ஜபங்கள், பாராயணம், உடல் பொருள் ஆவிகளுடன் கூடிய பரோபகாரம் முதலான நற்கர்மாக்களையும், மனம் சித்தம் புத்தி அகங்காரம் முதலிய நான்கு அந்தக்கரணங்களினுல் செய்யப்பட்டிருக்கிற பாப மலைகளைப் பொடியாக்க தியான, ஸமாதி களையும் ஜீவன்கள் கைக்கொண்டு விடுதலை பெற வேண்டும். கூட, இனிக்கினவிலும் தீயவைகளை மனம் நாடாதிருக்கும் படியும், எக்காலும்

அதேமனம் நற்காரியங்களை அநுஷ்டிக்கும்படியும் அரிதுக்கும் அரிதான மானிடப்பிறவியைப் பூண்ட ஜீவன் அதி ஜாக்கிருதையுடன் தனது மிகுதியுள்ள ஆயுளைக் கழிக்கவேண்டும். ஜீவன் சகல நற்காரியங்களைச் செய்யும் போதும், ஆகாரம் உட்கொள்ளும் போதும், நல்ல புராணங்களைப் பாராயணம் செய்யும் போதும், அவைகளைக் கேட்கும் போதும், சுருக்கமாகச் சொல்லுவோமானால் நித்திரையில் ஈடுபடும் வரையில் செய்கின்ற எல்லாக் காரியங்களிலும் பகவான் ஞாபகமாக இருந்து காலத்தைப் போக்க வேண்டும். உனக்கென்று மனத்தினலாவது, சரீரத்தினலாவது ஓர் செயலுமிராது பகவானது ஆஞ்ஞா சக்கிரத்தைப் பிரதி விநாடியிலும் மிகுந்த சாந்தத்துடனும், ஜாக்கிருதையுடனும் எதிர்பார்த்துக் கார்யங்களைச் செய்து உனது உடல் பொருள் ஆவிகளை அவனது பாதகமலத்துக்கு அர்ப்பிக்கவும். இன்னும் மிகச் சுருக்கமாக உரைக்கின், உன்னல் செய்யப்படுகிற சகல நற்கர்மாக்களையும், பகவத் விஷயமாக அநுஷ்டிக்கின்ற நாம, மந்திர, ஜப, தியான, ஸமாதிகளையும் பரம் பொருளுக்கு மனமுடன் அர்ப்பணம் செய்து விடவும். மேற்கூறப்பட்ட இவைகள் தாம் எல்லாப்பாபக் கூட்டங்களையும் ஜன்மாந்திர கொடியகர்மாக்களையும்

நாசம் செய்யபிராயச் சித்தங்களாகு மென்பதை ஜீவன்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். கூட பிரதிதினமும் எவ்வளவு நற்காரியங்கள், எவ்வளவு தீயகாரியங்கள் உன்னுல் செய்யப்பட்டன என்பதைச் சற்றுநேரம் இரவில் நித்திரைக்குப் போகு முன்பு யோஜியுங்கள். இவ்விதம் சில கொள்கைக்காரர்கள் தனிமையில் சிந்தனை செய்துந் தங்களை சீர் திருத்திக் கொண்டதாகச் சரித்திரங்களினுல் அறிகின்ருேம்.

எல்லா விஷயங்களுக்கும், இக-பர க்ஷேமங்கள் யாவற்றுக்கும் எங்கும் நிறைந்த பகவானது கிருபை ஜீவயாத்திரீகர்களுக்கும், மற்ற வருதா ஜீவன்களுக்கும் எக்காலத்திலும் தேவையுண்டு. அவனது உத்திரவில்லாது ஓரணுவும் அசைய முடியாது. ஆகையினுலே சகல ஜீவன்களும் எழுந்தது முதல் நித்திரை கொள்ளும் வரையிலும், எக்காலத்திலும், எல்லாவற்றிலும் பகவத் விஷயமான சிந்தனையுடன் இருப்பது நலம். இது வரையில் அஞ்ஞான நித்திரையில் ஆழ்ந்திருந்தால், மண், பொன், பெண்களான பேய்களைப் பூஜித்திருந்தால் இவைகளை முற்றிலும் துறந்து பகவத் விஷயமான ஒன்றை ஆழ்ந்த அநுபவமுள்ள ஓர் ஆச்சார்யன் வாயிலாக உபதேசம் அடைந்து அநுஷ்டிக்கவும்.

இதன் மூலமாக ஸர்வ வியாபியான பரம் பொருள் ஒன்றுக்கு உங்கள் எல்லாச் செயல்களையும் அர்ப்பிக்கவும். மிகுந்த சிரேயஸ்கரமான அத்வைதப் பொருளின் கண் இக்கூடு உள்ளபோதே, இரண்டற லயிக்கவும் இந் நிமிஷமே பிரயாயாஸை எடுப்பது ஜீவன்களினது கடமையாகும்.

24. ஸாது சங்கம்: நற்கர்மாக்களைச்செய்யவும், பகவானது கிருபையைப் பெறவும், அவ்வழியை அநுசரிக்கவும், அநுபவிக்கவும், அதில் மூழ்கவும்; இவைகளுக்கு முக்கிய ஸாதனமான அத்யாத்ம ஞானம் ஏற்படவும், இவைகளின் உதவியினால் ப்ராரப்தம், ஆகாம்யம், ஸஞ்சிதம் எனும் மூன்று வித கர்மாக்களையும், பாபங்களையும் வேரறுக்கவும், இக்கூடுள்ள போதே ஜீவன் முக்த தசையை அடையவும் ஸாதுக்களான பக்தர்கள், ஞானிகள், யோகிகள் இவர்களின் சங்கம் அத்யாத்ம யாத்திரையில் நிரம்பவும் உதவிசெய்கின்றது. மேலும் அநுபவக் கிரந்தங்களின் பொருள்களை ஊடுருவி அறியவும், அநுபவத்துக்கு அவைகளைக் கொண்டுவரவும், கூட அர்த்தம் அறிந்துபகவத் ஸ்தோத்திரங்களை வாயாற உரைக்கவும், பஜனை செய்யவும், அவைகளை மனனம் செய்யவும்

நிதித்தியாஸனம் செய்யவும், எல்லா ஜீவன்களி டமும் ஒரு ஸமதிருஷ்டி ஏற்படவும் ஸாது சங் கம் அவசியம். பல பக்தர்கள் தங்களுக்கு ஸாது சங்கம் கிடைக்கவும், அதன் வாயிலாக இஹ-பர க்ஷேமங்களை அடையவும் மனமுரு கிப் பஜனை செய்தும், தியானித்தும், பகவானைப் பிரார்த்தித்தும் இருக்கிறார்கள்.

ஸாதுக்களினது சங்கத்தை அடிக்கடி நாடுவதினால் சாந்தம் ஏற்படுகின்றது. அரிதான மானிடப் பிறவியை எடுத்தும் காலத்தை இது காறும் வீணாகக் கழித்துவிட்டோமென்கிற ஓர் பச்சாதாபம் நம் உள்ளிருந்து கொழுந்து விட்டு எரிகின்றது. இஹ-பரங்களில் நற்கதி கிடைக்க 'வேறொருவரும் கதியில்லை, பகவானே கதி, ஸாதுக்களே கதி' எனும் புத்தி உண்டா கின்றது. கொடிய நீண்டகண்ட ஸம்ஸாரக் கடலினின்று கரை ஏறி, ஆனந்த ஸாகரத்தின் கண் மூழ்கப் பகவானைச் சரணமடைந்து, அவ னிடம் நமது எல்லாவற்றையும் அர்ப்பிக்க ஸாதுக்களிடமிருந்து ஓர் சின்மய, அத்யாத்ம ஆவி நாமறியாது பரிணமித்து நம்மைத் தூண்டு கின்றது. பிரதி தினமும் கொஞ்ச நேரமாவது ஸாது சங்கம் செய்வதால் பாபங்கள் மலை போல் குவியலாக இருந்தாலும் நிர் மூலமாகின் றன. நஷ்ணத் திரயங்கள் [(1) மண், பெண்,

பொருள் ஆசைகள் (2) லோக, சாஸ்திர, தேக வாஸனைகள்]வெட்டப்படுகின்றன. உள்-வெளிச் சந்தேகங்கள் பறக்கின்றன. துஷ்டர்களின் சங்கத்தில் ஓர் வெறுப்பு ஏற்படுகிறது. இக்காரணங்களினால் மோக்ஷம் கரதலாமலகமாக யாத்திரிகனை எட்டுகிறது.

அனுபவக் கிரந்தங்களில் கோஷிக்கப்பட்டிருக்கிறபடி, ஜீவன்களுக்கு ஒவ்வொரு விநாடியிலும் ஏற்படுகிற இன்ப-துன்பங்களான ரட்டிப்புச் சுழல்களினின்று விடுபட வேண்டுமானால், எண்ணிக்கையில் அடங்காப் பிறப்பு-இறப்புகளைக் கொண்ட ஸம்ஸார அரண்ணியமிருந்து தப்பவேண்டுமானால், இவைகளுக்கு உதவியாக ஆழ்ந்த அத்யாத்ம ஞானம் ஏற்படவேண்டுமானால், பரம் பொருளின் கண்லயமடையத் தாபமிருந்தால், தாகமிருந்தால் ஸாது சங்கம் செய். பிறகு நீயாகவே மேற்சொல்லப் பட்டவைகளை அறிந்து உணர்வாய்; அநுஷ்டிப்பாய்.

எவ்விதம் ஸாதுக்களின் சங்கம் உத்கிருஷ்டம் என அறியலாம்? அங்கு வேடிக்கை பார்க்கப் போகக்கூடாது. அவர்களின் செயல்களைச் சோதிக்க எண்ணக்கூடாது. அவர்களது

ஸந்நிதானத்தில் நாம, மந்திர ஜப, நிஷ்டைகளை ப்போனவுடன் நமஸ்கரித்து அனுஷ்டிக்கவேண் டும். அங்கு ஏற்படுகிற சாந்த, ஆத்ம ஆவி வாயிலாக ஸாது ஸங்க மகிமையை உணர்வாய். ஜன்மாந்திர நற்கர்மாக்களினுல் மாத்திரம் நல் ஜீவன்களுக்கு ஸாது ஸங்கத்தில் ஓர் விருப் பம் உண்டாகும். ஸாது சங்கத்தை அடைந் தவன் மஹாபாக்கியவானுவான். ஸாது ஸங்க மஹிமையை ஆதிசேஷனுலும் வர்ணிக்க முடி யாது.

25. <u>கெட்ட சங்கம்</u>:— அநுபவ மார்க்கத் தில் பிரவேசம் இல்லாதவர்களுடன் ஸஹவா ஸம் சற்றும் வேண்டாம். ஏன்? பெரும்பாலுக் ஜீவன்கள் ஸ்திரீ, பொருள், பிறர்களது விஷயங் கள், நாஸ்தீகம் முதலியன பற்றியே பேசிம் காலத்தைக் கழிக்கின்றன. அவைகளைக் கேழ் பதும், பேசுவதும் பாபமாகும். தங்களது பிறப்பை நல்வழிகளில் அவர்கள் செலுத்துவது அரிது. கூட, அரைகுறையாக அநுபவ மார்க் கத்தில் சென்றவர்களும், அதில் அழுத்து நின்றவர்களும், அநுபவமில்லாது புஸ்தகப் படிப்புடன் நின்றவர்களும் ஜீவனூர்த்தமாகவும் கீர்த்திக்காகவும் தெய்வங்கள், அவதார புருஷர் கள், அநுபவிகள், மதங்கள், கொள்கைகள்,

பாதைகள், உபாஸனைகள் முதலிய விஷயங் களில் 'எவர் பெரியவர்—எவர் சிறியவர்; எது பெரிது—எது சிறிது' முதலியன பற்றியும், ஜீவாத்மா-பரமாத்மா, மாயை-தத்வங்கள்,கர்மா-ஞாநம் முதலியன பற்றியும் வியவகாரம் தொடுக்கின்றனர்கள். இவைகளைச் சிரவணம் செய்த காதுகள் மற்ற இந்திரியங்களுக்கு இப் போர்களை அறிவித்து பகவத் விஷயத்தில் ஈடு படாதிருக்கச் செய்கின்றன. சுருக்கமாக உரைக்கின், கெட்ட சங்கத்தினால் சோம் பேறித்தனமும், வ்ருதா சம்பாஷணைகளும், கொடிய செய்கைகளும், இவைகளினால் மகத் தான பாபங்களும் ஏற்படுகின்றன. ஒரு புறத் தில் இருட்டையும், மறு புறத்தில் தேஜஸ்ஸை யும் உபாசிக்க முடியாது. ஆகையினால் யாத் திரீகன் கெட்ட சங்கத்தை அறவே ஒழித்து ஸாது சங்கத்தைப் பின் பற்றவேண்டு மென வற்புறுத்துவோம்.

26. ஷை (ஜாக்கிருதை): யாத்திரீகனே! நீ வாஸனை திரவியால் சரீரத்தைச் சுத்தமாக வைத்திருக்கலாம். ஒருவனது புகையிலைச் சுருட்டு நாற்றத்தை அஃது மறைக்கமுடியாது. அதுபோல் கெட்ட சங்கம் விசிருகிற ஆவியிடம் நெருங்காதே. உனது ஆத்ம சக்தியைக் கெடுத்

துக்கொள்ளாதே. கெட்ட சங்கத்தினால் காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம், நினைவின்மை, சித்தவைகல்யம், புத்தி நாசம் முதலிய நவ வித கொடிய அலைகள் பரிணமிக் கின்றன. இந்த ஒன்பது அலைகளும் பரஸ்பரம் மிக ஒற்றுமை உள்ளவைகள். அஜாக்கிருதை உள்ளவர்களை இவைகள் தங்கள் வலைகளில் இழுக்கும். ஜாக்கிருதை அவசியம்.

27. ஷ்டி (அதி ஜாக்ருதை) "தான் உத்தம பதிவ்ருதை" என்று பகிரங்கமாக வெளிவரக் கூடாது. துஷ்டன் கைபட்டுவிட்டால் பதிவ்ருதா தர்மம் பறந்துவிடுமல்லவா? அது போல் "தான் ஆத்ம நிஷ்டன்" என ஆத்மஸ் துதியுடன் மார்தட்டிக் கூட்டத்தில் வெளி வரக்கூடாது. கெட்டசங்கத்தை சர்ப்பமாக எண்ணி நடுங்கவேண்டும். அகங்காரப் பேயுள் ளவர்களின் விஷக்காற்று ஸமாதி நிஷ்டையைக் கூடக் கெடுத்துவிடும். ஆகையினாலே அதி ஜாக்கிருதை அவசியம்.

28. அஞ்ஞானிக் கூட்டம்: (1) பிறவிக் குருடன் ஸூர்யனை ஒப்பான்; முட்டாள் ப்ரம்மத்தை ஒப்பான், (2) அரைக் கண்ணன் கொடிய ஸர்ப்பத்தைப் பழுதையாக எண்ணு வான்; அஞ்ஞானி பிரபஞ்சத்தைச் சத்தியமாக

நினைப்பான். (3) கோட்டான் ஆதவனைக் காணச் சகிப்பதில்லை; ஞானசூன்யன் பகவானைத் தர்சிக்க சகிப்பதில்லை; (4) ஆந்தை ஒளியைக் காண அஞ்சுகிறது; பக்தி ஹீனன் யோகியைக்காண நடுங்குகின்றனன். (5) சூர்ய, சந்திரர்களைக் கண்டு நாற்கால் சுவானங்கள் குலைக்கின்றன; அத்யாத்ம யோகியைப் பார்த்து இருகால் நாய்களான பாபிகள் குமறுகின்றனர்கள். (6) ஞானிகள், யோகிகள் ஆததாயிகளுக்கும் இஹ-பர க்ஷேமங்களை தியான வாயிலாகவும், உபதேச மூலமாகவும் எக்காலும் தேடுகின்றனர்கள்; ஆததாயிகள் அவர்களுக்கு கெட்ட நினைவினாலும், சிந்தனையினாலும் பிரதியாகச் சம்பாவனை செய்கின்றனர்கள் (7) 'பதிவ்ருதா தர்மம் உயர்ந்த ஆபரணம்' என ஒரு உத்தம ஸ்திரீ உபதேசித்தனள்: வியபசாரிகள் 'இவளுக்கு ஒரு புருஷனைக் கூட அனுபவிக்கச் சக்தியில்லையே, என பறைசாற்றினர்கள். உலக விசித்திரங்களைப் பாருங்கள்.

29. ஒற்றுமையின்மை. நிசிக்கும் ரவிக்கும், அக்னிக்கும் நீருக்கும், விஷத்துக்கும் அம்ருதத்துக்கும், ஸர்ப்பத்துக்கும் கருடனுக்கும், ரோகிக்கும் போகிக்கும், வியபசாரிக்கும் பதிவ்ருதைக்கும், துட்டு வீக்கம் உள்ளவனுக்கும் தர்மிஷ்டனுக்கும், கிணற்றுத், தவளைக்கும்

ஸமுத்திரத் திமிங்கலத்துக்கும், உலக வியவஹாரத்துக்கும் பகவதாராதனைக்கும், வாய் வேதாந்திக்கும் ஆழ்ந்த அநுபவிக்கும், கர்மடனுக்கும் ஞானிக்கும், பிசாசை உபாஸிப்பவனுக்கும் ஆத்ம நிஷ்டனுக்கும் ஒற்றுமை என்பது கனவிலும் ஏற்படாது. பிரும்ம, விஷ்ணு, ருத்ரர்களும் இவைகளுக்குள், இவர்களுக்குள் ஸமரஸம் செய்து வைக்கமுடியாது.

30. கலிகால உபதேசம். ஓர் ஸாது உரைத்தது:— ஹே ஜீவா! ஸர்வ சக்தி வாய்ந்த, ஸர்வ வியாபக பகவானை வழிபடுவது நலம். ஸத் ஸங்கத்தை நாடுவது மோக்ஷத்தைக் கொடுக்கும் நல்லவைகளைக் கடைப்பிடி. தீயவைகளை வேரறு. சித்தத்தை அடக்கு...... கொடியவனது பதில்:— ஹே மூடா! டாக்கி ராஜாக்களை, ஸினிமா ராணிகளை உபாஸிப்பதே நலம். பல விதச்சூதாட்டங்களில் வல்லவர்களைத்தேடுவதே கீர்த்தியைக் கொடுக்கும். மயக்கம் தரும் திராவகங்களைப் பானம் செய்வதே இன்பம். அநுபவிகளினிடம் நெருங்குவதே ஆபத்து. மனோவேகம் ரேடியோவையும் வெல்லும். நாங்கள் முட்டாள்கள் அல்ல. சோம்பேரிகள் அல்ல. ஜாக்ருதை.

31. திருடன் யார்? திருடர்களினும் திருடன் அஞ்ஞானி. திருடன் துட்டைப் பறி கொள்ளுகிறான். அவனுக்கு ஒரு வேலை தான். அஞ்ஞானியோ உயிரை வைத்துக்கொல்லு கிறான். இவனுக்குப் பல வேலைகள் உண்டு. உனது மனோநிலையைக் கலக்கிறான். உனது ஆத்மப் பொருளைத் திருடுகிறான். உனது சாந்த ஆவியைச் சிதற அடிக்கிறான். அவனுக்கு நீ நல்லவைகளை உரைத்தால் உனது புத்திமதி யைத்தள்ளுகிறான். உனது உபதேசத்தை வெறுக்கிறான். இன்னும் பல செயல்களும் இவனிடம் உண்டு. இவனிடம் யாத்திரீகனுக்கு ஜாக்ருதை அவசியம்.

32. அஞ்ஞானிக்குப் புத்திமதி. யாத்ரீகனை ஒரு சொல்லால் திருத்தலாம். அஞ்ஞானியைப் பல நூல்களினாலும் திருத்த முடியாது. ஞானி ஒரு அஞ்ஞானி மூலமாகப் பல விஷயங்களைக் கிரகிக்கின்றான். அஞ்ஞானியோ பல ஞானிகளி டம் ஒரு விஷயத்தையும் அறிவதில்லை. அந்தோ பரிதாபம். பல வித ஆவரணங்களினால் மூடப் பட்டிருக்கின்றனன் போலும். அஞ்ஞானிக்குப் போதிப்பது வழலுக்கு இறைக்கும் நீர் போலாம்.

33. யாத்திரீகன். (ஜாக்ருதை) பாமரன் ஸர்ப்பம் தீண்டினால் படும் உபத்திரவத்தைப்

பார்க்கிலும் பல மடங்கு அதிகமாக ஜீவயாத்திரீகன் எறும்புக் கடியினால் கஷ்டப்படுவான். பூதக் கண்ணாடி மிகச் சிறிய வஸ்துவையும் மிகப் பெரிதாகக் காண்பிக்கும். அது போல அனுபவியினது தபோ ஒளியும், புத்தி கூர்மையும் மிகச் சிறியதையும் ரொம்பவும் பெரிதாக உணர்த்தும். ஆகையினால் ஜீவயாத்திரீகன் எல்லா விஷயங்களிலும் அதி ஜாக்ருதையுடனும், எக்காலும் விழிப்புள்ளவனாகவும் இருக்க வேண்டும்.

34. (ஷை ஆசமநீயம்) "த்விஜர்கள் எல்லாக் கர்மாக்களினது ஆரம்பத்திலும் ஆசமநீயம் ஸாவதானமாகச் செய்யவேண்டும். உள்ளம் கையில் உளுந்து ப்ரமாணம் தான் தீர்த்தம் இருக்கவேண்டும். அவ்வளவுக்கு மீறினால் ஆசமநீயம் ஸுராபானம் போலாகும்" எனச் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. இஃதைப் பாமரர்கள் ஒரு அற்ப விஷயமாகக் கருதுவார்கள். இஃது பேதமைத்தனமாகும். உனது எல்லாக் கர்மாக்களிலும் (வைதீகம், லௌகீகம்) நீ அதி ஜாக்ருதையுடன் இருக்கவேண்டுவதை முன்னோர்கள் உனது க்ஷேமார்த்தம் முன்னறிக்கைச் செய்துள்ளார்கள்.

35. <u>கெட்ட எண்ணம்:</u> ரப்பர் பந்தை மலை மீது அடித்தால் அது உன் மீதே பாயும். ஆத்மாநுபவி மீது கெட்ட எண்ணத்தையும், வார்த்தையையும் செய்கையையும் ஆரோபியாதே. அவன் மலை போல் ஒன்றையும் லக்ஷியம் செய்யாதிருந்த போதிலும் உனது கொடிய நினைவும், பேச்சும், செய்கையும் உன்னை இப்பிறவியிலும், மற்றப் பிறவிகளிலும் கொல்லும். ஆகையினால் உனது வாலாட்டத்தை அவனிடம் காண்பிக்காதே.

36. <u>கெட்ட எண்ண ஆவி:</u> பிற ஜீவன்களிடம் கெட்ட நினைவு கொள்ளல், கொடிய செயல்கள், பின்புறம் கடிப்பது, அஸூயைப் படுவது, கோபம் கொள்ளல் இவைகளின் ஆவி தொத்து வியாதிகளினும் கொடிது. தொத்து வியாதிகள் பிறர்களை கொல்லுகின்றன. கொடியவனது ஆவி முதலில் அவனையே பல விதமாக உயிரைவைத்துக் கொல்லுகிறது. பரிகாரம் வைத்திருப்பவனிடம் தொத்து வியாதி நெருங்காது. யாத்திரையில் ஜாக்கிருதையாக இருப்பவனிடம் கெட்ட ஆவிகள் பரிணமிக்காது; நாசமடையும். ஆகையினால் கொடியவனே, இதற்கு மாறான நல்ல எண்ணத்தையும், செயலையும், ஸம்பாஷணையையும், ஆவியையும்

பின் பற்று. இஹ-பர க்ஷேமங்களை அடைவாய்.

37. அநுபவிகளைத் தீண்டல். சரீரத்தினுலோ, வாக்கினுலோ, மனத்தினுலோ 'பகவானே கதி, பரமாத்மப் பொருளே கதி' என திடநம்பிக்கை யுடன் ஜீவயாத்திரை செய்யும் அநுபவிகளிடம் துஷ்டனே! உனது வாலை நீட்டாதே-காண்பிக் காதே. உனது க்ஷேமார்த்தம் முன்னறிக்கைச் செய்கிறேன். ஐகாக்ரிய நிலையிலுள்ள பக்தனை நீ தீண்டுவதினுல் உனது இரு கால்களையும் நீயே வெட்டிக்கொள்ளுவாய். தியான நிலை யிலுள்ள யோகியைத் துன்புறுத்து வாயாகில் உனது இரு கைகளையும் நீயாகவே துண்டித் துக்கொள்வாய். ஸமாதி அவஸ்தையிலுள்ள ஞா னியை நீ தூற்றுவாயாகில் உனது தலையை நீயே அரிந்துகொள்ளுவாய். இவைகளை ஞாபகத் தில் வைத்துக்கொள்ளு.

38. அநுபவிகளைப் பின்பற்று. அவர்களி னது உபதேசங்களைக் கடைப்பிடி. அவர்கள் காலம் கழிப்பதைக் கவனி. அவர்களுக்கு 'உடல் பொருள், ஆவி' களுடன் உதவிசெய். இவைகளினுல் உனக்கு ஏற்படும் பலங்களை அறிவிக்கின்றேன். ஐகாக்ரிய நிலையில் உள்ள வனுக்கு நீ உபகரிப்பது ராஜபதவியைக்

கொடுக்கும். தியான நிலையில் உள்ளவனை நீ ஆதரிப்பது மஹாராஜ பதவியைத் தரும். ஸமாதி அவஸ்தையில் ஸஞ்சரிப்பவனுக்கு திருகரணங்களினாலும் நீ தொண்டு புரிவது உன்னைக் குபேரனாகச் செய்யும். உனக்கு ஏற்படுகின்ற இஹ-பர க்ஷேமத்தைக் கவனி.

39. ஆஞ்ஞா சக்கரம். ஸோதரனே! பகவானது ஆஞ்ஞா சக்ரம் கனவிலும் தூங்காது. அஃது அறியாது ஒரு ஜீவனும் ஒரு காரியத்தையும் செய்ய இயலாது: 'அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்' என்பது மூத்தோர் வாக்கு. அரசனது உத்திரவு அவஸரத்தில் இருக்கும். பகவானது ஆஞ்ஞை மெதுவாக இருக்கும். அரசனது தண்டனை மேலெழுந்தவாரியாக, சரீரத்தைப் பற்றியதாக இருக்கும் பகவானது தண்டனை ஆழ்ந்ததாகவும், சரீரம், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவ்வைந்தைப் பற்றியதாகவும் இருக்கும். உனது தப்பிலித்தனத்தினால் நீ அரசனிடமிருந்து தப்பிவிடலாம். மேல்-கீழ், உள்-வெளி, எங்குமுள்ள பகவானது சக்ரத்தினிடமிருந்து கனவிலும் நீ தப்பமுடியாது. இப்பூவுலகு ராஜ, மஹாராஜ, ஸர்வாதிகாரிகளினது செங்கோல்களைப் பார்க்கிலும் எங்கும்

வியாபித்துள்ள, ஸர்வ சக்திவாய்ந்த, எக்கா லும் விழிப்புள்ள பகவானது ஆஞ்ஞாசக்ரம் கோடிக்கணக்காக வலுக்கொண்டது.

40. ஷை. (துஷ்ட நிக்ரகம், சிஷ்டபரி பாலனம்) ஓர் பெரியோர் பறைசாற்றியுள்ள தின் ஸாரத்தைத் தாஸன் அடியில் அறிவிக் கின்றனன்:—

அதி உத்கடமான பாப, புண்யங்கள் இரண்டும் இவ்வுலகிலேயே ஜீவன்கள் மீது பலன்களைப் பொழிந்து விடுகின்றன. பரவு லகுக்கு பலன்களை அநுபவிக்கும் நிமித்தம் ஜீவன்களை அநுப்புவதில்லை. அவைகள் காரப்பதில்லை. இவைகள் (பாப, புண் யங்கள்) மூன்று வருஷங்கள் அல்லது மூன்று மாதங்கள் அல்லது மூன்று பக்ஷங்கள் (ஒருமண்டலம் அல்லது 45. தினங்கள்) அல்லது மூன்று தினங்கள்-இக் காலங்களுக்குள் ஜீவன்கள் மீது பலன் களை-செய்துள்ள பாப, புண்யங்களுக்குத் தக்கவாறு-கெடுதலாக அல்லது நல்ல தாகச்சொரிந்து விடுகின்றன.

மூன்று முகூர்த்தங்கள், மூன்று நிமிஷங்கள் நேரத்துக்குள் நற்காரியங்கள் செய்த புண்யவான்கள் மீது பகவான் கருணையை வர்ஷித்ததையும், கொடியவைகளைச் செய்த பாபிகள் மீது தீராத்தண்டனைகளை பகவானது ஆஞ்ஞா சக்ரம் செலுத்தியதையும் தாஸன் பல இடங்களில், பல தடவைகளில் அறிந்துளன். பகவானது துஷ்ட நிக்ரக, சிஷ்டபரிபாலன சக்திகள் சாஸ்திரங்களில் குவியலாக உள்ளன.

41. குறிப்பு (விவாஹம் முதலியன) நம்பர் 42. முதல் 70. முடிய "விவாஹம், விவாஹ தத்வம், வம்சோற்பத்தி, உத்தம-அதம தம்பதிகள்......" முதலியன பற்றிச்சில விஷயங்கள் சுருக்கமாகக் கூறியுள்ளோம். சாஸ்திரங்களை ஊடுருவிக் கவனிக்கின், பரம்பொருளினது அல்லது விராட் ஸ்வரூபத்தினது அல்லது ஹிரண்ய கர்ப்பத்தினது அல்லது சக்தி ஸ்வரூபத்தினது அல்லது பகவானது ஓர் லீலா விசேஷத்தினால் ச்ருஷ்டமான விரிந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தென்பதும், தனது லீலா ச்ருஷ்டனைக்கு அநுகுணமாக முதன்முதலில் ஆண் ஜாதி, பெண் ஜாதிகளான இரு ஜாதிகளை மாத்திரம் பகவான் சிருஷ்டித்தனரென்பதும், இவ்விரு ஜாதிகள் மூலமாகவே பலவகை ஜீவன்கள்

(செடி-கொடிகள், விருக்ஷங்கள், பறவைகள், மிருகங்கள், மானிடர்கள் முதலான பிறவிகள்) மாயாப் பிரபஞ்சத்தின்கண் தோன்றியுள்ள தென்பதும், பல லக்ஷக்கணக்கான ஜன்மங்களுக்குப் பிறகே நர ஜன்மத்தை ஜீவன் எடுத்துள்ள தென்பதும், நர ஜன்மங்களிலிருந்து தான் பல வகை ஜாதிகள் தம் தம் கர்மாக்களினது நிமித்தம் உண்டான தென்பதும் நன்கு புலப்படுகின்றன. மேற்கூறியுள்ளபடி, ச்வதேஜம் அண்டஜம், உத்பித்ஜம் முதலான ஸகல பிறவிகளுக்கும் ஆதி காரணம் ஆண்ஜாதி, பெண் ஜாதியான இவ்விரு ஜாதிகள் தானகும். இவ்விரு ஜாதிகளினது பரஸ்பரம் ஒற்றுமையினலும், அன்பினலும் உலகம் மேன்மேலும் விருத்தி அடைந்து வருகின்றது. இவ்விரு ஜாதிகளும், பரஸ்பரம் வேற்றுமையுடன் இருந்திருக்குமானல் விரிந்த உலகம் எங்கே? பல வகை ஜாதிகள் எங்கே? பல வகைப் பிறவிகள் தான் எங்கே? பகவானது லீலா விசேஷத்தினலோ அல்லது மாயையினலோ அல்லது அனுத்ம அஸுரர்களினது சேஷ்டையினலோ அல்லது யுகாதிகளினது தர்மத்தினலோ மூலகாரணமான இவ்விரு ஜாதிகளுக்குள் சிற்சில சமயம் பரஸ்பர ஒற்றுமையும், பற்பல சமயம் பரஸ்பர வேற்றுமையும் நடைபெற்றுள்ளன; நடைபெறுகின்றன. பரஸ்பர ஒற்றுமை

யினால் நல் ஸந்ததிகளும், பரஸ்பர வேற்றுமை யினால் கொடிய ஸந்ததிகளும் எல்லாப் பிராணி களுக்குள்ளும் ஜனித்திருக்கின்றன; ஜனிக்கின் றன. கொடிய ஸந்ததிகளினால் பலவித தாபங் கள் தேவர்கள், மஹரிஷிகள், கணங்கள் முதலான பலர்களுக்கு முன்யுகங்களில் ஏற்பட் டுள்ளவைகளைச் சாஸ்திரங்கள், புராணங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். இக்கலியிலோ, அதிலும் சென்ற சிலவருஷ காலமாக கொடிய ஸந்ததிகளினால் ஏற்பட்டு வருகிற பலவித யுத் தங்களையும், பல வித தாபங்களையும் முறையே கண் கூடாகப்பார்க்கின்றோம்; சரீரத்தினாலும், மனத்தினாலும் ஒரு நடுக்கத்துடன் அநுபவிக் கின்றோம். பேசிப்பயன் என்ன? வரைந்து தான் பயன் என்ன?

இவ்விரு ஜாதிகளினது (ஆண் ஜாதி, பெண் ஜாதி) பரஸ்பர ஒற்றுமையில் தான் உலக க்ஷேமம் உள்ளது. இவ்விரு ஜாதிகளுக் குள் ஒற்றுமை ஏற்படவும், ஒற்றுமை வாயி லாக நல்லோர்களினது, புண்யவான்களினது, அநுபவிகளினது தாபங்கள் சமனம் அடைய வும், கொடியவர்களினது, துஷ்டர்களினது, பாதகர்களினது குணங்கள் சீரடையவும், இனி இவ்விரு ஜாதிகளுக்குள்ளும் பரஸ்பர வேற் றுமை ஏற்படாதிருக்கவும், நல் ஸந்ததிகள்

ஜனிக்கவும், விரிந்த உலகின் மீது ஸர்வ சக்தி வாய்ந்த பகவான் ஸகலவித க்ஷேமங்களைப் பொழியவும் ஹ்ருதய பூர்வகமான ஓர் பிரார்த் தனையுடன் சில விஷயங்கள் வரைவதை ஜீவ யாத்திரீகர்களும், மற்றும் பாமரர்களும் கவனிப் பது நலம்.

சில இடங்களில் தாஸன் ஹாஸ்ய ரஸத் தை இவ்விரு ஜாதிகளுக்குள் கையாண்டுள்ள தாக யாத்ரீகர்கள் எண்ணவேண்டாம். முன்பு உலகில் நடைபெற்றுள்ளவைகளை, இன்று நடைபெறுகின்றவைகளைத்தான் தாஸன் குறிப் பிட்டுள்ளனன். இக்குறிப்பின் முடிவில் ஸோதர ஸோதரிகளான இவ்விரு ஜாதியினர்களும் நல் லவைகளைப் பின்பற்றித் தீயவைகளை வேரறுக் கப்பிரார்த்திக்கின்றோம்.

42. விவாகம், ஒரு கல்யாண வாயிலாக அனந்த கல்யாண குணங்கள் அடங்கிய பரம் பொருளை அடையவேண்டும். அஃதின் கண் ரமிக்கவேண்டும். அதினுள் லயிக்கவேண்டும். உண்மையான விவாஹம் என்பது ஜீவாத்மா-பரமாத்ம ஐக்கியமாகும். சிற்றின்ப ருசியை விருத்தி செய்வதற்காகவும், பொருள்களையும், பண்டங்களையும், கொள்ளை கொள்வதற்காவும்,

பிள்ளை—பெண்களை மிதமீறிப்பெறுவதற்காகவும் ஸம்பந்தம் செய்வது விவாஹமாகாது. பெரும்பாலும் இச்சம்பந்தம் ஸம்பந்தத்தினின்று நழுவி விபரீத பந்தங்களுக்குக் காரணம் ஆகின்றது.

43. விவாக தத்வம்: விவாகம் என்பது பரஸ்பரம் கேவலம் க்ரீடாமிருகமாக ஜன்மத்தை உபயோகித்து ரமிப்பதற்காக ஏற்பட்டதல்ல. உண்மையில் ஒவ்வொரு ஜீவனும் பெண் உருவம்தான். பகவான் ஒருவரே ஆண் உருவம். சரியான விவாகம் என்பது மேலே (42-வது நம்பரில்) கூறியபடி ஜீவாத்ம-பரமாத்ம ஐக்கியமாகும். இவ்விதம் பல அநுபவ கவிகள் பாடியுள்ளனர்கள். மிதமீறிய வரதக்ஷிணை, சீர் வரிசைகள் இன்னும் பற்பல உபத்திரவங்களுடன் கூடிய அதி பால்ய விவாகம் தெய்வ சம்பந்த, சாஸ்திரீய விவாகமாகாது; மறப்பாச்சிக் கல்யாணமாகும்; தவிர்த்து கலிகாலக் கோலக் கல்யாணமாகும். மேலும் இவ்விதக் கல்யாணம் அதற்கு மாறான துக்கத்தை தம்பதிகளுக்கும், பெற்றோர்களுக்கும் தற்காலம் அதியாகக்கொடுத்து வருவது பிரத்தியக்ஷம். காரணம் பொருளாசைக் காற்றுகும் என்பதை யாவரும் அறிவார்கள்.

பிரும்மசரியத்தைத் திட நம்பிக்கையுடன் அவலம்பித்து, பகவானை இடைவிடாது ஆராதிக்கப் பிரேமைகொண்ட ஸ்திரீ, புருஷர்களுக்கு விவாகம் தேவையில்லை. விவாகித்தாலும் பந்தமாகவே முடியும். சிற்றின்பத்தை ஒருவாறு அடக்க முடியாத ஜன்மாக்கள் ஒருவன், ஒருவளுடன் இருந்து ரமித்து காலத்தைக் கழிக்கட்டுமென்று நினைத்தவர்களாக முன்னோர்கள் விவாக தர்மத்தை விதித்தனர்கள். அவ்விதம் அவர்கள் வரையறுத்திருந்தாலும் தற்காலம் அநேகமாக ஸ்திரீ, புருஷர்கள் சிற்றின்பத்தை அடக்கச் சக்தியற்றுப் பரஸ்பரம் பலர்களை அநுபவிக்கப் பிரியங் கொள்ளுவதும், தேடி நாடுவதும், அநுபவிப்பதும், பிற்பட்டு உத்தம நர ஜன்மம் எடுத்த சரீரத்தையும், ஆத்மாவையும் ஹத்தி தாங்களே செய்து கொள்ளுவதும் அருவெறுக்கத்தக்கன. இவைகளுக்குக் காரணங்கள் பகவத் விஷயத்தில் ஈடுபடாமையே; கெட்ட சங்கத்தை நாடுவதே; பெரியோர்களினது சரித்திரங்களை மனதில் பதிப்பிக்காததே; நற்காலங்களைச் சரிவர உபயோகிக்காததே ஆகும்.

44. <u>வம்சோற்பத்தி</u>: 'புத் என்கிற நரகத்தினின்று கரை ஏறப் புத்திரன் அவசியம்' என

வெளியிலே சஞ்சரிக்கின்ற தர்ம சாஸ்திரக் காரர்களது உபதேசத்தைக் கேட்டது போதும். இஃது பால பக்தர்களுக்குப் போதனையாகும். இஃதைப் பின்பற்றி ப்ரும்ம சிருஷ்டனையை யாத்திரீகர்கள் கைக்கொள்ளவேண்டாம். நாம் நமது பெற்றோர்களினது அதி ஆகாரத்தினால் ஏற்பட்ட சிற்றின்ப வாயிலாக அதி ஆபாஸ இடமிருந்து பிறவிகளை அடைந்திருக்கிறோம். இஃதை ஒருவரும் மறைக்கமுடியாது. மாயாப் பிரபஞ்சத்தில் நாம் துவந்துவங்களினால் தாக்கப்படுவது போதாதா? நாம் ஜீவன்களை இன்னும் ஒரு தாயாரின் வயிற்றில் புகுத்துவோமானால், நாமும் பற்பல தாயார்களின் ஸ்தன்னிய பானத்தை எதிர்பார்க்கவேண்டியிருக்கும். ஜனத்தொகை கணக்கு ஜீவயாத்திரீகர்களினால் அதிகப்படவேண்டாம். முடிவில் ஒன்று கூறுவோம். ஸ்ரீ சங்கராச்சாரியார், பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகாநந்தர் முதலிய பல மகான்கள் புத்திரர்களைச் சிருஷ்டிக்காது அத்வைதப் பொருளின் கண் ஐக்கியம் அடைந்திருப்பது பிரசித்தம்.

45. தம்பதிகள்: மனைவி பதியைத் தெய்வமாகவும், புருஷன் மனைவியை லோகப் மாதாவான சக்தி ஸ்வரூபமாகவும் பாவித்து,

பகவானைப் பஜித்துக்காலங்கழிக்கும் தம்பதிகள் பாக்கியவான்கள். தங்கள் வம்சத்தில் பக வானைப் பஜிக்கவும், உலகுக்கு உதவவும், வைத் திய சாலைகளை நாடாததும், நியாய ஸ்தலங் களில் தள்ளாடாததும் ஆன சந்ததிகள் ஜனிக் கச்சுகிக்கும் தம்பதிகள் பாக்கியவான்கள். அத் தம்பதிகள் வசிக்கும் இல்லம் கைலாஸமாகும்; வைகுண்டமாகும்.

46. ஷை: சில விடங்களில் தாஸன் கவனித்ததைக் கூறுகின்றனன். புருஷன் பக வானை வழிபடுகிறான்; பார்யை அதை வெறுக் கிறாள். சில இடங்களில் பார்யை ஜபம், தியானம் முதலான பகவத் விஷயங்களில் ஈடு பட்டிருக்கிறாள்; புருஷன் அவைகளை அழிக்க முயலுகிறான். சில இடங்களில் பார்யைப் பக வானை ஆராதிக்கப் புருஷனை உத்திரவு கேழ்கி றாள்; புருஷன் அவளை விரட்டுகிறான். சில இடங்களில் புருஷன் பார்யையை இது விஷய மாகக் கூவுகிறான்; அவள் இவனைப் புடைக் கிறாள். இன்னும் சில இடங்களில் பகவத் விஷ யத்தில் நடு நிலையுடன் நிற்கின்ற தம்பதிகள் உண்டு. சில இடங்களில் இருவர்களும் இவ் விஷயத்தில் வெறுப்புடன் காலங்கழிப்பதுண்டு.

மேற்கூறப்பட்டவைகளில் ஒரு முறையும் சிரேபஸ்கரமல்ல.

பகவத் விஷயத்தில் இருபாலர்களும் ஈடு பட்டு அனுஷ்டிக்கவேண்டும். ஒருவர்க்கொரு வர் உதவிபுரிந்து கொள்ளவேண்டும். இம்முறை இருவர்களது பக்தியையும் விருத்தி செய்யும். ஒருவர் மாத்திரம் பக்தியில் ஈடுபட்டு மற்ருெரு வர் தூங்குவது சரியல்ல. உண்பதையும், குடிப் பதையும், தூங்குவதையும் மாத்திரம் ஒவ்வொ ருவரும் காலம் தவருது கைக்கொண்டு பக வத் விஷயத்தைத் தாயிலா-குழந்தையாகத் தியஜிப்பது நர ஜன்மத்தை எட்டியவர்களுக்கு நலமல்ல. இருபாலர்களும் பகவத் விஷயத்தில் ஈடுபட்டு ஆத்மலாபத்தை அடையப் பரம் பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

47. ஸம்ஸார ஸாகரம், ஸம்ஸார அரண் யம் எனும் சாஸ்திரப் பதங்கள் உனது மனைவி. யையும், சந்ததிகளையும் குறிப்பிடவில்லை. ஆனல் உனது காம, க்ரோத, லோபாதிகளினல் ஏற்படுகின்ற கொடிய அலைகளைக் குறிப்பிடுவ தாகும். ஸ்திரீக்கும் ஸம்ஸார ஸாகரம் உண்டு. இப்பத விஷயமாக இருபாலர்களும் சண்டை யிடவேண்டாம்.

48. ஸம்ஸார இன்பம்: கருடனது வாயில் ஸர்ப்பம்: ஸர்ப்பத்தினது வாயில் தவளை; தவளையினது வாயில் வண்டு; வண்டு வினது வாயில் புஷ்பரஸத்தேன். கூட, கஷாப் புக்கடையில் அஜத்தினது சிற்றின்ப மோப்பம். இவ்விதம் ஸம்ஸாரத்தில் இன்பம் இருக்கின் றது. மாய உலகின் விசித்திரத்தை யாத்ரீகன் கவனிக்கவேண்டும். ஜாக்ருதையுடன் இருந்து காலத்தைக் கழிக்கவேண்டும்.

49. பார்யாள் (வேற்றுமைத் தம்பதிகள்)

புருஷன்:— அடியே! ராமாயணம் கேட்டாயா? ஸீதையின் பதிபக்தியைப் பார்த்தாயா? இனி யாவது எனக்குக் கீழ்படிந்து நட.

மனைவி:— நன்றாகக் கேட்டேன் ராமாயணத் தை. ஸீதாயனம் வந்தால் ராமாயணச்சேதி தெரியும். பறந்துபோம். அது கிடக்கட்டும். ராமனைப் போல் நீ ஆகவிட்டு நான் ஸீதையாக இருந்து உனக்கு கீழ் படிந்து நடக்கிறேன்.

50. புண்யவதி: ஸாவித்ரீ—ஸத்யவான் நாடகத்திற்கு தானாகக் கிளம்பிப் போனாள்- ஓர் உத்தமி. புருஷன் மனைவியை 'ஸாவித்திரீ யின் பதிவ்ருதா தர்மத்தை நன்றாய் பார்த்

தாயா? நாடகம் நன்ருய் இருந்ததா? என விசாரித்தான். மனைவியின் பதில்;— புஸ்தகங்கள் தான் பேத்துகிற தென்று எண்ணினேன். பாகவதர்கள் தான் கத்துகிருர்களென்று நினைத்தேன். நாடகக்காரர்களும், ஸினிமாக்காரர்களும் கூட உனது காரியங்களையே எப்போதும் கவனிக்க சொல்லுகிருர்கள். போதும் போதும், நான் நாடகத்துக்குப் போன அழகு· வாயை மூடு.

51. உத்தமி: ஒரு புருஷனுக்கு ஒரு ஜன்மத்தில் ஒரு மனைவி நன்ருகப் பிணைக்கப்பட்டாள். அவளை 'உத்தமி' என அழைக்கலாம். புருஷனது ஸகல காரியங்களிலும் ஒற்றுமையுடன் நடப்பதில் அவளைப் புலி எனச்சொல்லலாம். ஒரு தினம் பிச்சைக்காரன் ஒருவனை புருஷன் 'சோம்பேறியாகக் காலங்கழிக்காதே' எனப்புத்திமதிகூறி அதட்டி அனுப்பினன். பிற வீட்டுக்குப் பிச்சைக்கேகின அவனைக் கத்திக் கூவினள்—உத்தமி. பிச்சையிடும் உத்தமி என நம்பி வந்தான்—பிச்சைக்காரன். 'என்னைவிடச் சுவாதீனம் இவருக்கு இவ்வீட்டிலில்லை. நான் அழுத்தமாய் சொல்லுகிறேன். பிச்சைகிடையாது. ஓடிப்போ' என்ருள். 'புருஷனுக்கு

முன்னாலேயே வந்த உத்தமி மனையாள்-இந்த அம்மா' என உரைத்துக் கொண்டு திரும்பினான்—பிச்சைக்காரன்.

52. தர்ம பத்நீ; ஒருவன் ஒருவளை மணம் புரிந்தான். அவனது மனையாளை 'தர்மபத்நீ' என அழைக்கலாம். ஒரு தினம் அவளது புருஷன் சில துஷ்டர்களினால் யாதொருகாரணமும் இல்லாது அவமானம் பலவிதமாகச் செய்யப்பட்டுத் தனது இல்லம்வந்து சேர்ந்தான். மனையாளிடம் இவைகளை அறிவித்துத் தனது சரீர, மனோ சிரமங்களைச் சற்று பரிகரிக்க வேண்டினான். தர்மபத்நீயினது பதிபக்தியைக் கவனியுங்கள். தனது புருஷனுக்கு அவமானம் செய்தவர்களை அவள் தன் வீட்டுக்கு அன்புடன் அழைத்து வந்தாள். உபத்திரவங்களையும், அவமானத்தையும் செவ்வையாகப் பொறுமையுடன் கிணக்கிட்டாள். அவர்களைக்கூவி 'என்னைப் பார்க்கிலும் எனது புருஷனிடம் உங்களுக்கு ஜாஸ்தியான ஸ்வாதீனம் கினவிலும் கிடையாது. நீங்கள் செய்த கொடிய காரியங்களை உங்கள் முன்பே எனது புருஷருக்கு நான் செய்தாலல்லாது என் நெஞ்சு வேகாது. பாருங்கள் இதோ, எனச் சத்தமிட்டு உபத்திரவங்கள் ஒன்றையும் விடாது யாவற்றையும்

தனது புருஷனுக்குச் செய்தனள். புருஷன் அடைந்த கதியைக் கேளுங்கள். வில்லம்பாலும், சொல்லம்பாலும் புந்திக் கிலேசமும், மனக்கிலேசமும் தாங்காது புருஷன் மறுஉடல் அக்ஷக்ஷணமே புகுந்தான். இவ்விதம் தர்ம பத்னீ ஏற்பட்டால் ஜன்மங்கள் பலவற்றை ஜல்தியில் எடுக்கலாம். பகவானே, உன் பிறப்போ ஒன்று; ஜீவனது பிறப்போ எண்ணத்தொலையாது.

53. பதிவ்ருதையாள்.

மனோன்மனீ :— அடியே! உன்னைப்பார்த்து வெகு நாளாச்சு. புக்காத்தில் சௌக்கியமாக இருக்கிறாயா? உன் மாமனார், மாமியார்களை வயது காலத்தில் சரிவரப் பார்த்துக் கொள்ளுகிறாயா? அவர்கள் ரொம்ப நல்லவர்கள். உனது ஆம்படையான் உன்னிடம் பிரியமாக இருக்கிறானா?

பதிவ்ருதையாள்: மனோன்மனீ! உன்னையும் பார்த்துப் பல வருஷமாச்சு. புக்காத்தில் நானிருக்கும் அழகை வாய்விட்டுச் சொல்ல வேண்டாம். போதும், போதும் இப்புக்காம். என் மாமனார், மாமியார் யமபட்டணம் போய் விட்டார்கள். ஏழெட்டு சிராத்தங்கள் ஆகி

விட்டன. அவர்கள் உயிருடன் இருந்தபோது நான் அவர்களிடம் இருந்த மரியாதைகள் தான் உனக்குத் தெரியுமே. அவர்கள் செத்த பிறகும் வருஷாவருஷம் கண்டபேர்களுக்கு சோறுபோடச் சொல்லுகிறான்—என் ஆத்துக் காரன். அவர்கள் செத்தும் என்னை விட வில்லை. என்கதியைப் பாரடி. ஆம்படையான் சேதியைச் சொல்லுகிறேன். காப்பியைக் கொஞ்சங்கூட குடிக்கல்லே. சோற்றை ஒரே வேளைத்தின்கிறான் வீட்டை விட்டு அசைகிற தில்லை. விதவையாக எப்போதும் உள்ளே கிடக்கிறான். என்னுடனும், ஒருவருடனும் பேச்சே கிடையாது. உலக ஆம்படையான் களாக என்னும்படையானில்லை. நான் செய்த பாபம் அநுபவிக்கிறேன். என் கஷ்டத்தை என்னடி சொல்வேன். நான் காப்பியை ஜாஸ் தியாகக் குடிக்கவேண்டியிருக்கு. சோற்றை மூன்று வேளை தின்க வேண்டியிருக்கு. அவனுக்குபதிலாகப் பல வீடு நுழைய வேண்டியிருக்கு. ஊர் சுற்றவேண்டியிருக்கு. ரொம்பவும் சத்தம் போடவேண்டியிருக்கு. அந்தப்பாதகன் என் கழுத்தில் எஃகு தாலி யைக்கட்டி முடிஞ்சு விட்டான்; வெடுக்கென்று அறுக்கமுடியல்லேயடி.

[குறிப்பு: நம்பர் 49: முதல் 53, முடிய 'பார்யாள்' புண்யவதீ, உத்தமி, தர்மபத்நீ, பதிவ்ருதையாள்' பற்றிச் சில விஷயங்கள் கூறியது மிகையாகாது, மூச்சு விட்டால் ஜீவன் போகும் அதற்குப் பெயர் நல்ல பாம்பு. ஓர் பிடி அன்ன மிடாள்; அவளது பெயர் அன்னபூர்ணத் தம்மாள். ஓர் தம்பிடித்தானமிடான்; அவன் பெயர் ஐசுவரியவான். நிரக்ஷரகுக்ஷி; அவனது பெயர் பிரும்மம். இப்பெயர்களைப் போல மேற்கூறிய ஐவர்களின் பெயர்களையும் பாவிக் கவும். இந்த ஐந்து விதவேற்றுமை தம்பதிகள் பூவுலகில் இனி ஜனிக்காதிருக்கப் பிரார்த்திப் பது யாத்திரீகர்களது கடமை.]

54. <u>ஸம்ஸார அரண்யம்.</u> மனைவி, பெண்கள், பிள்ளைகள் முதலிய நெருங்கிய பந்துவர்க் கங்களை முறையே ஆடைகள், ஆபரணங்கள், விளையாட்டு சாமான்கள் முதலியவைகளினால் கினவிலும் திருப்தி செய்யமுடியாது. விறகு களினால் அக்நியைத் திருப்தி செய்யமுடியாது. பல நதிகள் போய் கலந்தும் ஸமுத்திரம் திருப்தி அடையவில்லை. பல உயிர்களைப்பறி கொண்டும் யமன் சந்தோஷிக்கவில்லை. இவை களைப் போல் ஸம்ஸாரத்தில் ஒருவன் எல்லோ ரையும் திருப்தி செய்ய முயற்சிப்பது முடியாத

காரியமாகும். யாத்திரீகனே ஜாக்ருதையுடன் வாழ் நாட்களைக்கழி.

55. ஷி. சோதரனே! ஸம்ஸாரஸாகரத்தில் நிரம்பியுள்ள இன்ப-துன்ப அலைகளை ஆதிசேஷனாலும் கணக்கிட முடியாது. நெருங்கிய பந்துவர்க்கங்களை மிதமீறிய பொருள்களினாலும், சாமான்களினாலும், ஆபரணங்களினாலும் திருப்தி செய்தால் உனக்கு முத்தம் Kissing) முதலிய பல உபசாரணைகள் நடைபெறும். காலக்கேடுகளினால் உனக்குச் சக்தியில்லாது மேற்கண்டவாறு திருப்தி செய்ய இயலாது போனால் வாருகோலினால் ஸம்பாவனை கிடைக்கும். யாத்திரீகனே! ஸம்ஸார ஸாகரத்தில் முத்தமிடவேண்டாம்; சண்டையிடவேண்டாம். விருப்பும் வேண்டாம்; வெறுப்பும் வேண்டாம். நடைபெறும் இன்ப-துன்ப அலைகளை சாக்ஷிபூதமாக இருந்து கவனி. நெருங்கிய பந்துவர்க்கங்களிடம் பேச்சு, செய்கை, எண்ணம் முதலியவைகளில் ஜாக்ருதையாக இரு. பெரிய நதியில் கட்டைகள் ஒன்று சேர்ந்தது போல் ஸம்ஸார ஸாகரத்தில் பந்துவர்க்கங்கள் உன்னுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இஃதை மனதில் பதி. புளியம்பழமும் ஓடும் போலும், தாமரையிலையும் நீரும் போலும் வாழ்நாட்களை இன்பமுடன், தீரமுடன், சாந்தமுடன் கழி.

56. ஷி. ஒரு ஸந்நியாஸி ஒரு யாத்திரீகனை மானஸஸரஸில் சந்தித்து 'ஸம்ஸாரஸாகர இன்ப—துன்ப ருசியை அநுபவித்திருக்கிறீரா' என மிக அன்புடன் கேட்டார். யாத்திரீகனது பதில்:—

ஸம்ஸார ஸாகரம், ஸம்ஸார அரண்யம்— இவைகளில் உள்ள பலவித இன்ப—துன்பங்களை பல ஜன்மங்கள், பல வருஷங்கள் அநுபவித்துள்ளேன். இன்னும் பற்பல இன்ப-துன்பங்களை நான் இப்பிறவியில் அநுபவிக்க எனது ஸம்ஸாரம் குருவாக இருந்து கருணைபுரிகின்றனள். ஸம்ஸார ஸாகர விஸ்தீரணம், ஆழம் முதலியன ஸந்யாஸிகளுக்குத் தெரியாது. சாந்தப் பொருளினது ஆழத்தை உணர ஸம்ஸார ஸாகரருசி அவசியமன்றோ?

57. ஷி. ஒரு நகரத்தில் பெரிய கக்கூஸ் (Latrine) ஒன்றில் இரு புத்திமான்கள் புகுந்தனர்கள். ஒருவர் வினவியது:— இக்கக்கூஸினது மேல் புறத்தில் துர் நாற்றம் சகிக்கமுடியவில்லை. தயவு செய்து கீழ்புறத்தில் நல்ல வாஸனை தென்படுகிறதா எனச்சற்று கவனியுங்கள். மற்றொருவரது பதில்:— நான்கு புறங்களையும் நன்கு சுற்றி வந்து விட்டேன்.

துர்வாஸனைமயமாகத் தான் இருக்கிறது கக்கூவினது ஒரு புறத்திலும் சொற்பநல். வாஸனையை எவ்விதம் முகாமுடியாதோ அவ்விதம் ஸம்ஸார அரண்யத்தில் ஒரு திவிலே ஆனந்தமும் அடையமுடியாதென்பதை யாத்ரீகன் ஞாபகத்தில் பதிப்பிக்கவேண்டும். பிரும்மலாகரத்தை நோக்கி யாத்திரை செய். ஸம்ஸார ஸமுத்திரம் ஓர் திவிலேயாகத் தென்படும். இலைதை யாத்திரையின்கண் நன்கு உணர்வாய்

5?. புருஷன்—மனைவி. சிஷன் தம்புருவை நன்கு மீட்டினல் வித்வான் ஆநந்தமாகப் பாடலாம். வேலைக்காரன் யோக்யமாக நடந்தால் வியாபாரி நன்கு ஸம்பாதிக்கலாம். குமாஸ்தா நன்கு குறிப்பு எழுதிவைத்தால் வக்கீல் ஆழ்ந்து பேசலாம். கம்பவுண்டர் செவ்வையாக மருந்தைக் கலந்தால் டாக்டர் நல்ல கீர்த்தியை அடையலாம். சிஷ்யன் மனமுடன் சுச்ரூஷை செய்தால் குரு நன்கு ஆத்மநிஷ்டையில் ரமிக்கலாம். ஸம்ஸாரம் குடும்பத்தை அன்புடன் கவனித்தால் புருஷன் இக்கூட்டிலேயே ப்ரம்ம — ஆத்ம—ஐக்யத்தைப் பெறலாம். அப்புருஷன் உலகை மாயையினின்று கரையேற்றலாம்.

59. <u>சோதரிகளே!</u> புருஷனது தைய்வ வழிபாட்டுக்குக் குந்தகமாக நிற்கவேண்டாம். எவ்வளவுக் கெவ்வளவு இவ்விஷயமாக பதிக்கு உதவிபுரிவீர்களோ அவ்வளவுக்கு பகவ தருளைப் பெறுவீர்கள். சீர், சிறப்புகளைப் பேசிய நாட்கள் போதும். பிறர்கள் கண்களை உங்கள் மீது பதிப்பிக்க உதவிய ஆபரணங்கள் போதும். வாசற்பக்கத்தில் யமன் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறான். கொல்லைப் பக்கத்தில் கீழ் பிறப்புகள் கூவிக்கொண்டிருக்கின்றன. இவர்களிடமிருந்து தப்பவேண்டும். பதிவ்ரு தைகளின் சரித்திரங்களைப் பாராயணம் செய் யுங்கள் பதிக்குக் கைங்கரியங்களைச் செய்யுங் கள். தேவர்கள் அளிக்கிற பதிவ்ருதா ஆபர ணத்தைச் சூட்டிக் கொள்ளுங்கள்.

60. <u>ஸ்திரீகள் கொடியவர்களென:</u> சகோ தரிகளே! "ஸ்திரீகள் புருஷர்களைப் பெரும் பாலும் க்ரீடா மிருகங்களாகக் கைக்கொண்டி ருக்கிறார்கள். இருபங்கு ஆகாரம் உண்கிறார் கள்......ஆடவர்களை வசியம் செய்யும் ஸாஹ ஸம் ஆறு பங்கு. காமத்தில் புருஷனைப் பார்க் கிலும் எட்டு பங்கு அதிகம். விறகுகளினால் அக்நீ திருப்தியை அடைவதில்லை. ஸாகரம் நதிகளினால். ஸமஸ்தப் பிராணிகளினால் யமன்.

இவ்விதமே புருஷர்களினுல் ஸ்திரீ. கொல்லும் வேங்கையையும், கொடிய ஸர்ப்பத்தையும் நம்பலாம்; ஸ்திரீகளை நம்பினுல் நிரம்பவும் உபத்திரவம். நெய் அக்நீயால் உருக்கப்படுவது போல ஸ்திரீகளால் புருஷர்கள் உருக்கப்படுகின்றனர்கள்......" என பற்பல சாஸ்திரங்களில் பற்பல இடங்களில் பற்பல வாக்கியங்கள் உங்கள் விஷயமாகப் பறைசாற்றப்பட்டிருக்கின்றன. நாம் அதிகமாக இவ்விஷயங்களைச்சாஸ்திரங்களினின்று எடுத்து விரித்து எனது சகோதரீ களினது மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. தாஸனது பாராயண காலங்களில் இவ்வாக்கியங்கள்தென்படும்போது தாஸன் வருத்தப்படுவதையும், பிரார்த்திப்பதையும் பகவான் அறிவான். இவ்வாக்கியங்களைப் பொய்யாகச்செய்ய நீங்கள் விருப்பங்கொண்டால் சுருக்கமாகச் சிலகூறுவோம். எங்கும் நிறைந்த பகவானை வழிபடவேண்டும். பூர்வகாலத்தில் இருந்த மகரிஷிகளினது தர்ம பத்னிகளை ஸ்மரிக்கவேண்டும். அவர்களின் நடைகளை மனதில் பதிப்பிக்க வேண்டும். அவர்களின் ஆசரணைகளை அநுஷ்டிக்கவேண்டும். அவர்களில் சிலரைக்கூறுவோம்:— ஸீதை, கார்க்கி, அருந்ததி, த்ரௌபதி, சந்திரமதி, தமயந்தி, வாஸுகி, சாரதாமணி. இவ்வுத்தமிகளின் பர்த்தாக்கள்

11

ஸ்ரீராமன், யாஞ்ஞ வல்கியர், வஸிஷ்டர், பஞ்ச பாண்டவர்கள், ஹரிச்சந்திரன், நளன், திரு வள்ளுவர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் முறையே ஆவார்கள். கூட, மீராபாய், சக்கு பாய் முதலிய பல உத்தம ஸ்திரீகளைப் பக்த விஜயத்தில் பார்க்கலாம்.

மேற் சொன்ன விஷயங்களையும், உத்தமி களின் பாதச்சுவடுகளையும் சோதரிகள் பின் பற்ற வேண்டும். இவைகளுக்கு மாருக இருந் தால், உங்கள் புருஷர்களை மிதமிஞ்சிய ஆடை-ஆபரணங்களுக்கும், வரதக்ஷிணை முதலான சீர் வரிசைகளுக்கும் 'ஊருதின் நோயைக் காக மறியாது' என உபத்திரவப்படுத்துவதாக இருந்தால், அவர்கள் உங்களிடம் கிலவிலும் உரைக்காது காவி உடை அல்லது கோவணம் தரித்து வெளி ஏறுவது நலமெனச் சாஸ்திரங் கள் புத்திமதி அளிக்கின்றன. கூறினல் புருஷர் களது ஜீவயாத்திரை கெடுபடுமென பெரியோர் உரைத்தனர் போலும். தாஸன் கதறுவதில் சற்றும் வெறுப்புக் கொள்ளாது தனிமையில் கொஞ்சம் யோஜிக்கவேண்டும். பதிவ்ருதை களின் மார்க்கங்களைப் பின் தொடரவேண்டும். அவர்களின் ஜாப்தாவில் உங்கள் பெயர்களும் பதிவடையவேண்டும். இவ்விதம் எங்கும் நிறைந்த பகவான் அருள்புரிய வேண்டும்.

61. ஸ்திரீகள் எவ்விதம் காலங்கழிக்க வேண்டும் என்பது பற்றிச் சிறிது கூறுவோம். ஸ்ரீமத் ராமாயணம், பாகவதம், பாரதம் முத லான புண்ணியக் கிரந்தங்களில் குவியல்களாக இருக்கும் உத்தம விஷயங்களை தினம் பிரதி பக்தியுடன் சில நேரம் பாராயணம் செய்யுங் கள். தாய் பாஷையை வெறுக்காது ஆங்கிலம் முதலிய இதற பாஷைகளைக் கற்பதில் வெறுப் படையுங்கள். ஆடவர்கள் பிற பாஷைகளைக் கற்று 'உத்தியோகமில்லாமை'யான உத்தியோ கத்தில் இருப்பது போதும். அந்த ஜாப்தாக் களில் உங்கள் பெயர்களும் தென்படவேண் டாம். சாஸ்திரங்களில் கதறப்பட்டிருக்கின்ற வைகளை அநுபவத்துக்குக் கொண்டுவர முடிந் தவரையில் பிரயாசை எடுங்கள். இவைகள் பகவானின் பாத கமலத்தில் உங்கள் மனதை சற்றும் சந்தேகமின்றி நாடச்செய்யும். இஃதன்றிக் கனவிலும் ஸ்திரீ ஜன்மத்தினின்று விடுதலையை ஸ்மரிக்க முடியாதென்பதை ஞாப கத்தில் பதியுங்கள்.

62. பதிவ்ருதை: பகவானை ஆழ்ந்து ஆராதிக்கவும் பதியைத் தெய்வமெனக் காண்கி ருள். எக்காலும் பதியைப் பின் தொடருகிருள். புருஷனது காரியங்களை நன்கு கவனமுடனும்,

அன்புடனும் செய்கிருள். பின் தூங்கி முன் விழிக்கிருள். ஆபத்காலத்தில் மந்திரியாகத் தைரியம் ஊட்டுகிருள். பொறுமையில் பூமா தேவியைப் பின்பற்றுகிருள். நட்பில் தாயாரா கப் புத்தி புகட்டுகிருள். ரமிப்பில் தாஸியாக இருக்கிருள். பகவத்விஷயத்தில் சிஷ்ஞகபணி விடை செய்கிருள். இவ்விதம் அவ்வுத்தமி பதிவ்ருதா ஆபரணங்களை எக்காலும், எங்கிலே யிலும் அணிகின்றனள். இம்மனையாளை வீட்டுக்கு வந்த மஹாலக்ஷ்மீ என அழைக்க லாம். இப்பேர்ப்பட்ட பதிவ்ருதையை மணந்த புருஷனே பாக்யவான்.

63. பதிவ்ருதா தர்மம். புல்லைப் பிடிப்பதி லும், நீரை விடுவதிலும், தோப்பிக்கரணம் போடுவதிலும், முன்பு குடிப்பதிலும், பின்பு உட்கொள்ளுவதிலும், க்ரீடா மிருகமாக ரமிப் பதிலும் பதிவ்ருதா தர்மம் இல்லை. பதியினது ஆத்ம நிஷ்டை, த்யானம், ஜபம், பூஜை, பாரா யணம், பஜனை முதலிய பகவத் விஷயங்களில் உள்ளன்புடன் உதவிபுரிவதே பதிவ்ருதா தர்ம மாகும்: [புல்லைப் பிடிப்பது—வைதீக காரியங் களில் தர்ப்பத்தைப் பதியின் மீது படும்படி பிடித்தல். நீரை விடுவது —ஸமாராதனை, சிராத்தம் முதலிய காலங்களில் பதியினது

கையில் தீர்த்தம் ருத்தாணியினுல் விடுதல். தோப்பிக்கரணம் போடுவது—பதியைப்பார்த்தும் திருப்தியில்லாது திடீரென எழுந்திருத்தல். முன்புகுடிப்பது. காப்பி, டீ, முதலிய பானங்களை முன்னதாக அருந்தல். பின்பு உட்கொள்ளுவது—பதியினது நிஷ்டை, த்யானம் முதலிய பகவத் விஷயங்களுக்குக் குந்தகமாக பதி உத்தரவிட்டும் போஜனம் செய்யாதிருத்தல். க்ரீடா மிருகமாக ரமிப்பது—மித மீறிய சிற்றின்பமுடன் பதியை சுகிக்க அழைத்தல்.]

64. மனைவியைக் கவனி. சோதரனே கேவலம் க்ரீடாமிருகமாகப் பரஸ்பரம் நினைத்துச் சுகித்துக் காலம் கழித்தது போதும். தொட்டுத் தாலிகட்டிய மனைவியை வீட்டு வேலைக்காரியாக எண்ணவேண்டாம். உபத்திரவங்கள் பல விதமாகச் செய்யவேண்டாம். கண்ணீர் சொறிய சொல்லம்பைப் பிரயோகிக்க வேண்டாம். சற்று தனிமையில் யோஜித்துப் பார். பத்நீயினது பெற்றோர்களின் பொருளைப் பல விதமாகப் பயமுறுத்திக் கொள்ளையிட்டதற்குப்பிராயச்சித்தம் என்ன செய்தாய்? அவளையும் பகவத் விஷயத்தில் ஈடுபடச்செய். அவள் மாருகக் காலத்தைக் கழித்தால்

அவளது பாபங்களை நீ அடைவாய். அநுபவிப்பாய். மாடுகள் நுகத்தடியில் ஸமமாக இருந்து வண்டியை இழுக்கவேண்டும். அது போல் தம்பதிகள் மன ஒருமையுடன் ஸமமாக ஜீவ யாத்திரை செய்யவேண்டும். ஒற்றுமை இல்லாது முன்னும் பின்னுமாக தம்பதிகள் யாத்திரை செய்வது நலமல்ல. பெரியோர்களிற் பலர் தங்கள் பத்னீகளை பகவத் விஷயங்களில் நன்கு ஈடுபட அழைத்திருக்கின்றனர்கள் வீட்டுக் காரியங்கள் கெடுபடுமெனக் கினவிலும் அஞ்சாதே. எல்லாம் நன்கு நடைபெறும்.

65. ஸினிமா பார்ப்பது. ஸோதரர்களே! ஸினிமா, ஸினிமா படங்களைப் பார்த்து கண்களையும், சரீரத்தையும் கெடுத்துக்கொள்ளாதேயுங்கள். கண் ஆஸ்பத்திரி டாக்டர்களுக்குச் சிரமம் கொடுக்காதேயுங்கள். முக்கிய இந்திரியமான உள் ஞான நேத்திரத்தை அடைந்து, ஆனந்திக்க வெளிக் கண்களினது உதவி யாத்ரீகனுக்கு அவசியம். பகவானை கண்ணாக் கண்டு ஆனந்திப்பதால் ஞானக்கண் துறக்கப்படுகிறது. திரை அசைவு படங்களினால் (Shaking Pictures) இரு கண்களினது நரம்புகள் (Optic Nerves) நாளடைவில் பழுதடைகின்றன. பரதேச மூக்குக்கண்ணாடி கம்

பெணிகளினது கஜானவை ஏழ்மை இந்திய மக்கள் நிரப்பவேண்டாம். மனையாளையும், சந்ததிகளையும் திருப்தி செய்ய ஸினிமாவுக்கு அனுப்பவேண்டாம். இது விஷயத்தில் ஆட்வர்கள் கெட்டது, கெட்டுவருவது போதும். பிற்கால உலக க்ஷேமம் நம் ஸந்ததிகளிடம் தான் இருக்கின்றதென்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. தம்பதிகள் ஸந்ததிகளுக்குப் பகவத் விஷயங்களைப் பால்யத்திலேயே ஊட்டுவது நிரம்பவும் முக்யம். பால்யத்தில் ஏற்படாத பக்தி மயானத்திலும் கிடைக்காது. ஸோதர-சோதரிகள் சங்கர ஜாதி அபிவிருத்திக்குக் காரணபூதமாக நிற்கவேண்டாம். நற்காலத்தை சிற்றின்பத்தைப் பெருக்குகின்ற தோற்றங்கள் வாயிலாக வீணாக்கவேண்டாம். ஸர்வவியாபக பகவான் தம்பதிகளுக்கும், சந்ததிகளுக்கும் நல் புத்தியை அநுக்ரஹிக்கட்டும்.

66. ஷி. ஒரு நகரத்தில் அழகு, கட்டுள்ள யௌவன ஸ்திரீ பட்டப்பகலில் பிச்சைக்காரனுக்குத் தனது வீட்டு வாசற்படியில் பிச்சையிட, பகவானுக்கு நிவேதனமான அன்னக்கவளத்தைக் காக்கைக்குப் போடத் தனது பதியைத் துணைக்கு அழைப்பது வழக்கம். கடும் நிசியில் ஸினிமா மூன்றாவது ஆட்டத்

துக்கு (Third show — 10—0 P. M. to 1—0 A. M.) தனது புருஷனைப் படுக்கையி, னின்று அந்த யௌவன மாது எழுப்பாது அவரது துணையை விரும்பாது வீட்டை விட்டுக் கொட்டகைக்கு (Theatre) ப்போகும் பாதையில் நடனம், பாடல் முதலிய இரு துணை களுடன் போவதும் வழக்கம். குடும்பவாழ்க் கையைத் துறந்து விலைமாதினது விருத்திக்கு ஆளாகாமல் இருக்கப் பகவத் பக்தி, பதிபக்தி முதலியன பெண்மணிகளுக்கு அவசியம். பதிவ்ருதா ஆபரணத்தை காற்றில் பறக்கவிடா திருக்க பகவான் பால்ய, யௌவன, வார்த்திக ஸ்திரீகளுக்குப் புத்தியை அளிக்கட்டும்; பக்தி யைப் பொழியட்டும்; நல் நடையை அநுக்ரஹிக் கட்டும்.

67. நல் ஜீவனம் அல்ல: ஆச்சாரியன் வேலை கள் செய்வதைப் பார்க்கும் சிஷன், புருஷன் வேலைகள் செய்வதைக் கவனிக்கும் மனைவி, பார் யாளைத் திருப்தி செய்யப் பாகசாலைத் தொழில் புரியும் புருஷன், ரூ—அ—பைசா வரவு சிலவு செய்யும் ஸ்திரீ, நன்கு உச்சரிக்கும் சக்தி இருந்தும் பாராயணம், ஜபம் முதலிய பகவத் விஷயங்களில் ஈடுபடாதவன், உச்சாரணப்பிழை களுடன் ஜபம் முதலியவைகளில் ஈடுபட்டவன்,

குயிலைப் போலுள்ள குரலை அடைந்தும் பகவத் பஜனை செய்யாத பெண்மணி, கெட்ட குரலுடன் பஜனையில் விருப்பமுள்ள ஆடவன், பலவித கெட்ட குணங்களுடன் மேல் ஜாதியில் ஜனித்தவன், அவ்விதமே கீழ் ஜாதியில் பிறந்தவன் முதலிய நர ஜன்மாக்களைப் பூமாதேவி சுமக்க நிரம்பவும் சிரமப்படுகின்றனள் இவ்விதம் தவறுதலாக ஜீவன்களை சிருஷ்டனை செய்யாதிருக்க ஜீவயாத்திரீகர்கள் சதுர்முக பிரும்மாவைப் பிரார்த்திக்கட்டும். பூமாதேவியினது பாரத்தைப் பகவான் நிவர்த்திக்கட்டும்.

68. <u>வித்யை, பக்தி அவசியம்.</u> ஆடவர்களைப் போல் பெண்மணிகளுக்கும் பகவத் விஷயமான வித்யை, பக்தி முதலியன அத்தியாவசியம். தம்பதிகள் ஒற்றுமையுடன் ஜீவயாத்திரை செய்யப்பகவதருள் அவசியம். வேற்றுமை பரஸ்பரம் தம்பதிகளுள் சற்று இருந்தாலும் பகவதநுக்ரஹம் இஞ்சிற்றும் ஏற்படாது. கீழ் குறிப்பிட்டுள்ள இரு விஷயங்களைக் கவனிக்கவும்.

1. <u>ஓர் அநுபவி:</u>—நாரீமணியே! பிரதி தினமும் துடப்பங்கள் ஜாஸ்தியாக வியாபாரம் செய்கின்றாயே. நமது சிறிய இல்லத்துக்கு இவைகள் ஜாஸ்தி தேவையில்லையே.

நாரீமணி:— எப்போதும் "சுத்தம், சுத்தம்" எனச் சொல்லுகின்றீர்கள். உங்களை உத்தேசித்துத் தான் வாருகோல்களுக்காக ஒரு தனி அறை கட்டப் பலமுறை நான் சொல்லிவிட்டேன். என் வார்த்தை உங்கள் காதில் விழுமா?

2. மற்றொரு அநுபவி :- க்ருகணியே! உண்மையில் நான் ஒன்றையும் விரும்பவில்லை. ஆனாலும் சிஷர்களும், போதனை அடைகின்றவர்களும், கௌரவம் வாய்ந்தவர்களும், முதிர்ந்த வயதுள்ளவர்களும், வித்யா நிபுணர்களும், மேலும் பக்த சிகாமணிகளான நாரீமணிகளும் என்னை அடிக்கடி மிகுந்த பக்தியுடன் நமஸ்கரிக்கின்றார்கள். இஃது நான் இருக்கும் இடத்திலும் போகும் இடங்களிலும் அடிக்கடி நேரிடுகின்றது. இவைகளை நீயும் கவனிக்கின்றாய். உன்னைத் தொட்டுத் திருமங்கல்யதாரணம் நான் செய்தது சுமார் நாற்பது வருஷங்கள் தான் ஆச்சுது. முற் கூறப்பட்டவர்களை போல் நீ மூட்டாள் அல்ல. உனது புத்தி சாதுர்யத்தை நிரம்பவும் மெச்சுகிறேன். இது காறும் உனது புருஷனை (என்னை) நீ நமஸ்கரிக்கவில்லை. ஒரு சம

யம் ஜன்மாந்திரத்தில் எனக்கு நீ எஜமான னாகவும், நான் உனக்கு அடிமையாகவும் இருந்திருக்கலாம். ஆகையினாலே இஜ்ஜன் மத்தில் நீ எஜமானி அம்மாளாகவும், நான் இவ்வீட்டுக்குக் குடிவந்தவனாகவும் இருக் கலாம். இவ்வித வாழ்க்கை நம்மிருவருள் இருப்பது ஆச்சரியமல்ல. எல்லாம் தெய்வ ஸம்மதம் தான்.

க்ருகணீ:— நீங்கள் சொல்வது எல் லாம் ஸத்யம் தான். உங்களிடம் வருகின்ற வர்கள் எனக்கும் தான் நமஸ்காரம் செய் கின்றார்கள். "உங்கள் ஸம்ஸாரம் நான்" என்று ஒருவரும் அறியாமலிருக்க நானும் தான் பல வருஷங்களாகப் பிரயாசைப் படுகிறேன். இஃது இஜ்ஜன்மத்தில் பலி யாது போலிருக்கிறது...... [மித மீறிய மந்தஹாஸத்துடன் க்ருஹணீ பாகசாலைக் குச்செல்லுகின்றாள். பதியினது புத்தி மதியை (Indirect Advice) ஏற்கவில்லை.]

குறிப்பு. பெண்மணிகளுக்குப் பதிபக்தி, பகவத் பக்தி—இவைகளுக்கு அநுகுணமான வித்யை முதலியன அவசியம் என்பதை மேற் கண்டுள்ள இரு விஷயங்களும் நிரூபிக்கின்றன. பதிவ்ருதா தர்மம் பாரத நாட்டில் முன்னாளைப்

போல் செழிந்தோங்க மேற்கூறியுள்ளபடி பகவத் பக்தி, நற்கல்வி முதலியன பெண்மணிகளுக்கு அத்யாவச்யமென வற்புறுத்துவோம். மாறினால் பெண்மணிகள் பதி "வ்ருதா" தான் எனபறை சாற்றும் காலம் வந்து விடுமென்பதை ஆடவர்கள் மனதில் பதிப்பிக்கட்டும்.

69. தியானமும், ஸ்திரீகளும்: பெண்மணிகள் பகவதாராதனையில் ஈடுபட்டுவிட்டால் தியான, ஸமாதி நிலைகளை அதிவிரைவில் எட்டுவார்கள். அவர்களுக்குப் புத்திசாதுர்யம் ஆடவர்களைப் பார்க்கிலும் பல மடங்கு அதிகம். ஆனாலும் அவர்கள் யாத்திரையில் நேரிடுகின்ற விருத்திகளை (Modifications of Mind) ஜாக்கிருதையுடனும், சாந்தமுடனும் கவனிக்க வேண்டும். தவறினால் கெட்ட விருத்திகள் யாத்திரையில் பற்பல இடையூறுகளை உண்டாக்கும். கெட்ட விருத்திகளை விரட்டவும், நல்ல விருத்திகள் நமது முயற்சியில்லாது ஏற்படவும் நிர்மல சித்தம் அவசியம். யாத்திரையில் புருஷனுக்கு விருத்திகளின் பகுத்தறிவு ஸ்திரீகளைப் பார்க்கிலும் ஜாஸ்தி என்றும், ஸ்திரீகளுக்கு விருத்திகள் ஏற்படுவது புருஷர்களை விட பல மடங்கு அதிகமென்றும் அநுபவிகள் கூறுவார்கள். சகோதரிகள் யாத்திரையில் சம்

பவிக்கின்ற விருத்திகளை நன்கு கவனித்துக் கெட்ட விருத்திகளை நிவர்த்திக்கவும், நல் விருத்திகளை ஹ்ருதயத்தில் ஸ்தாபிக்கவும் பகவானை அர்ப்பணத்துடன் கூடிய பிரார்த்தனை செய்துவந்தால் ஆடவர்களைப் பார்க்கிலும் பல மடங்கு அதி வேகமாகப் பிரணவ நகர்ப்பாதையில் சஞ்சரிக்கும் சக்தியை அடைவார்கள் இல்லை அநுபவத்தில் நன்கறியலாம்.

70. தற்காலம்: ஸ்திரீகளும், பிறப்பினுல் கீழ் ஜாதியினர்களும் முறையே புருஷர்களையும், பிறப்பினுல் மேல் ஜாதியினரையும் பகவத் பக்தியிலும், நற்கர்மாக்களிலும், நல் சிந்தனைகளிலும் வென்று வருவது பிரத்தியக்ஷம். ஆகையால் எங்கும் நிறைந்த பகவான் இவர்கள் மீது தனது அருள் பிரவாஹத்தைப் பொழிந்து வருவதும், பொழியப்போவதும் ஸத்யம். திராசின் மேல் பாகத்துக்குப் புருஷர்களும், மேல் ஜாதியினரும் சில வருஷ காலமாய் அதி விரைவாகப் போகப் பிரியங்கொள்ளுகின்றனர்கள். ஸ்திரீகளும், கீழ் ஜாதியினர்களும் திராசின் கீழ் பாகத்தில் இருக்கப் பிரியப்படுகின்றனர்கள். ஸர்வ வியாபியான பகவான் தீனதயாளு ஆனதால் கீழ் உள்ளவர்களை எல்லா விதங்களிலும், எல்லா நிலைகளிலும் ரக்ஷிக்கின்றார். இனி

யில் உள்ளவர்களை எல்லா விஷயங்களிலும் தள்ளுகின்றார். பகவானுக்கு பால், ஜாதி, அந்தஸ்து, வித்யை, கர்மா முதலிய பேதம் சற்றும் கிடையாது. பகவான் தன்னிடம் பக்தியுடன், நம்பிக்கையுடன், விடாமுயற்சியுடன் நெருங்குகின்ற கீழ் ஜாதியினர்களையும் தன்னுள் ஐக்யம் செய்ய அன்புடன் அழைக்கின்றனர். தன்னை நினையாத, தனது அடியார்களை தூஷிக்கின்ற கெட்ட காரியங்களில் காலத்தைக் கழிக்கின்ற மேல் ஜாதியினர்களை தன்னிடம் நெருங்க விடாது மாயை வலையை வீசுகின்றனர். மேலெழுந்தவாரியாகப் படித்துள்ள பண்டிதர்கள் 'ஸ்திரீகளும், கீழ் ஜாதியினர்களும் தாழ்ந்தவர்கள் தாம்' என்பதற்கு சாஸ்திர, ஸூத்திர ஆதாரங்களைத் தேடுவதும், பேசுவதும் வியர்த்தமே ஆகும்.

# 1—வது பிரார்த்தனை.

(ஸம்ஸார நாடகம்)

பகவானே! பரம்பொருளே! ஸகுண—நிர்குண ஸ்வரூபனே! இவ்விரண்டிற்கும் அப்பால் உள்ளவனே! இவைகளுக்கு ஆதாரமாக நிற்பவனே! ஸம்ஸார அரண்ய நாடகத்தை—வேறு ஒரு கதியிலாது நீயே கதியென திடநம்பிக்கையுடன்—பன்னிரெண்டாவது வயது முதல்—எக்காலும் எந்நிலையிலும் உன்னை ஸ்தோத்தரிக்கின்ற உன்னை ஆராதிக்கின்ற உன்னை பூஜிக்கின்ற உன்னை அர்ச்சிக்கின்ற உன்னை ஜபிக்கின்ற உன்னை தியானிக்கின்ற உன்னை நோக்கி அத்யாத்ம யாத்திரை செய்கின்ற உனது பாத கமலமீது எனது எல்லாவற்றையும் அர்ப்பிக்கின்ற உனது குகையில் நீயும் நானுமாய் ஏக போகமாய் ரகஸ்யமாய் ரமிக்கின்ற உனது அத்வைதப்பொருளின் கண் நீ வேறெனாது நான் வேறெனாது ஸதா லயிக்க ஓர் பிரார்த்தனை ஆழியில் ஸ்புடம் போடப்படுகின்ற உனது கையில் ஓர் கருவியாக நின்று எனது ஸகல கர்மாக்களையும் அர்ப்பண புத்தியுடன் அநுஷ்டிக்கின்ற விரிந்த உலகினது க்ஷேமத்தை எந்நிலையிலும் எக்காலும் எக்காரியங்களிலும் தேடு

கின்ற—உனது தாஸனுக்கு தாஸனுக்கு தாஸ
ஞன தாஸன் நடித்து நீ பார்த்து ஆனந்திக்க
ஆவல் கொள்ளுகிருயா?

உனது தாஸன் லக்ஷக்கணக்கான பிறவிகளில்
முன்பு நடித்ததை பார்த்து சந்தோஷித்தது
போதாதோ? கலிகாலக் கொடுமை மேன்மேலும்
வாட்டும் இத் துவந்துவ பிரபஞ்சத்தில் உனது
தாஸன் இன்னும் நன்கு நடிக்க வேண்டு மென
உனது விருப்பமா? அத்யாத்மீக ஆதிபௌதிக
ஆதிதெய்வீக அதி தாப நாடகத்தை—ஸம்
ஸார ஸாகர விஸ்தீரண மேடைமீது—தாஸன்
இப்பிறவியில் பல வருஷ காலமாக இரவு பக
லாக—சற்றும் ஓர் ஓழிவின்றி ஓர் துணையு
மின்றி—காரிருளில் வெட்ட வெளியில் உனது
ஸன்னிதானத்தில்—நடித்து வருவதை கண்
கொட்டாது பார்த்து வருவதில் கிஞ்சிற்றும்
அலுப்பு உனக்கு ஏற்படவில்லையா?

தாஸனது ஸம்ஸார—அரண்ய—நாடகத்
துக்கு ஸமமாக ஹிரண்ய நாடகத்தை அல்லது
மார்க்கண்டேய நாடகத்தை அல்லது வேறு
நாடகத்தை ஆயிரம் நாவு படைத்த ஆதி சேஷ
ஞலும் வர்ணிக்க முடியுமோ? உன்னுடன் பற்
பல தேவர்களும் கணக்கூட்டங்களும் மஹா

அநுபவிகளும் பக்த சிகாமணிகளும்—இமை கொட்டாது நின்று—தாஸன் ஒருவன் ஏகாந்தியாக ஒருவித உதவியுமின்றி—பலவித அரங்கங்களில் "பலவித த்வந்த்துவச் சுழல்களில் அதி வேகமாகச் சுற்றி அமிழ்வது—அநாத்ம பேய்களினது ஆவியின் ஆஞ்ஞையை சிரமீது ஏற்றி அறுவித சத்துருக்களுக்கு அடிமைகளான பந்துவர்க்க மஹாநதிகளினது மத்தியில் கரைகள் காணுது தவிப்பது—அவர்களுக்காக தாரித்ரிய அக்னியில் தகிக்கப்படுவது—அவர்களினது வில்லம்பு சொல்லம்பு மனேம்புகளினுல் முன்னும் பின்னுமாக குத்தப்படுவது—அநாத்ம அஸுரர்களினது அதி கூர்மை ஆயுதங்களினுல் மனம் சித்தம் புத்தி அகங்காரங்களில் சொருகப்படுவது—இன்ப துன்பங்களை பலவகையாகக் கொண்ட அநாத்மகிரிகளில் பல விதமாக மோதப்படுவது" முதலான பலவித நாடகங்கள் நடிப்பதைப் பார்த்து பரிதபித்து கண்ணீர் சொரிவதை நீ கவனிக்கவில்லையா? ஆத்ம ஹத்தி செய்து கொள்ளுகிற மஹாபாதக நாஸ்திகர்கள் உனது தாஸனது நாடகத்தை தலைவிரி சந்தோஷ முடன் கூர்ந்து கவனிப்பதை நீ உணரவில்லையா! தாஸன் ஸம்ஸார அரண்யத்தில் நடிப்பதையும்-நீ பார்த்து ஆனந்திப்பதையும்—எந்த தேசத்திலாவது

ஏந்த விஞ்ஞானியினுலாவது படங்களெடுத்து வெள்ளித்திரையில் காண்பிக்க முடியுமோ—அதற்குத் தகுந்தவாறு அறைகள் கட்டமுடியுமோ-அதற்குத் தகுந்த யந்திரங்களை சிருஷ்டிக்கமுடியுமோ?

இவைகளை எல்லாம் நீ பிரத்தியக்ஷமாக தாஸனது ஹ்ருதய குகையினது மத்தியில் நின்று 57. வருஷகாலமாக எக்காலும் விழித்துப் பார்க்கின்றாய். இனி வரப்போகும் ஜன்மங்களினது நாடகங்களையும் இஜ்ஜன்மத்திலேயே தாஸன் நடித்து விடவேண்டுமென்பது உனது ஆஞ்ஞையா? அல்லது த்வந்துவ—மாயா—பிரபஞ்சத்தில் பிற ஜீவன்கள் பற்பல விதமாகச் செய்யும் பாபங்களுக்கும் துஷ்கர்மங்களுக்கும் பிராயச்சித்தமாக தாஸன் ஒருவனே அனுபவித்து நடிக்கவேண்டு மென்பது உனது விருப்பமா? அல்லது க்ருஹஸ்தாச்ரமியான தாஸன் ஒருவன் தான் ஸம்ஸார-அரண்ய—நாடகத்தை நடிக்கத் திறமையுள்ளவனென்பது உனது எண்ணமா? அல்லது தாஸனது அத்யாத்ம யாத்திரையில் பிரும்மாகார விருத்திப் பரிணமிப்பில்—தாஸனது மனோநிலைக்கு இவ்வித நாடகங்கள் அத்யாவச்யமெனும் எண்ணமுடன் மௌனம் சாதிக்

கிருயா? குஹஸ்வரூபியே! உனது சாந்நிதி யில் நன்கு யோஜித்துப்பார்.

பகவானே! உனது தாஸன் பல ஜன்மங்க ளாக—இஜ்ஜன்மத்தில் பல வருஷங்களாக— நடித்த ஸம்ஸார அரண்ய நாடகத்துக்கு இது காறும் நீ உனது தாஸனுக்கு ஸம்பாவனை செய் யவில்லை. பட்டங்கள் பதக்கங்கள் முதலிய விருதுகள் கொடுக்கவில்லை. தாஸனது நாட கச் சிறப்பைப் பற்றி கிஞ்சிற்றும் பிரா பல்யம் செய்யவில்லை. என் அப்பனே! மனத்தினுல் சிந்திக்கமுடியாத வாயினுல் சொல்ல முடியாத கையினுல் வரையமுடியாத ஸம்ஸார— அரண்ய-நாடக-தாபங்கள் பலவற்றினுல் மேற் கண்டவாறு உன்னிடம் அழுதழுது ஆள்பட்டு உளரிக் கதறிவிட்டேன். உன் பாதகமலங்களில் ஸகல ஐசுவரியங்களும் குடிகொண்டுள்ளன. லக்ஷ்மி தேவி, குபேரன் முதலியவர்களையும், காமதேனு, கல்பக விருக்ஷம் முதலியவைகளை யும்—தாஸன் நடித்த நாடகத்துக்காக—ஸம்பா வனையை வர்ஷிக்க—நீ ஆஞ்ஞாபிக்கவேண்டுவ தில்லை, தாஸனது நாடக சிரமபரிகாரத்துக் காக—கைலாஸம் அல்லது வைகுண்டம் அல் லது பிரும்மலோகம் அல்லது ஸ்வர்க்கத்தில்— தாஸனுக்கு சாந்தமான ஓர் இடமளிக்க ஒரு தேவனுக்கும் நீ உத்திரவு அனுப்பவேண்டுவ தில்லை.

பரமாத்மப் பொருளே! உனது தாஸனது ஜீவாத்மா ஸம்ஸார—அரண்ய—நாடகம் உனது ஆஞ்ஞைப்படி உனது ஸன்னிதானத்தில் நடித்து நீ ஆனந்தித்தற்கு தாஸனுக்கு ஸம்பாவனை ஒரு விதமாக செய்ய விஞ்ஞாபனம் செய்து கொள்ளுகிறது. அஃது நியாயமானால் அங்கீகரித்து அருள்புரியத் தாஸன் ஹ்ருதய பூர்வகமாக பிரார்த்திக்கின்றனன். அப்பிரார்த்தனையாவது:—

எனது தாஸனே! உனது ஸம்ஸார அரண்ய நாடகத்தை உடனே நிறுத்துக போதும். என உன் வாயினால் உரைத்து விடு.

உனது தாஸனும் அகண்ட பிரும்ம ஸாகரத்தில் கொடிய ஸம்ஸார ஸாகரத்தை ஒரு திவிலையாக உணர்வான், ஆனந்திப்பான். நர்த்தனம் செய்வான். உனது சாந்த குகையின் கண் அமிழ்வான். ஓர் ஓழியில் ஸதா ஒடுங்குவான். பிறகு.........மௌனம் சாதிப்பான். ஸர்வ சக்தி வாய்ந்த பரம்பொருள் ஸகல ஜீவன்களேயும் ஸம்ஸார தாபங்களின்று விடுவிக்கட்டும். ஸகல ஜீவன்களும் விடுதலைக்குத் தேவையுள்ள யம நியமாதிகள், ஜப த்யான நிஷ்டைகள், பிரார்த்தனை முதலியவைகளை கடைப்பிடிக்கட்டும்.

ஓம் சாந்தி: | ஓம் சாந்தி: | ஓம் சாந்தி:||

# 2—வது பிரார்த்தனை.

(உலகக்ஷேமம்.)

<u>தற்கால உலகம்.</u> "ஸர்வம் பிரும்மமயம் ஜகத்" (உலகம் முழுவதும் பிரும்மமயமாக உள்ளது) என மஹரிஷிகள் முற்காலத்தில் பறைசாற்றினார்கள். அந்த பிரும்மத்தினது ஸ்வரூபத்தை உபநிஷத்துகள் "ஸத்யம் ஞானம் அனந்தம் பிரும்ம—ஆனந்தரூபம் அம்ருதம் யத்விபாதி—சாந்தம் சிவம் (மங்களம்) அத்வைதம்......" என வர்ணித்துள்ளன. தற்கால உலகம் மேற்கண்டவைகளுக்கு அநேகமாக மாறுதலுடன் இருக்கின்றது. கடந்த பல வருஷங்கள் (1914—வது ஆண்டு முதல்) பற்றி நாம் பேசுவதில்யாதொரு பிரயோஜனமுமில்லை. 1936—வது ஆண்டு முதல் அந்த ஒரு வித "ஸர்வம் பிரும்மமயம் ஜகத்" ஆனது கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் "ஸர்வம் காமமயம்-ஸர்வம் க்ரோதமயம்—ஸர்வம் லோபமயம்—ஸர்வம் மோஹமயம்—ஸர்வம் மதமயம் - ஸர்வம் மாத்ஸர்யமயம்' என ஆறுவிதமய ஜகத்துகளாக மாறியுள்ளது. இந்த ஆறுவிதமய ஜகத்துகளும் முடிவில் "ஸர்வம் துக்க-சோக-மயம்ஜகத்" ஆக மேன்மேலும் பரிணமிப்பதை

யும், அதனுல் ஜீவன்கள் வாடி வதங்கி வருவ தையும் நாம் யாவரும் கண் கூடாகப் பார்க்கின் ரேம். இந்த துக்க—சோகமய ஜகத்தை நிர் மூலம் செய்ய, ஆனந்தமய மாக்கப் பரிகாரம் தேடாது விழிக்கின்ருேம்; அநுபவிக்கின்ருேம். இந்த ஆறுவித (காமம், க்ரோதம் முதலியன) ஜகத்துகளினுல் வசீகரிக்கப் பட்ட ஜீவன்கள் மேற்கூறியுள்ள பிரும்மமய ஜகத்தையும், அதன் ஸ்வரூபமான ஸத்யம், ஞானம்..... முதலிய வைகளையும் பொய்யாக நினைக்கின்றன; தடு மாறுகின்றன.

யுத்தங்கள். ஞானத்தைப் போதிக்கின்ற, ஆனந்தத்தைப் பொழிகின்ற, சாந்தத்தை அநுக்ரஹிக்கின்ற, மங்களத்தைக் குவிக்கின்ற ஸமஸ்த க்ஷேமங்களையும் வர்ஷிக்கின்ற அந்த ஸத்ய, அநந்த, அம்ருத, பிரகாச, அத்வைதப் பொருளான பிரும்மத்தைப் பெரும்பாலும் ஜீவன்கள் பொய்யாக நினைத்து காம க்ரோதா திகளான அறுவித சத்துருக்களுக்கும், அவை களினது உறவினங்களுக்கும் அடிமைகளாகி விட்டன. இதனுல் எல்லாத் தேசங்களிலும், ராஜதானி களிலும், நகரங்களிலும், கிராமங்க ளிலும், வீடுகளிலும், கூட்டு குடும்பங்களிலும் பற்பல யுத்தங்கள் விருத்தியாகி உள்ளன; மேன்

மேலும் விருத்தியாகி வருகின்றன. அவைகளில் சிலவற்றைக் கூறுவோம் ஒவ்வொரு தேசமும் மற்ற தேசங்களை ஆக்ரமிக்கப் பேராசையுடன் இருக்கின்றது. அதற்குத்தேவையான ஆகாயக் கப்பல்கள், பீரங்கி வண்டிகள், வெடிக்குண்டு கள், அணுக்குண்டுகள், தூர தேசத்துக்குப் பறக்கும் குண்டுகள் முதலியவைகளை சிருஷ் டிக்கின்றது. உலகை அழிப்பதே மோக்ஷ மெனக் கருதுகின்றது. இதற்காக ஏராளமான பொருளை தாராளமாக விநியோகம் செய்கின் றது. ஒவ்வொரு ராஜதானியும் மற்ற ராஜதானி களில் வியாபிக்க ஆவல் கொண்டு எல்லை விப ரங்களைத் தேடுகின்றது. வாயினாலும், கையி னாலும் போர்களைக் கிளப்புகின்றது. நகரம், கிராமம், வீடு, குடும்பம் முதலியவைகள் "நான் என்னுடையது, நானே தலைவன், நான் எதை யும் செய்வேன், எனக்கு எல்லோரும் அடிமை கள்......" எனும் அஹங்காரப் பேய்களை ஜீவன் கள் மீது வர்ஷிக்கின்றன. இவைகளினால் ராஜாக்களுக்கும்—பிரஜைகளுக்கும்,மேல் ஜாதிக்கும்-கீழ் ஜாதிக்கும், புருஷனுக்கும்-மனை விக்கும், மருமகளுக்கும் மாமியாருக்கும்...... மனம் வாக்கு காயம் மூலமாகப் போர்கள் சம் பவிக்கின்றன. மேலும், மதங்களுக்குள், கொள் கைகளுக்குள், நிறங்களுக்குள் பற்பல யுத்தங்

கள் பல வருஷகாலமாகப் பிரதி தினமும் நடை பெறுகின்றன. இந்தப் பலவித யுத்தங்களி ஞல் மிருகத்தனமாகக் கொலைகள், களவுகள், சுட்டுத் தள்ளுதல், வெட்டிக் குவித்தல், கூட கறுப்புச் சந்தைகள், லஞ்சப் பேய்கள் முதலிய கொடிய நடவடிக்கைகள் எல்லாத் தேசங்களி லும் தாண்டவ மாடுகின்றன. இந்த பலவித யுத்தங்களை ஜீவன்களினது இரு கைகளும் "நான் பெரிது—நீ சிறிது. நான் ராஜா—நீ அடிமை" எனப் பின்பற்றுதிருக்க வேண்டும். [ஒருவனது இடதுகை வலது கையைக்கூவி உரைத்தது:—வலது கையே! நான் சுத்தம் செய்யாது போனல் நீ எவ்விதம் சுசி ருசியுடன் போஜனத்தை உட்கொள்ளக்கூடும்?

வலது கையினது பதில்'— ஓய் இடது கையே! நான் உபவாஸம் இருந்துவிட்டால் உனக்குத் தோட்டிவேலை ஏது? ஜாக்ருதை.]

போர்களுக்குக் காரணம். பலவிதப் போர் கள் பெரும்பாலும் பல இடங்களில் முற்றிவரு வதற்குக் காரணம் யாது? பகவத் பக்தி மேன் மேலும் குன்றிவருவது, நாஸ்திகவாதம் விருத் தியாவது, குரு பக்திக் குறைவு, அநுபவிகளைத் தூஷிப்பது, யம நியமாதிகளான நற்கர்மாக்

களைத் தியஜிப்பது, பகுத்தறிவு இல்லாமை முதலியன காரணங்களாகும். க்ஷேமத்தைப் பொழிகின்ற பகவத் விஷயங்கள் அதிக்கிராக்கியாகவும், நாசத்தை வர்ஷிக்கின்ற காமாதி குணங்கள் அதி மலிவாகவும் சிலவருஷங்களாக இருப்பது முக்கிய காரணங்களாகும். கூட தற்காலம் (1947-வது ஆண்டு முதல் என உரைக்கலாம்) நாளுக்கு நாள், புதிய புதிய, கொடிய கொடிய இஸிம்ஸுகள் (Isms—அநாத்மக் கக்ஷிகள், கொள்கைகள்) எல்லாத் தேசங்களிலும் தலைவிரி கோலத்துடன் கிளம்பிவருகின்றன. இந்த அநாத்மக்கக்ஷிகள்நற்காரியங்களை பற்பல விதமாக மறைக்கின்றன: நற்காரியங்கள் பரிணமிக்காது செய்யப் பல விதமாகப் பின்புறமாகவும், முன்புறமாகவும் நின்று இடுக்கண் வலைகளை விசிருகின்றன: உலக க்ஷேம நிமித்தம் தனது எல்லாவற்றையும் தியாகம் செய்து, நிஷ்காமியமாக, நிர்வியாஜமாக, இரவு—பகலாக கல்லுறக்கமின்றி உழைக்கின்ற மஹாஉத்தமர்களிடம்அஸூயை,கோப தாபம்,மாற்சரியம் முதலான தீய குணங்களை மனம், வாக்கு, காயம் வாயிலாகச் செலுத்துகின்றன. இந்த அநாத்ம அஸுரர்களினது பலவிதசேஷ்டைகளினால்உத்பவிக்கின்ற பலவித இஸிம்களை ஆணிவேருடன் நிர்மூலம் செய்ய மிஸ்டிஸிஸம் (Mysticism

14

அத்யாத்மம்) ஒன்றே சக்தி வாய்ந்ததென்பதை அனுபவிகளும், பக்த சிகாமணிகளும், வித்யாநிபுணர்களும், பகுத்தறிவுள்ளவர்களும் ஹ்ருதயமுடன் ஒப்புவார்கள். மேலும் பல வித இஸிம்களும் அதிஸிம் (Atheism-நாஸ்திகம்) நரகத்தில் ஜீவன்களைத் தள்ளுவதைப் புத்திமான்கள் கவனிக்கவேண்டும்.

அந்தோ பரிதாபம், ஓங்கார ஸ்வரூபனுன ஸ்ரீ ஸுப்ரம்மண்யம் பிரும்ம ஸம்பந்தமில்லாத அநாத்ம அஸுரர்களை த்வம்ஸம் செய்வதற்காக ஆவிர்ப்பவித்த பாரதபூமியில்-உயர் தேவர்களான ஸ்ரீ ராமன், ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்த பாரத பூமியில்—வஸிஷ்டர், வாமதேவர், பரத்வாஜர், வியாஸர் முதலான மஹரிஷிகள் பிறந்த பாரத பூமியில்—ஹரிச்சந்திரன், இக்ஷ்வாகு, நளன், பரதன் முதலான ராஜரஷிகள் தோன்றிய பாரத பூமியில்—புத்தர், சங்கரர், ராமாநுஜர், மத்வாச்சாரியார் முதலான அவதார புருஷர்கள் தோன்றிய பாரத பூமியில்-வான்மீகி, காளிதாஸன், பர்த்ருஹரி முதலான தீர்க்கதர்சிகளான கவிகள் பிறந்த பாரத பூமியில்— அப்பர், ஸுந்தரர், ஞானஸம்பந்தர், மாணிக்க வாசகர், திருமூலர், திருவள்ளுவர், பட்டினத்தார், கம்பன், நந்தன், அருணகிரி,

தாயுமானவர், ராமலிங்கர் முதலான ஞானகவி கள் பிறந்த பாரத பூமியில்—குலசேகர ஆழ் வார் முதலான பல ஆழ்வார்கள், பல நாயன்மார்களான மஹான்கள் பிறந்த பாரத பூமியில்—தியாக பிரும்மம், முத்துஸாமி தீக்ஷி தர், சாமா சாஸ்திரிகள், போதேந்திராள், அய் யாவாள், ஸுப்ரம்மண்ய பாரதி, சைதன்யர், துக்காராம், தாது, ராமப்ரஸாத், ஸ்ரீ நாவிட்ட லர், புரந்தரதாஸ், கனகதாஸர் முதலான யோக கவிகள் பிறந்த பாரத பூமியில்—ஸ்ரீராம கிருஷ்ணர், விவேகானந்தர், பிரும்மானந்தர், ராஜா ராமமோகன் ராய், கேஷப் சந்திரஸேன் ரவீந்திரநாத் தாகூர், தயானந்தர், மஹாத்மா காந்தி முதலான ஞானிகள் தோன்றிய பாரத பூமியில்—ஸீதை, அருந்ததி, மைத்ரேயி, தம யந்தி, சந்திரமதி, திரௌபதி, வாஸுகி, சாரதாமணி, மீராபாய், சக்குபாய் முதலான பதிவ்ருதா சிரோமணிகள் பிறந்த பாரத பூமி யில்—வேதங்கள், உபநிஷத்துகள், ராமாயணம் பாகவதம், பாரதம், பகவத்கீதை முதலான உயர் கிரந்தங்கள் தோன்றிய பாரத பூமியில்—கிருஸ்து, ஸோக்ரடீஸ், பிதாகோரஸ், தாமஸ் எகெம்பிஸ், ப்ரதர் லாரென்ஸ், ஷேக்ஸ்பியர், மில்டன், பன்யான், ஸெயிண்ட் பிரான்ஸிஸ், கான்பிஸ்குயிஸ், டால்ஸ்டாய் முதலான

மஹாஞானிகளும் — வாக்னர், மண்டல் ஷோன், கான்கிரீவ், ஸெல்ஸஸ் முதலான யோக கவிகளும் — ஸெயின்ட் தெரஸா, அஞ்சேலோ முதலான யோக நாரீ மணிகளும் தோன்றிய மேனுடுகளில் — மஹம்மது, நவீம், மியான்கே டான்ஸேன், கபீர், ஜலாலுதீன் ரூமி, அமீர்குஸ்ரு, ரஹமட்கான் முதலான அநுபவகவிகள் பிறந்த இதர நாடுகளில் — நமது அதிருஷ்டம் 20-வது நூற்றூண்டில் ஜீவதசையுடன் இருக்கும் ஸ்ரீரமணமஹரிஷி, ஸ்ரீ அரவிந்த யோகி, ஸ்ரீ விரஜாநந்தர், ஸ்ரீ ஸர்வாநந்தர் ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதீ, யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி முதலான ஜீவன் முக்தர்கள் தோன்றிய பாரத பூமியில் — ப்ரொபஸர் ஸ்ரீ ஸர். ராதாகிருஷ்ணன். ஸ்ரீ ஸர். ஸி. வி. ராமன், இநாயத்கான் முதலிய (முறையே) தத்வ ஞானியும், விஞ்ஞானியும், யோக கவியும் பிறந்த பாரத பூமியில் — காலம் சென்ற தாதாபாய் நௌரோஜீ, ஸுரேந்திரநாத் பானர்ஜீ, பிரோஸிஷா மேத்தா, லோகமான்ய திலகர், ஸித்தரஞ்ஜன தாஸ், லாலா லஜபதி ராய் முதலான ராஜீய வாதிகள் பிறந்த பாரத பூமியில் — நமது இந்தியாவினது அதிருஷ்டம் ஜீவதசையுடனிருக்கும் ஸ்ரீ பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ பட்டேல், ஸ்ரீ ராஜன் பாபு, ஸ்ரீ ஸி. ராஜ

கோபாலாச்சாரியார், மௌலானா அஸாத் முத லான தேச க்ஷேம வாதிகள் பிறந்த பாரத பூமி யில்—மேற்கண்டுள்ளபடி பல வித யுத்தங்கள்-அரிதுக்கு அரிதான மானிடப் பிறவி எடுத் தோர்களிடம்-ஏற்படுவதும், பல வித இஸிம்ஸ் (அநாத்ம கக்ஷிகள்) தாண்டவமாடுவதும் மிகப் பரிதாபகரமாகும்; வெட்கப்படவேண்டிய காரி யமாகும்; தூற்றப்பட வேண்டிய விஷயமாகும்.

[குறிப்பு: இன்னும் பல உத்தமர்கள் பாரத பூமியிலும், இதற தேசங்களிலும் தோன் றியுள்ளனர்கள். பலர் மறைந்துள்ளனர்கள். பலர் ஜீவதசையுடன் இருக்கின்றனர்கள். நாம் அறிந்துள்ள அப்பெரியோர்களினது பெயர்கள் எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடுவோமாளுல் அதற்காக ஒரு தனி நூல் தேவையாகுமென்று எண்ணி இத்துடன் நிற்கின்றோம்.]

பரிகாரம்: எல்லாத் தேசங்களிலும் பல வித யுத்தங்கள், அதர்மங்கள், கொடிய செய் கைகள் அவைகளினுல் உத்பவிக்கின்ற கொடிய தாபம், நாசம், துக்கம், சோகம், பயம் முதலிய வைகள் வேருடன் அழியவும், ஒற்றுமை, தர்மம், நற்கர்மாக்கள் முதலியன விருத்தியாகவும், கீர்த்தனம், சாந்தம், யோகம், பக்தி, ஞானம்

முதலியன செழிந்தோங்கவும், இவைகள் வாயிலாக ஸமஸ்த ஜீவன்களும் ஸகல இஹ-பர க்ஷேமங்களை அடையவும் ஸத்ஸங்கம், பகவத் பிரார்த்தனை, பகவதர்ப்பண புத்தியுடன் கூடிய நற்கர்மாக்கள் அத்யாவச்யங்களாகும். இவைகளே கெட்டவைகளை நிர்மூலிக்கவும், நல்லவைகளை ஸ்தாபிக்கவும் சிறந்த பரிகாரங்களாகும். தற்காலம் எல்லாத் தேசங்களிலும் ஸத்ஸங்க—பகவதாராதனை—பஜனை(Mass Prayer) நிரம்பவும் அவசியம். முற்காலத்தில் மஹரிஷிகள், அத்யாத்ம யோகிகள், மஹா அநுபவிகள், பக்த சிகாமணிகள் ஆபத்காலத்தில், துர்பிக்ஷ காலத்தில் அநுஷ்டித்த பல பரிகாரங்களில் சிலவற்றை அநுபவரீதியாக கீழ் வரைகின்றோம். அவைகளாவன:—

(1) ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே [ஹரே!
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண [க்ருஷ்ண ஹரே ஹரே ||

(2) ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் [ஸர்வ ஸம்பதாம்|
லோகாபிராமம் ஸ்ரீ ராமம் பூயோ பூயோ [நமாம்யஹம் ||
ஆர்த்தாநாம் ஆர்த்திஹந்தாரம் பீதாநாம் [பீதிநாசநம்|

த்விஷதாம் காலதண்டம் தம் ராமசந்த்ரம்
நமாம்யஹம்॥

(3) யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி
[பாரத]
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம்
ஸ்ருஜாம்யஹம்॥

(4) பரித்ராணய ஸாதூநாம் விநாசாய ச
[துஷ்க்ருதாம்]
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி
யுகே யுகே॥

(5 ரகுபதே ராகவ ராஜாராம் பதித பாவந
ஸீதாராம்॥

6 லோகா: ஸமஸ்தா ஸுகிநோ பவந்து॥

ருக் கமான அர்த்தம்.

2—வது நம்பர் சுலோகங்கள்:—ஸமஸ்த ஆபத்துகளையும் போக்கடிப்பவரும், ஸகல ஸம்பத்துகளையும் பொழிகின்றவரும், லோகங்களுக்கு ரஞ்ஜகராக இருப்பவருமான ஸ்ரீராமனை அடிக்கடி நான் நமஸ்கரிக்கின்றேன். எல்லாப் பீடைகளையும் நிர்மூலம் செய்கின்றவரும், எல்லாப் பயங்களையும் நாசம் செய்கின்றவரும், துஷ்டர்களுக்குக் கால தண்டமாக இருக்கின்றவருமான ஸ்ரீ ராமசந்திரனை நான் நமஸ்கரிக்கின்றேன்.

3—வது சுலோகம்:— எப்பொழுது எப்பொழுது தர்மத்துக்கு மலினமும், அதர்மத்துக்கு உயர்வும் ஏற்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் நான் எனது ஆத்மாவை சிருஷ்டித்துக்கொள்ளுகிறேன்.

4—வது சுலோகம்:— ஸாதுக்களை ரக்ஷிக்கவும், கொடியவர்களை நிர் மூலம் செய்யவும், தர்மங்களை செவ்வையாக நிலை நிறுத்தும் பொருட்டும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன்.

6—வது வாக்கியம்:— ஸகல லோகங்களும் க்ஷேமமாக இருக்கட்டும்.

ஆராதிக்கும் முறை. மேற்கண்டுள்ள ஆறு பிரார்த்தனைகளில் ஒன்றை மனோநிலையை அனுசரித்து பொறுக்கிக்கொள்ளவும். அப்பிரார்த்தனையை காலையிலும், மாலையிலும், மற்ற ஓழிந்த நேரத்திலும் பக்தர்கள் ஒரு ஸங்கமாகக் கூடி ஒரு பொது இடத்தில்) கோவில், மடம், ஆச்ரமம் முதலியன) அநுஷ்டிப்பது நலம். ஓவ்வொரு வேளையும் பிரார்த்தனை ஒரு முகூர்த்தம் ($1\frac{1}{2}$மணி நேரம்) நடைபெறுவது நிரம்பவும் நலம். பிரார்த்தனை காலத்தில் பக்தர்கள் முதுகெலும்பு வளையாது நிமிர்ந்து ஸுகாஸனமிட்டு உட்கார வேண்டும். உட்கார்ந்தவுடன் பரஸ்

பரம் பேச்சு பிரபஞ்ச விஷயமாக வேண்டாம் பகவானை உற்று நோக்கிய பார்வையுடன், ஏகாக்ர சித்தமுடன், சாந்தமுடன், விரிந்த உலக க்ஷேம பிரார்த்தனையுடன், பகவதர்ப்பண புத்தியுடன், அக்ஷர லோபமில்லாது, வாய் திறந்து, முன் பின்னாக உரைக்காது, ஒரே நாதத்துடன் பிரார்த்தனை நடைபெறவேண்டும்.

ஸங்கோஜம் ஸத்ஸங்க — பகவதாராதனை-பஜனை காலத்தில் சற்றும் கூடாது. ஸங்கோஜம் என்பது பகவத் விஷய அனுஷ்டானங்களில் ஒரு பெரிய தடையாகும் வியாபாரி, வக்கீல், தாஸி—இம்மூவர்களிடமும் ஸங்கோஜம் கொஞ்சமும் நெருங்காது. வியாபாரி கணீரெனச் சொன்னால் தான் வியாபாரம் நன்கு நடைபெறும். வக்கீல் நியாயத்தை ஸங்கோஜமின்றிக் கதறினால் தான் நியாயாதிபதி செவிசாய்ப்பார். தாஸி ஸங்கோஜத்தை தியஜித்தால் மாத்திரம் ஸம்பாத்யம் அடைவாள். இவர்களைத் தொடர்ந்து பக்தன் தனது குறைகளையும், துக்கங்களையும், பிரார்த்தனைகளையும், சோகங்களையும் பகவானிடம் நின்றிறும் ஸங்கோஜமின்றிக் கதறி முறையிடவேண்டும். அழுகிற குழந்தைக்குத் தான் தாய் பாலூட்டுவது வழக்கம். உள்ளிலும், வெளி

யிலும் கண்ணீர் விட்டுக் கதறும் பக்தனைப் பக வான் கனவிலும் கைவிடான்; காப்பான்; க்ஷேமங்களைப் பொழிவான். ஆகையினாலே பக்தர்கள் ஸத்ஸங்க-பிரார்த்தனை காலத்தில் ஸங்கோஜத்தை சற்றும் அவலம்பிக்கக்கூடாது.

ஜபம், தியானம், நிஷ்டை முதலான ஆந்தரீக நிலையில் உள்ள பக்தசிகாமணிகள் முடிந்த வரையில் உத்தம பக்தர்களை சேர்த்துக் கொண்டு ஒரு ஸங்கமாகக் கூடி ஆராதிப்பது நலம். மேலும் வேதவித்துகளும், பக்தசிகாமணிகளும் ஒருங்கு சேர்ந்து நிஷ்காமியமாக, நிர்வியாஜமாக, விரிந்த உலகினது க்ஷேமார்த்த பாவனையுடன், பகவதர்ப்பண புத்தியுடன் ஸௌகரியத்துக்குத் தகுந்தவாறு "துர்கா ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம்" முதலிய சில ஹோமங்களை வாரத்துக்கு ஒரு முறையாவது சுமார் ஒரு முகூர்த்த காலம் ஆபத்காலத்திலும் சரி நல் காலத்திலும் சரி செய்வது நலம்.

இதர தேசத்தினர்கள், இதர மதத்தினர்கள் தங்கள் தங்கள் மனோநிலையை அநுசரித்து ஆபத்துகள், துர்பிக்ஷம் முதலிய காலங்களில் சில பிரார்த்தனைகளை (Prayers, Hymns etc) அநுபவ நூல்களின்று பொறுக்கி

ஒரு ஸங்கமாகக் கூடி அனுஷ்டிக்கவேண்டுவது அத்தியாவசியமாகும். பஜனையும் செய்யலாம்.

கடவுள் ஒருவரே. மதம் ஒன்றே. உண்மையில், அநுபவத்தில் கடவுள் ஒருவர் தாம். எவரெவர்கள் எவ்வெவ்விதமாக வழிபடுகின்றனர்களோ அவரவர்களுக்கு அவ்வவ்விதம் பகவான் உருவமாகவும், அருவமாகவும் அவர்கள் முன்புதோன்றி அநுக்ரஹிக்கின்றனர். இவ்விதமே ஓரே மதமான ஆத்மாநுபவம் பல மதங்களாக பல மனோநிலைகளுக்கு ஒத்தவாறு பரிணமித்துள்ளது.

[குறிப்பு. தாஸனால் பிரசுரிக்கப்பட்டுள்ள "அத்யாத்ம யோகம்" நூலில் முதல் அத்யாயம் "ஸர்வ வல்லமையுள்ள கடவுள்" என்பதில் இவ்விஷயங்கள் (கடவுள் ஒருவரே—மதம் ஒன்றே)விரிவாக உரைக்கப்பட்டுள்ளன.]

மேலும் ஒரு கடவுள் தனது லீலாவிசேஷத்தினால் முதன் முதலில் இரு ஜாதிகளான ஆண் ஜாதி, பெண் ஜாதிகளை (இந்நூலின் 41—வது நம்பருள்ள குறிப்பைக் கவனிக்கவும்) ஜீவன்கள் அபிவிருத்தி நிமித்தம் சிருஷ்டித்துள்ளனர். பகுத்தறிவுடன் சற்று கண்

மூடி உள்நோக்கி உணர்வோமானால்" கடவுள் ஒருவர் தாம்; மதம் ஒன்று தான்; விரிந்த உலகுக்குக் காரணம் இரு ஜாதிகள் (ஆண்—பெண்) தாம்: ஆகையினால் நாம் யாவரும் கடவுளினது குழந்தைகள் தாம்; ஒரு பொருளினின்று (பரம் பொருள், பகவான்)தான் நாம் யாவரும் உற்பவித்தோம்: அந்த ஒன்றில் தான் நாம் யாவரும் போய் லயித்து ஆனந்தம் (இந்நூலின் 3-வது நம்பர், உனது சொந்த இடம்' என்பதைக் கவனிக்கவும்) அடையவேண்டும்" என்பது நன்கு புலப்படும். மேற்கூறியுள்ளபடி ஒரு கடவுளையும், ஒரு மதத்தையும், இரு ஜாதிகளையும் எல்லா தேசத்தினர்களும், எல்லா மதத்தினர்களும், எல்லா ஜாதியினர்களும், எல்லா உபாஸகர்களும் ஹ்ருதய தலைகயில் பதிப்பிக்கட்டும். பிறகு பலவிதப் போர்களும், கொடிய செய்கைகளும், துக்க—சோக—தாபங்களும் ஏற்படாது; அவைகள் ஒரு சமயம் காலபுருஷனது ஆஞ்ஞையினால் ஏற்பட்டாலும் மிக ஜல்தியில் சமனமடையும். ஆதவன் முன்பு பனி, இருள்முதலியன கிளம்பாது. பகவானது ஸன்னிதானத்தில், பகவத் பிரார்த்தனைகள் நடைபெறுமிடத்தில், ஸத்ஸங்க முன்பு யுத்தங்கள் நேரிடாது—கொடிய செய்கைகள் ஏற்படாது—தாபங்கள் உண்டாகாது.

## பிரார்த்தனை பலன்கள்.

[குறிப்பு. ஸத்ஸங்க பிரார்த்தனை, பஜனை ஜபம், தியானம், நிஷ்டை முதலியவைகளினது பலன்கள், சக்தி பரிணமிப்பு முதலிய பல விஷயங்கள் பற்றி நமது 'அத்யாத்மயோகம்' 'தாஸனது ஆத்மாநுபவம் முதல் பாகம் அத்யாத்ம யாத்திரை'—இவ்விரண்டு நூல்களிலும் விரிவாகவும், அநுபவ ரீதியுடனும் அறிவித்துள்ளோம். பக்தர்களினது அநுஸந்தானம், உத்ஸாகம், நிடம்பிக்கை, தைரியம் முதலியன நிமித்தம் சுருக்கமாக கீழ் வரைகின்றோம்]

(1) ஹரே ராம......: மேலே 'பரிகாரம்' எனும் பாராவில் கூறியுள்ள 'ஹரே ராம ஹரே ராம......' எனும் பிரார்த்தனையினது பலன்களைக்கவனிப்போம்;—

இந்த சுலோகம் 'கலிஸந்தரணம்' எனும் உபநிஷத்தில் உள்ளது. இவ்வுபநிஷத்து பிரும்மாவினால் நாரதருக்கு உரைக்கப்படுகிறது. பகவந்நாம உச்சாரணத்தினால் ஸகல பாபங்களும் நிர்மூலமாவதாயும், ஸகல க்ஷேமங்களும் ஏற்படுவதாகவும், 3½. கோடி ஆவர்த்திகள் இம்மந்திரத்தை ஜபிக்கவேண்டுமென்றும், எக்காலத்திலும் இதை ஜபிக்கலாமென்றும்

சதுர்முக பிரும்மா அறிவிக்கிறார். இம்மந்திரத்தின் ஹரி: ராம, க்ருஷ்ண (பகவானது) மூன்று நாமங்களினது மகிமைகள் பற்றி மஹர்ஷிகள் பறைசாற்றியுள்ளதின் சுருக்கம் பின்வருமாறு:-

ஹரி: நாமம். எவ்விதம் அக்நியானது யோஜனையில்லாது தொடப்பட்டாலும் எறிக்கின்றதோ, அவ்விதம் ஹரி: எனும் நாமம் கெட்ட சித்தமுள்ளவர்களினால் ஸ்மரணை செய்யப்பட்டாலும் அவர்களினது பாபங்களை நிர்மூலம் செய்கின்றது.

ராம நாமம். பிரும்ம ஸ்வரூபத்தினின்று யோகிகள் எவ்விதம் சைதன்யத்தையும், சாசுவத ஆனந்தத்தையும் அடைகின்றனர்களோ, அவ்வாறே ராம எனும் நாமம் அதை ஜபிப்பவர்களினது ஹ்ருதயத்தை ஆனந்தப்படுத்துகின்றது.

க்ருஷ்ண நாமம். இந்நாமத்தில் ஸத் ஸ்வரூபமும், ஆனந்த ஸ்வரூபமும் ஐக்யம் அடைந்துள்ளன. ஆகவே இந்நாமம் பிரணவப் பொருளைக் குறிப்பிடுவதாகும்.

2—வது முதல் 6—வது நம்பர்கள் முடிய கூறியுள்ள பிரார்த்தனைகளினது பலன்கள் பற்றி

மேற்கூறப் பட்டுள்ள ப்ரார்த்தனைகளினது அர்த்தத்தினின்று பக்தர்கள் உணரலாம்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உரைப்பது:— ஹரி:—எனும் நாமத்தை தாளத்துடன் உரைப்பவர்களினது ஹ்ருதயத்தில் உள்ள ஸகல மலங்களும் நிர்மூலம் அடையும். மஹாத்மா காந்தி உரைப்பது,—........பகவந் நாமத்தினது சக்தியை புத்தி சாதுர்யத்தினால் ஸ்தாபிக்க முடியாது. அஃது திடநம்பிக்கையினாலும், பக்தியினாலும் உணரப்படுகின்றது.

ஸ்வாமி சிவாநந்தர் உரைப்பது— பகவானது நாம மஹிமையும், சக்தியும் வர்ணிக்கப்பட முடியாதவைகள். உச்வாஸ-நிச்வாஸங்களான சுவாஸப் போக்கு—வரவுகளுடன் பகவானை ஸ்மரணம் செய். பகவானது நாம ஸ்மரணம் நிரம்பவும் லகுவானது—அதிவேகமுள்ளது—ராஜமார்க்கமுள்ளது—பகவானிடம் சேர்ப்பிப்பது—மோக்ஷத்தை அளிப்பது ஆகும்.

ஜப மஹிமை. உபநிஷத்துகள் கூறுவது :— பற்பல பிறப்புகளினது கர்மாக்களையும், பாபக் குவியல்களையும் பஸ்மீகரம் செய்வதால் ஜபம் எனப் பெரியோர்களினால் பெயரிடப்பட்டுள்ளது. அங்கும் இங்கும் எங்கும் ஸ்வபாவிக

மாக ஓடிக்கொண்டிருக்கின்ற மனதைப் பக வானது பாதகமலத்தில் சேர்ப்பிப்பது மந்திரம் என அறுடிகள் கூறுகின்றனர்கள்.

குலசேகர மஹாராஜா உரைப்பது:— பக வானை ஜபிக்கும் மந்திரம் பக்தர்களினது உள்-வெளி சத்ருக்களைக் கொல்லுகின்றது...... ஸம்ஸாரக்கடலினின்று விடுவிக்கின்றது.. ஸகல வித இருள்களையும் நாசம் செய்கின்றது ஸமஸ்த ஐச்வர்யங்களையும் வர்ஷிக்கின்றது. துக்க—சோக ஸர்ப்பங்களினால் தீண்டப்பட்ட வர்களை நன்கு ரக்ஷிக்கின்றது.

தியான பலன்கள்.

தேஜோபிந்து உபநிஷத் கூறுவது: தியானத் தினால் சுத்தமான மனமிருந்து (பிரும்மாகார) விருத்தி ஞானம் ஏற்படுகின்றது. பிறகு (பக வானைப் பற்றிய) ஓர் நிச்சய புத்தி உண்டாகின் றது.

நாரத பரிவ்ராஜக உபநிஷத். — ......பர மேச்வரனது ஸத்வ பாவத்தின் மீதுள்ள தியா னத்தினால் உலகினது மாயை மறைவை அடை கின்றது. தியான வாயிலாக பகவானை உணர் வதால் அவித்யையும், மற்ற கெட்டவைகளும் நிர்மூலமாகின்றன. உபத்திரவங்கள் நாசம்

அடைவதால் பிறப்பு—இறப்புகளினின்று விடு தலை(மோக்ஷம்) ஏற்படுகின்றது. பகவானைத்தியா னிப்பதால் ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களுக்கு அப்பாலுள்ள மூன்றுவது சரீரம் உண்டாகின் றது. ஸகல ஐசுவர்யங்களும் அநுபவிக்கப் படுகின்றன. அடையவேண்டிய எல்லாவற்றை யும் தியானி அடைகின்றுன்.

தியானபிந்து உபநிஷத்:— தியான யோகத் தினுல் பாபக்கூட்டம் பலயோஜனைகள் தூர முள்ள மலைத்தொடர்கள் போல் செய்யப்பட் டிருந்தாலும் நசிக்கின்றது. இவ்வைப் போல பாபக்குவியல்களை நிர்மூலம் செய்வதற்கு வேறென்றுலும் இயலாது......தியானயோகி நித்திரை காலத்தில் ஏற்படுகின்ற ஸ்வப்ன மத்தியில் தோற்றங்களினது தத்துவங்களையும், வேதங்களையும், உபதேசங்களையும் உணர்ந்து அநுபவிக்கின்றனன்.

அம்ருத நாத உபநிஷத்:—

தியான யோகி எக்காலத்திலும் பயம், கோபம், சோம்பல், அதி தூக்கம், அதி விழிப்பு, அதி போஜனம், அதிபட்டி முதலியவைகளை நிவர்த் திக்கவேண்டும். மேற்கண்டவைகளை தியஜித்து தினம் தவருது தியான யோகத்தை அநுஷ்டிப்

பதினால் சந்தேகமின்றி அத்யாத்ம ஞானம் தானாகவே மூன்றுமாதங்களில் ஏற்படுகின்றது; நான்கு மாதங்களில் தேவர்களைப் பார்க்கின்றான்; ஐந்து மாதங்களில் பிரும்ம நிஷ்டனாக ஆகின்றான்; ஆறு மாதங்களில் கைவல்யத்தை ஸத்தியமாக அடைகின்றான்.

ஸ்ரீ ராமலிங்கர் உரைப்பது. (பகவானே நின் பாதத் தியானம் உண்டானால்) நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற நிலனுண்டு பலனுமுண்டு-நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட நெறியுண்டு நிலையுமுண்டு...... டணியுண்டு பணியுமுண்டு உடையுண்டு கொடையுமுண்டு-உண்டுண்டு மகிழவே உணவுமுண்டு—சாந்தமுறு வுளமுண்டு வளமுமுண்டு தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றசெல்வங்கள் யாவுமுண்டு.........

நிஷ்டை பலன்கள்.

தேஜோபிந்து உபநிஷத்:—

ஒவ்வொருவனும் தனது ஆத்மாவையே அறிந்து உணரவேண்டும். எப்போதும் ஆத்ம மந்திரத்தை அப்பியசிக்கவேண்டும். (அத்யாத்ம நிஷ்டையில் உணரப்படுகின்ற) "நான் பிரும்மம்" எனும் மந்திரம் எல்லாப் பாபங்

களையும் க்ஷணத்தில் நாசம் செய்கின்றது; யம பயத்தையும், மாயையினது உபத்திரவங்களையும் வித்தியால பாவத்தையும், எண்ணங்களினால் ஏற்படுகின்ற உபத்திரவங்களையும், புத்தியினது வியாதியையும், சித்தத்தினது பந்தத்தையும், எல்லா வியாதிகளையும், எல்லா துக்கங்களையும், எல்லா ஆசைகளையும், கோபத்தினது சக்தியையும், சித்தத்தினது ஸங்கல்பங்களையும்,.....ஆத்ம அஞ்ஞானத்தையும் தக்ஷணமே நாசம் செய்கின்றது. இந்த "நான் பிரும்மம்" எனும் மந்திரம் வர்ணிக்கமுடியாத ஆனந்தத்தையும், அழிவில்லாத் தன்மையையும் கொடுக்கின்றது; அநாத்ம அஸுரர்களைக் கொல்லுகின்றது. இந்த "நான் பிரும்மம்" எனும் இடியானது அநாத்ம மலைகளைப் பொடி செய்கின்றது.....இந்த "நான் பிரும்மம்" எனும் மந்திரம் எல்லா ஜீவன்களையும் (பந்தங்களினின்று) விடுவிக்கின்றது; ஆத்ம ஞானத்தையும், பேரின்பத்தையும் பொழிகின்றது.

<u>பஜனையினது பலன்கள்</u>

[<u>குறிப்பு</u>. நமது "அத்யாத்ம யோகம்" நூலில் மோக்ஷவித்யையான <u>ஸங்கீதம்</u>, <u>பஜனையின் அவசியம்</u>—இவ்விரண்டு விஷயங்கள் பற்றி சுமார் 45. பக்கங்கள் கூறியுள்ளோம். அவ்விரு அத்யாயங்களிலும் 'ஸங்கீதத்தினது

பெருமை, உபயோகம், பஜனையின் அவசியம், கலியைத்தாண்டப் பஜனை ஓடம், இவைகளி னது பலன்கள், முதலியன பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகையினால் பஜனை பலன் கள் பற்றி இவ்விடம் சுருக்கமாக வரையப்பட் டுள்ளது.]

ஸங்கீத ரத்னாகரம் கூறுவது:—

ஸர்வஞ்ஞுனை பார்வதீ நாதன் (பகவத்விஷய) கீதத்தினல் ப்ரீதியை அடைகின்றார்; கோபிகா நாதன் ஸ்ரீகிருஷ்ணன் புல்லாங்குழல் நாதத் துக்கு வசமானார்; அதைப்பின் தொடர்ந்து பிரும்மா ஸாம கானம் செய்கின்றார்; ஸரஸ்வதீ தேவி வீணைவாத்தியத்தில் பிரியங்கொண்டாள். மற்றவர்களைப்பற்றி உரைப்பானேன்? யக்ஷர் கள், கந்தர்வர்கள், தேவர்கள், அஸுரர்கள், மானிடர்கள், தொட்டிலில் அழுதுகொண்டி ருக்கும் விஷய ஸுகத்தை அறியாப்பாலர்கள் முதலியவர்கள் அம்ருதம் போன்ற கீதத்தைக் கேட்டு அதி ஆனந்தத்தை அடைகின்றார்கள்.

சதுர கல்விநாதர் உரைப்பது:— தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) முதலான நான்குவித புருஷார்த்

தங்களுக்கும் ஸங்கீதம் ஒன்றே முக்கிய சாத னம் என்றால், அதன் மகாத்மியத்தை வர்ணிக்க எவர்க்குச் சக்தியுண்டு.

ஜான் மில்டன் உரைப்பது.—

ஸாகித்தியத்துடன் கூடிய கானத்தினது உதவியைக்கொண்டு மோக்ஷம் அடையலாம்; பட்டமரங்களை உணர்ச்சி பெறச் செய்யலாம்.

ஸ்ரீ கிருஷ்ணன் உரைப்பது:—

நாரதா! நான் வைகுண்டத்திலாவது யோகி யினது ஹ்ருதய கமலத்திலாவது ஸூர்யமண் டலத்திலாவது வஸிக்க வில்லை. எனது பக்தர் கள் எங்கு கூடி பஜனை செய்கின்றனர்களோ அங்கு வஸிக்கின்றேன்.

ஸூத ஸம்ஹிதையில் கூறியிருப்பது:- ஸங் கீதம் பாடுவதினால் யோகம் உண்டாகின்றது. அந்த யோகத்தினால் மங்கள (சிவ) கரமான ஐக்கியம் ஏற்படுகின்றது; எவன் ஸங்கீதத்தை அறிந்து உணர்ந்து யோகத்தை அப்பியசிக்கின் றானோ அவன் அதனால் பரமேச்வரனை அடை கின்றான்.

ஜேம்ஸ் மெஸ்டன் கூறுவது.—

ஸங்கீதத்தினால் தேக ஆரோக்யம் உண்டாகின் றது; வியாதிகள் நிர்மூலம் ஆகின்றன.

ஸெல்ஸஸ் உரைப்பது:—
சித்தஸ்வாதீனம் இல்லாமை, மனோவியாதி இவைகளை சொஸ்தம் செய்ய சல்லரி (ஜாலர்—Cymbal) வாத்தியத்தை உபயோகிக்கலாம். [பஜனையில் ஜாலர் உபயோகிக்கப்படுவதை பக்தர்கள் கவனிக்கவும்.]

டார்வின் உரைப்பது:—
சங்கீதம் மறதியைப் போக்கும் ஓர் ஆச்சரிய வஸ்து. அதன் மிகப்பலமான உணர்ச்சியை நம் முன்னோர்கள் நன்கு அறிந்து உணர்ந்து (நல்வழிகளில்) உபயோகித்திருக்கின்றனர்கள்.

தேஜோபிந்து உபநிஷத்து கூறுவது:—......
எது எல்லாம் பிரகாச வஸ்துக்களையும் பிரகாசிக்க செய்கின்றதோ அது நாதப் பிரும்மம் நிரம்பியதாக இருக்கின்றது...... அது ஆத்மா. அது அழிவில்லாத 'நான்'......ஆத்மா, அநாத்மா என்கிற யாதொரு வித்தியாஸ மில்லாது இருக்கிற அப்பொருள் நாதத்தினது முடிவில் ஒரு ஜ்யோதிஸ்ஸாக இருக்கிறது.

மிஸஸ் அன்னி பெஸண்டும், பிஷப் லெட்பீடரும்:—"எண்ணங்களினது தோற்றங்கள்" (Thought forms) எனும் கிரந்தத்தில் கூறுவது:—

பல மனிதர்கள் சேர்ந்து பாடப்படுகிற ஸங்கீத நாதத்திஞல் ஓர் வர்ணம் ஸ்வபாவமாகவே எப்போதும் உண்டாகின்றது. உதாரணமாக ஒரு நாதம் கிளம்பியதும் அதனிடமிருந்து ஒரு கொடி போன்ற வர்ணம் வெளிக்கிளம்பிப் பாய்வதைக் கொஞ்சம் தனது இந்திரியங்களை வசம் செய்திருப்பவர்கள் யாவரும் அறியலாம். மேலும் நாதமானது ஓர் வர்ணத்தையும், அதன் வாயிலாக ஓர் பிம்பத்தையும் வெளியிடுகின்றது. ஒவ்வொரு ஸங்கீதப் பாட்டும் அதற்குப் பின்ஞல் ஒருவித ஸ்வபாவ உணர்ச்சியைக்கொண்டு போவது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நன்ருக சிலர்களினது கண்களிஞல் பார்க்கக் கூடியதாக இருக்கிறது...... அவ்வித பிம்பங்கள் அதிஉணர்ச்சியையும், தெளிவையும் நன்ருகக் கொடுக்கின்றன. அவைகள் பலவிதங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் அதன் ஸ்வபாவத்தை வெளிப்படுத்துகின்றது. மேலும் பாட்டை ஸாஹித்யம் செய்துள்ளவரது உணர்ச்சியை — எவ்விதம் ஒருவனது கையெழுத்தைக் கொண்டு அவனது குணங்கள் எண்ணங்கள் முதலியவைகளை ஊகிக்கலாமோ அவ்விதம் காண்பிக்கின்றது...... இத்தோற்றங்கள் சுமார் இரண்டு மணி நேரம் வரையில் ஒருவித பிரகாச அலைகள் (Vibrations) உள்ள

அசைவு களைக் காண்பிக்கின்றன. அவைகள் ஒவ்வொரு பக்கத்திலும் எண்ணங்களினது அலைகள் போலப் போகின்றன. கானம் நல்ல தாக இருப்பின் அவ்வுணர்ச்சி அலைகள் ஒவ் வொருவர் மீதும் தாக்கிக்கொண்டு போகின் றன. இவ்விதம் ஸங்கீதம் இருப்பதினுல் யாவ ரும் —ஸங்கீதம் பயின்றவர்கள் தாங்கள் அறிந்த அறியாத எல்லா மனிதர்களிடமும் ஓர் ஸம திருஷ்டியுடன் இருப்பதினுல் — ஸங்கீத வித் வான்களுக்குக் கடமைப்பட்டிருக்கின்றனர்கள்.

மகரிஷி ரவீந்திர நாத்தாகூர் கீதாஞ்ஜலியில் உரைப்பதாவது:—

உனது ஸங்கீதப் பிரகாசம் உலகை விளங் கச் செய்கின்றது. உனது கீத ச்வாஸம் ஆகாய மெங்கும் பாவுகின்றது. உனது கானத்தினது புண்ய ப்ரவாஹம் எல்லா இடையூறுகளையும் பொடி செய்துகொண்டு ஓடுகின்றது.

யோக கவி ஷேக்ஸ்பியர் கூறுவது:—

எவன் ஸங்கீதம் அறியானே அதன் இன் பச் சுவையை உணரானே அவன் ராஜத்ரோகங் களுக்கும், கெடுதலான சூழ்ச்சிகளுக்கும் பாத் திரனுவான். மேலும் அவனது ஆவி இருளைப் போல் மந்தமாகவும், அவனது உணர்ச்சி

கொடிய இரவைப் போலும் இருக்கின்றது. அவன் நம்பத் தகுந்தவனல்லன். உணருங்கள் ஸங்கீதத்தை.

மேலும் மஹான் தியாகப் பிரும்மம் 'பஜனை ஸேயவே' எனும் கீர்த்தனத்தில் பஜனையினது பெருமை, அதன் அவசியம் முதலியவைகளை நன்கு பாடியிருப்பதும்—மஹா அநுபவி பட்டிணம் ஸுப்ரம்மண்ய அய்யர் தனது "இங்க தய ராலே..." எனும் கீர்த்தனத்தில் "இன்னும் தயவு வரவில்லையா, ஹே, வெங்கடேச்வரா! என் மீது ஏன் இவ்வளவு பாராமுகம்? துஷ்டர்களைத் தண்டிப்போனே! எக்காலும் உனது கதைகளை சிரவணம் செய்தும், ஆனந்தமாகப் பஜனை செய்து கொண்டும் இருக்கின்ற எனது மனத்துயரைத் தீர்க்கவும், என்னைக் கார்க்கவும் எவ்வளவோ உன்னைக் கானத்தினால் புகழ்ந்து கொண்டிருக்க, ஏன் பிடிவாதம் செய்கின்றாய்? ...." எனக்கவலையுடன் கதறியிருப்பதும்—கூட துக்காராம், சைதன்யர், ராம்ப்ரஸாத், ஸ்ரீதர விட்டலர், புரந்தரதாஸ், கனகதாஸர், தாது, மீராபாய், சக்குபாய், முதலான பக்த சிகாமணிகள் பஜனை வாயிலாகப் பகவானது பாதகமலங்களைத் தங்கள் கூடுள்ள போதே கட்டிப்பிடித்துள்ளதையும் — அவ்விதமே மஹம்மதீய

ஸூபிகள் பகவான் மீது பலவகையாகப் பாடி அநுபவித்திருப்பதும் — மேல் நாடுகளில் அதி தீவிரமாக முற்காலத்தில் பல யோகாநுபவி கள் பஜனையில் ஈடுபட்டுள்ளதையும் — கவனிக் கப் பஜனையினது பெருமை, பஜனையினது அவசியம் முதலியன நன்கு புலப்படும்.

சுருக்கமாக உரைக்கின், மேற்கண்டுள்ள படி ஸத்ஸங்க — பகவதாராதனை — பிரார்த் தனை — பஜனை வாயிலாகப் பரிணமிக்கும் ஆவி யினது அலைகள் — பரிணமிக்கும் இடங்களில் உள்ள — ஸகல ஜீவன்களையும் நிஞ்சிற்றும் சந்தேகமின்றி பரிசுத்தம் செய்யு; சரீரமனோ வியாதிகளை நிர்மூலம் செய்யும்; பகவத் பக் தியைப் பெருக்கும்; ஸகல இஹ—பர க்ஷேமங் களையும் வர்ஷிக்கும்; பிரம்ம—ஆத்ம—ஐக்யத் தில் கலப்பிக்கும்.

மேலும், பக்தசிகாமணிகள் அடியிற்கண்ட வைகளை ஹ்ருதய பூமியில் பதிப்பிக்கட்டும்:—

(1) மனம் உருகிய ஆந்தரீக — பஹிர் ஆராதனைகள், பிரார்த்தனைகள் வாயிலாக எல்லா ஸித்திகளும் அழையா விருந்தினங்களாக ஜீவ பாத்ரீகர்களை நெருங்குகின்றன

(2) ஆழ்ந்த புத்தி, அழகிய பேச்சு, சிறந்த முயற்சி, பிரபல பிரசாரம் முதலியவைகளினால் பகவானது பாத கமலத்தைக் கெட்டியாகப் பிடிக்க முடியாது. பக்தியினால் பகவான் பக்தர்களுக்கு வசமாகின்றனர். பிரத்யக்ஷமாகப் பக்தர்கள் முன்பு ஆவிர்ப்பவிக்கின்றனர்.

(3) பிரார்த்தனை ஆவியிதுன அலைகள் அணுக்குண்டுகளைப் பார்க்கிலும் பல மடங்கு சக்திவாய்ந்துள்ளவைகள். மூர்த்தியலைவகள் ஜீவன்களைச் சீர்திருத்தும்; நற்போதனைகளை ஊட்டும்; க்ஷேமத்தைப் பொழியும். பிந்தியவைகள் ஜீவன்களை சிதற அடிக்கும்; துக்கசோகங்களைப் பொழியும்; அழிவை வர்ஷிக்கும்.

பகவானே! பரம்பொருளே! ஸகல ஜீவன்களும் உனது குழந்தைகள். எல்லாம் உனது லீலா சிருஷ்டியினால் உன்னிடமிருந்தே கிளம்பின. உன்னிடமே லயமடையப் போகின்றன. கொடிய கர்ம விசேஷத்தினாலோ அல்லது பாப ஸமூஹத்தினாலோ அல்லது கொடிய கலிகால பிரபாவத்தினாலோ அல்லது துஸ்ஸங்கத்தினாலோ—உனது பாதகமல பக்திக் குறைவினாலோ அல்லது மாயை ஆவரணங்களினால் போர்க்கப்பட்டோ அல்லது இவைகள் எல்லாவற்றினாலுமோ சென்ற 1914—வது ஆண்டுமுதல்

ஜீவன்கள் பெரும்பாலும் தடுமாறுகின்றன; நல்லவைகளைத் தியஜிக்கின்றன; கெட்டவைகளை கைக்கொள்ளுகின்றன; தலை கீழாக எல்லாவைகளையும் பார்க்கின்றன; செய்கின்றன; அழிகின்றன. பகவானே! ஸமஸ்த ஜீவன்களுக்கும் நல்ல புத்தியை ஊட்டு; எல்லாத்தேசங்களும் ராம ராஜ்யமாக, குஹராஜ்யமாக, தர்ம ராஜ்யமாக அருள்புரி.

சோதர—சோதரிகளே! விரிந்த உலக க்ஷேமம் பற்றி மேலே சற்றுவிரிவாகபல விஷயங்கள் தாஸன் பரிதபித்து வரைந்துள்ளதை சாந்தமுடன் கவனிக்கவும். ஒரு விஷயம் சுருக்கமாக உரைத்து இந்த "2வது பிரார்த்தனை லோக க்ஷேமத்தை" முடிக்கின்றேன். சுமார் 35. வருஷங்கள் முன்பு ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் ஆபத்காலத்தில் ஸத்ஸங்கமுமாகக்கூடி பகவானை ஆபத் நிவாரணார்த்தம், லோக க்ஷேமார்த்தம் ஜனங்கள் பிரார்த்தித்துள்ளதையும், ஆபத்துகள் நிர்மூலமானதையும், க்ஷேமங்கள் உண்டானதையும் பல உத்தமர்கள் அறிவார்கள். பல வருஷகாலமாக பகவத் விஷயங்களை "மூட நம்பிக்கைகள்" (Superstitions) எனப் பலர் பலவிதமாகப் பறை சாற்றுவதையும் பலர் அறிவார்கள்.

காரணம் யாதெனில் சென்ற 1914—வது ஆண்டு சமாரில் விதைக்கப்பட்ட நாஸ்திக—விஷம்—விதை— (நாளடைவில்) 1936—வது ஆண்டு சமாரில் ஓர் பெரிய விருக்ஷமாகி—1942-வது ஆண்டு சமாரில் புஷ்பித்து காய்த்து பழுத்து—1947-வது ஆண்டு சமார் தொடங்கி விஷப்பழங்களை எல்லாத் தேசங்களிலும், எல்லா ஜீவன்கள் மீதும் சொரிந்து வருகின்றது.

குறிப்பு. 1914—வது வருஷத்தில் முதலாவது உலகயுத்த ஆரம்பம். 1936வது வருஷத்தில் இரண்டாவது உலக யுத்த ஆரம்பம் 1942—வது வருஷத்தில் 2—வது யுத்தம் கிரம்பவும் கடுமையாக இருந்த கட்டம். 1946—வது ஆண்டில் 2—வது யுத்தம் ஒருவாறு சமனமானாலும் 1947—வதிலிருந்து மூன்றுவது உலக யுத்தத்துக்கு பெரும்பாலும் எல்லாத்தேசங்களும் வெடிக்குண்டு முதலியவைகளை உற்பத்தி செய்து வருகின்றன. 1914-வது ஆண்டில் ஆரம்பித்த யுத்த ஆவி எல்லாத் தேசங்களிலும் மேன்மேலும் ஜீவன்களை சமார் 35 வருஷகாலமாக பல விதமாக வாட்டி வருகின்றதை நாம் யாவரும் கண்கூடாகப்பார்க்கின்றோம்; தபிக்கின்றோம். மேற்கண்ட இரு யுத்தங்களும் ஒருவாறு

முடிந்தவுடன் எல்லாத் தேசங்களிலும் ஆவலுடன் ஜீவன்கள் க்ஷேம மேகங்களை எதிர்பார்த்தன், எல்லாம் கனவாக முடிந்தன, உள் நாடுகளில் பலவித இஸிம்ஸ் (கக்ஷிகள்) தோன்றி க்ஷேம மேகங்களை ஜீவன்கள் மீது பொழியவிடாது மறைத்தன; மறைத்து வருகின்றன. ஸர்வ வியாபக பகவான் மூன்றுவது—உலக—மஹா யுத்தம் நேரிடாது அநுக்ரஹிக்கப் பிரார்த்திப்போமாக.

நாஸ்தீக—விஷ—விருக்ஷத்தை ஸர்வ சக்தி. வாய்ந்த பகவான் வேருடன் வீழ்த்தட்டும். ஜீவன்களினது பலவித தாபங்களை நிர்மூலிக்கட்டும். எல்லா ஜீவன்களும் எல்லாத் தேசங்களிலும் ஸத்ஸங்க-பகவதாராதனை வாயிலாக பகவானிடம் குறைகளை முறையிடட்டும்; பகவானைப் போற்றட்டும். பகவான் ஸகல ஜீவன்கள் மீதும் கருணைமேகத்தை வர்ஷிக்கட்டும் பகவானது கருணையைபெற ஜீவன்கள் ஐகாக்ரியம், தியானம், நிஷ்டை முதலிய உத்தம விஷயங்களைக் கடைப்பிடிக்கட்டும். எல்லா ஜீவன்களும் ஸோதரபாவத்துடன் வாழட்டும்.

"நான் ராஜ்யத்தை விரும்பவில்லை. ஸ்வர்க்கத்தை விரும்பவில்லை. மறு பிறவி இல்லாமையை (மோக்ஷத்தை) விரும்பவில்லை. (பலவித) துக்கங்களினால் தபிக்கின்ற (ஸமஸ்த) ஜீவன்களினது பீடைகளின் நாசத்தை விரும்புகின்றேன்"

"லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து"

## 3—வது பிரார்த்தனை.

(முடிவுரை)

ஸோதர-ஸோதரிகளே! ஸமஸ்த ஜீவன்களும் இச்சரீரத்தை துறக்கு முன்பே அத்வைதப்பொருளின் கண் ஆனந்திக்க வேண்டும். அதற்கு அநுகுணமாக ஜபம், தியானம், நிஷ்டை முதலிய ஆந்தரீக ஆராதனைகளையும், பூஜை, அர்ச்சனை, ஸத்ஸங்க—பிரார்த்தனை—பஜனை முதலிய பஹிர் விஷயங்

களையும் பின்பற்றட்டும். பிரபஞ்ச காரியங்களை முற்றிலும் பகவதர்ப்பண மாக, சாந்தமாக அநுஷ்டிக்கட்டும். எல்லா ஸோதர—ஸோதரிகளும் பல தேசங்களாகப் பரிணமித்துள்ள ஓங் கார நகரில் ஓர் குடும்பமாக ஸோதர பாவத்துடன் வாழட்டும். விரிந்த உலக க்ஷேமத்தை தேடட்டும்.

பரம் பொருளினது ஆஞ்ஞைப் படி பகவானது பாதகமலத்திலும், பக்த சிகாமணிகளினது பாத தூளி களிலும் ஹ்ருதய பூர்வகமாக அர்ப் பித்து "தாஸனது ஆத்மாநுபவம்"— 2—வது பாகம் "அத்யாத்மதர்மத்தை" ஒருவாறு அச்சிட்டுப் பக்த உலகின் கண் தாஸன் வெளிக்கொண்டு வந் துள்ளனன். இச்சிறிய நூல் சித்தத் தைச் சிதறவிடாது வாசிப்போர்களுக் கும், சிரவணம் செய்வோர்களுக்கும், பிற ஜீவன்களுக்கு அறிவிப்போர் களுக்கும், இதில் கூறப்பட்டுள்ள

விஷயங்களை மனனம்செய்வோர்களுக்கும், அநுஷ்டானத்தில் ஈடுபட அநுதபிப்போர்களுக்கும், அநுபவ மார்க்கத்தில் யாத்திரை செய்பவர்களுக்கும் ஸகல விதங்களிலும் இஹ—பர க்ஷேமங்களை வர்ஷிக்கட்டும். ஜீவயாத்திரையின் கண் ஆழ்ந்த சாந்தத்தைப் பொழியட்டும்.

இவ்வாறு ஓங்காரப் பொருளை தாஸன் ஹ்ருதய பூர்வகமாக பிரார்த்திக்கின்றனன். தாஸனது மனமுருகிய பிரார்த்தனையில் எல்லா ஜீவன்களும் கலந்து கொள்ளவும் தாஸன் பிரார்த்திக்கின்றனன்.

||லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து||
||ஸர்வம் ஓம்—தத்—ஸத் பிரும்மார்ப்பணம் அஸ்து||
||ஓம்—தத்—ஸத் பிரும்மணே நம:||
||ஓம் ஸ்ரீ குரவே நம:||
||ஓம் சாந்தி:| ஓம் சாந்தி:| ஓம் சாந்தி:||

குகதாஸ்.